வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 188 | பக்கங்கள் : 20

MARUTHI MONEY EXCHANGE
மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



07
இஸ்லாமிய நாடுகளில் பரவும் இந்திய எதிர்ப்பு கண்டனங்கள்



08
எவரும் விரும்பாத ஜனாதிபதி எவரும் தெரிவுசெய்யாத பிரதமர்



10
அரசியல் துறவறத்துக்கு கோட்டா தயார்



16
வரலாற்றில் ஒரு மகாராணி

# இலங்கை சிறுவர்களுக்காக நிதியுதவி கோரும் யுனிசெவ்

## 25.3 மில்லியன் டொலர் வழங்குமாறு சர்வதேச சமூகத்திடம் விண்ணப்பம்

unicef

கொழும்பு, ஜூன். 12

எதிர்வரும் 7 மாதங்களுக்குள் இலங்கையிலுள்ள சிறார்களுக்கு அதிகரிக்கும் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெவ்), சர்வதேச சமூகத்தினரிடம் 25.3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை கோரியுள்ளது.

19

# அமைச்சராக நாளை காலை பதவியேற்கின்றார் தம்மிக்க

கொழும்பு, ஜூன். 12

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினராக பெயரிடப்பட்டுள்ள தம்மிக்க பெரேரா, நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சராக பதவியேற்கவுள்ளார்.

அவருக்கு தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது.

திங்கள் மாலை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத் திலும் அவர் பங்கேற்பார் என எதிர்

19

# அரசியல் மாற்றம் ஏற்பட்டாலே பொருளாதார பிரச்னை தீரும்!

## யாழில் கூறினார் குமார் குணரட்னம்

கொழும்பு, ஜூன். 12

மக்களின் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வெளியில் எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும் என முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் குமார் குணரட்னம் தெரிவித்தார்.

19

# ரஞ்சனுக்கு பெரும் அநீதி மன்னிப்பு வழங்குங்கள்!

## சரத் பொன்சேகா கோரிக்கை!

கொழும்பு, ஜூன். 12

”ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலையிலுள்ள அவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கவேண்டும்” - என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம். பி. கோரிக்கை

19

# எரிபொருள் நுகர்வோருக்கு பதிவு

கொழும்பு, ஜூன். 12

எதிர்காலத்தில் போக்குவரத்து மற்றும் கைத்தொழில் துறைகளுக்கு எரிபொருளை வழங்கும் வகையில் ரேஷன் முறையை அறிமுகப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அனைத்து எரி

19

# உடைகிறது பெரமுன?

## ‘குடும்பவாதத்தை ஒழிப்போம்’ என்பது கருப்பொருளாம்!

கொழும்பு, ஜூன். 12

பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஊடகத்துறை அமைச்சரான டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய கட்சி ஒன்று உதயமாகவுள்ளதாக தென்னிலங்கைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:

இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவை டலஸ் அழகப்பெரும மற்றும் பாராளு மன்ற உறுப்பினர்கள் குழுவினர் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பில் டலஸ் அழகப்பெரும வுடன் பதின்மூன்று பாராளு மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் கலந்துரையாடலில் கலந்து கொண்டதாக தேர்தல் ஆணைக் குழுவின் வட்டா

19



# கைவிடப்பட்ட அரச காணிகளில் இராணுவத்தினரால் விவசாயம்!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 12

கைவிடப்பட்ட அரச காணிகளில் விவசாயம் செய்யும் புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே தெரிவித்துள்ளார்.

19

# உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த தயாராகிறது தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, ஜூன். 12

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்துவதற்கான ஆயத்தங்களைத்தேர்தல் ஆணைக்குழு முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதியுடன் தொடங்கும் ஆறு மாத காலத்துக்குள் தேர்தல் நடத்தப்பட உள்ளது. சட்டத்தின் பிரகாரம் இவ்வாறு தேர்தல் நடத்தப்படவேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் ஓராண்டு காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஓராண்டு காலம் பூர்த்தியாகி ஆறு மாதங்களில் தேர்தல் நடத்தப்பட வேண்டிய அவசியம் தேர்தல் ஆணைக்குழுவிற்குக் காணப்படுகின்றது.

இதன்படி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எந்தக் காரணத்திற்காகவும் ஒத்தி வைக்கப்படாது என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

(அ)

# இப்படியும் நடக்கிறது...!

நடிகர் பார்த்திபனும் வடிவேலுவும் ஒரு படத்தில் நடித்தால் அவர்கள் இருவரின் கொமெடியையும் பார்த்து, சிரிப்பை அடக்கமுடியாமல் இருக்கும்.

வடிவேலுவைப் பார்த்து பார்த்திபன் கேட்பார், "எல்லாரும் உங்களை முட்டாள்னு சொல்றாங்களே, நீங்க முட்டாளா இல்லையான்னு தெரிஞ்சிக்க ஒரு கேள்வி கேக்குறேன், அதுக்கு நீங்க சரியான பதில் சொல்லனும்" என்பார்.

வடிவேலுவும் ஒப்புக்கொண்டதும், "வெறும் வயித்துல உங்களால எத்தனை சப்பாத்தி சாப்பிட முடியும்"? என்று கேட்பார்.

அதற்கு வடிவேலு, "ஏழு" என்பார். இதைக் கேட்ட பார்த்திபன், "ஏம்ப்பா, முதல் சப்பாத்தியைச் சாப்புட்டதும் உங்க வயிறு எப்படி வெறும் வயிறா இருக்க முடியும்? வெறும் வயித்துல உங்களால எப்படிப்பா ஏழு சப்பாத்தி சாப்புட முடியும்?" என்று கேள்வி கேட்டு கலாய்ப்பார்.

வடிவேலுவும், "சே! பாயிண்டா தான்யா சொல்லிருக்கான். இது நமக்குத் தோணாமப் போச்சே? பரவால்லை... நாமளும் இதே மாதிரி யாரையாச்சும் கேள்வி கேட்டு கலாய்க்கனும்" என்று முடிவு பண்ணிவிடுவார்.

வீட்டுக்குப் போன முதல் வேலையா வடிவேலு, அவர் மனைவி கிட்ட அதே கேள்வியைக் கேட்பார். "உன்னால வெறும் வயித்துல எத்தனை சப்பாத்தி சாப்புட முடியும்?" அதுக்கு அந்தம்மா சொல்லும், "அஞ்சு". இதை கேட்ட வடிவேலு, "சே... நீ மட்டும் ஏழுன்னு பதில் சொல்லிருந்தேன்னு வை. உன்னை செமத்தியா கலாய்ச்சிருப்பேன்" என்பார்.

இது எந்தப் படத்தில் வந்தது என்று கேட்டுவிடாதீர்கள்.

நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

அட, சொல்லாமலே ஊருக்கு வந்திருக்கிறாரே என்ற சந்தோசம். கனடாவில் வாழும் அந்த நண்பர் பல்துறை கலைஞர், ஊடகர், எழுத்தாளர், சிங்கப்பூர் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந்தவர்.

அவருடன் கதைத்துக்கொண்டிருந்தாலே நகைச்சுவைகளால் சிரிக்க வைத்துக்கொண்டே இருப்பார்.

'எப்போது வந்தீர்கள்' என்று கேட்டேன். 'நேற்றுத்தான் கொழும்பு வந்தேன், நாளை யாழ்ப்பாணம் வருகின்றேன். ஒரு வாரத்தில் கனடா திரும்பவேண்டும்' என்றார்.

'இத்தனை மைல்கள் தூரத்திலிருந்து ஊருக்கு வந்திருக்கிறீர்கள். அது என்ன ஒருவாரத்தில் போகவேண்டும் என்கின்றீர்கள்?' என்று கேட்டேன்.

'அதை ஏன் அண்ணே கேட்கின்றீர்கள். நான் வெளிக்கிட்டு ஒருமாதமாகிவிட்டது' என்றார்.

எனக்கு பொல்லாத கோபம்.

'ஒரு மாதம் இங்கே நின்றுகொண்டு என்னோடு தொடர்பில்லாமல் இருந்திருக்கிறீரே' என்று கடிந்துகொண்டேன்.

அப்போதுதான் சொன்னார், 'இல்லை அண்ணே. ஒரு மாதமாக சென்னையில் இருந்தனான். இண்டைக்குத் தான் கொழும்பு வந்தனான்' என்றார்.

'சென்னையில் அப்படி என்ன ஒருமாதம் வேலை?' என்று கேட்டேன்.

'அதை ஏன் அண்ணே கேட்கிறீர்கள், சென்னையிலை இருந்து இலங்கைக்கு போகப்போகின்றேன் என்றதும் நண்பர்கள் விடமாட்டேன் என்றிட்டார்கள். அங்கே ஒரு வேளை சோற்றுக்குக்கூட மக்கள் வழியில்லாமல் இருக்கின்றார்கள். போராட்டங்களால் வீதிகளில் மக்கள் நடமாடக்கூட முடிய வில்லை என்று, இங்கே வர விடமாட்டோம் என்று விட்டார்கள்' என்றார்.

அதனால் அங்கே அவசியமில்லாமல் தங்கவேண்டிவந்து விட்டது என்றவர், இங்கே வந்த பின்னர்தான் நிலைமை தெரிகின்றது என்றார்.

யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது, இலங்கையில் இராணுவத்தினர் தமிழ்ப் பெண்களை கற்பழிக்கின்றார்கள். தினமும் சுட்டுக்கொன்று குவிக்கின்றார்கள் என்று கூறிக்கொண்டிருந்தவர்கள்தானே? என்றேன் நான்.

ஆங்காங்கே படையினர் பெண்கள் மீது பாலியல் வன்முறைகளை செய்யவில்லை என்பதல்ல. ஆனால் தமிழக ஊடகங்களோ, பெண்களே வீதியில் நடமாடமுடியாது என்பதுபோலவே செய்திகளை வெளியிட்டுக்கொண்டிருந்தன.

அதுபோலத்தான் இப்போதும் என்றேன் நான்.

'அதிகம் ஏன், நேற்றுக் காலை சண் ரிவி செய்தியில் இலங்கையில் மக்கள் ஒருவேளை உணவு மாத்திரமே உண்கின்றார்கள் என்றுதானே ஒளிபரப்பினார்கள்' என்றார் அவர்.

அதற்காக இலங்கையில் ஒரு வேளை உணவு உண்கின்ற மக்கள் இல்லை என்பதல்ல. அப்படியெனில், ஒரு வேளை உணவு மட்டுமே உண்ணும் பலகோடி பேர் இந்தியாவிலும் இருப்பார்கள்.

யுத்தம் நடந்த காலங்களில்தான் சமூக வலைத்தளங்களோ தொலைத் தொடர்பு வசதிகளோ இருக்கவில்லை. ஆனால், இப்போதும் அப்படியல்லவே!

- ஊர்க்குருவி

# மருந்து தட்டுப்பாடு அதி உச்ச நிலையில் வாள்வெட்டு, விபத்துக்களை தவிருங்கள்!

## வைத்தியர் வினோதன் கோரிக்கை



மன்னார், ஜூன். 12

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக மருத்துவத்துறையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் பல முக்கியமான மருந்து வகைகள் கையிருப்பில் இல்லை. இதனால் தேவையில்லாமல் வாள் வெட்டுச் சம்பவங்கள், வீதி விபத்தில் காயமடைதல் குளங்களில் மூழ்குதல் போன்ற அவசியமற்ற விடயங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தர்மராஜா வினோதன் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேவையில்லாமல் வாள் வெட்டுச் சம்பவங்கள், வீதி விபத்தில் காயமடைதல், குளங்களில் மூழ்குதல் போன்ற அவசியமற்ற விடயங்களில் காயமடைந்து வருபவர்களுக்கு சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளும்போது உண்மையான தேவையுடைய நோயாளிகளுக்கு மருத்துவ சேவை செய்ய முடியாமல் போகிறது.

அத்துடன் சுப்பர் பெற்றோல் இல்லாத காரணத்தால் மன்னார் மாவட்டத்தில் 5 அம்புலன்ஸ்களுக்கு மேல் இயங்காமல் உள்ளன.

வீதி விபத்துக்கள், வாள் வெட்டுக் காயங்கள் போன்ற பலவிதமான அவசர மருத்துவ சேவைக்கு வருபவர்கள் காத்திருக்கவேண்டியுள்ளதுடன் உயிரிழப்புகள் ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறது.

அண்மைய நொச்சிக்குளம் சம்பவமும்கூட மிகவும் கவலைக்குரிய விடயமே.

எனவே தற்போதைய நாட்டினதும் ஒவ்வொரு குடும்பத்தின் நெருக்கடியான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு களியாட்டங்கள், வாள்வெட்டுச் சம்பவங்கள், வீதி விபத்துக்கள் போன்ற மனித குலத்துக்கு தேவையில்லாத செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளவேண்டும்-என்றார். (அ)

# கல்வி நடவடிக்கை ஸ்தம்பிக்கலாம்!

கொழும்பு, ஜூன். 12

எதிர்காலத்தில் பயிற்சிப் புத்தகங்களுக்கும், அச்சிட்ட புத்தகங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிப் புத்தகங்கள், பாடசாலைப் பைகள், காலணிகள் உள்ளிட்ட உபகரணங்களின் விலை கிட்டத்தட்ட இருமடங்காக உயர்ந்துள்ளது.

நாட்டில் கடதாசி தட்டுப்பாடு நிலவி வருவதால், பயிற்சிப் புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, பெற்றோர்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

பல வகையான பயிற்சிப் புத்தகங்களின் மாவட்ட பிரதிநிதிகள் தங்களிடம் பயிற்சிப் புத்தகங்கள் விற்பனைக்கு இல்லை என்றும், புதிதாக கொள்வனவு செய்வதற்காக முன்பதிவு செய்யப்பட்ட புத்தகங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

50 ரூபாயாக இருந்த 80 பக்க பயிற்சிப் புத்தகத்தின் விலை தற்போது 110 ரூபாயாகவும், 70 ரூபாயாக இருந்த 120 பக்க புத்தகத்தின் விலை 130 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

இந்தப் பயிற்சிப் புத்தகங்களின் விலை புத்தகத்தின் வகையைப் பொறுத்து மாறுபடும், மேலும் சில புத்தகங்களின் விலை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். ரூ.3 முதல் ரூ.5 வரை இருந்த நகல் பெறுவதற்கான கட்டணம் தற்போது ரூ.12 முதல் ரூ.12 ஆக அதிகரித்துள்ளது.

விலைவாசி உயர்வு, காகிதம் உள்ளிட்ட மூலப்பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக உடற்பயிற்சி புத்தகங்கள் மற்றும் அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது, மேலும் பல புத்தக வெளியீட்டாளர்கள் காகித பற்றாக்குறையால் புதிய புத்தகங்களை அச்சிடுவதை நிறுத்திவிட்டனர். (அ)

## எதிர்வரும் 14ஆம் திகதி மதுபானசாலைகள் மூடல்

கொழும்பு, ஜூன். 12

ஜூன் 14 ஆம் திகதி பொசன் போயா தினம் என்பதால் அன்று மதுபானசாலைகள், இறைச்சி கடைகள், சூதாட்ட விடுதிகள், இரவு விடுதிகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளுக்குள் உள்ள மதுபானக் கடைகளை மூட உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

## ஜூன் 13 முதல் 19 வரை மின்வெட்டுக்கு அனுமதி

கொழும்பு, ஜூன். 12

எதிர்வரும் 13 முதல் 19 ஆம் திகதி வரை மின்வெட்டுக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி 13 மற்றும் 15 முதல் 18 வரை 2 மணி 15 நிமிடங்கள் மின்சாரம் தடைப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை ஜூன் 14 மற்றும் 19 ஆம் திகதிகளில் 1 மணி நேரம் மின்சாரம் தடைப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# நாட்டை வந்தடைந்த எரிவாயு கப்பலுக்கு இதுவரை கட்டணம் செலுத்தப்படவில்லை!

கொழும்பு, ஜூன். 12

3,900 மெற்றிக் தொன் எரிவாயுடன் நாட்டை வந்தடைந்துள்ள கப்பலுக்கு, செலுத்தப்படவேண்டிய 2.5 மில்லியன் டொலர் கொடுப்பனவு இது வரையில் செலுத்தப்படாதுள்ளது.

இதன் காரணமாக, மறு அறிவித்தல் வரையில், எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் எரிவாயு நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வரிசைகளில் காத்திருப்பதை தவிர்க்குமாறு எரிவாயு நிறுவனம் கோரியுள்ளது. (அ)

# 'அகதியின் நாட்குறிப்பு' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன். 12

பூவரசி பதிப்பகம் நடத்தும் குடத்தனை உதயனின் அகதியின் நாட்குறிப்பு (நாவல்) நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விரிவுரையாளர் வேல் நந்தகுமார் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் வாழ்த்துரையை எழுத்தாளர் பரணிதரன் மற்றும் கலாசார உத்தியோகத்தர் சே.சுகுணா ஆகியோர் வழங்குகின்றனர்.

வரவேற்புரையை ஊடகவியலாளர் க.வரோதயனும், வெளியீட்டுரையை கவிஞர் ஈழவாணியும் நிகழ்த்தவுள்ளதுடன், விமர்சன உரையை கவிஞர் தீபச்செல்வனும், ஆய்வுரையை எழுத்தாளர் சர்மிளா வினோதினியும் நிகழ்த்துகின்றனர்.

'அகதியின் நாட்குறிப்பு' நாவலினை எழுத்தாளர் பா.ரகுவரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) வெளியிடவுள்ளார். முதல் பிரதிகளை நெல்லியடி சாருஜன் மோட்டார்ஸ் உரிமையாளர் கிருஷாந்த் சிவகுமாரும், இலங்கை மின்சார சபையின் (வட மாகாணம்) பிரதம பொறியிலாளர் யே. அமலேந் திரனும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை நெடுந்தீவு சபேசன் மேற்கொள்வதுடன், ஏற்புரையை எழுத்தாளர் குடத்தனை உதயன் நிகழ்த்துவுள்ளார். இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

# அனைத்து பிரச்னைகளுக்கும் ஒரே தீர்வு பொதுத் தேர்தலே!

## மக்கள் விடுதலை முன்னணி கூறுகிறது



**கொழும்பு, ஜுன். 12**

**நாட்டின் அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஒரே தீர்வு பொதுத் தேர்தல் நடத்துவதேயாகும் என மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.**

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் பீட உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.டி.லால் காந்த இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலை தவிர்ப்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நாட்டில் நிலவி வரும் சமூக மற்றும் அரசியல் நெருக்கடி நிலமைகளுக்கு தீர்வு காணக் கூடிய ஒரே வழி அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக் கொள்வதேயாகும்.

எனவே, பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் - என்றார்.

நாடாளுமன்றை கலைக்குமாறு பொதுமக்களும் அரசியல் கட்சிகளும் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோழி இறைச்சி, முட்டை விலை மீண்டும் சடுதியாக உயர்ந்தது!

கொழும்பு, ஜுன். 12

கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளன என்று அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மக்காச்சோளத் தட்டுப்பாடு மற்றும் மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிரமம் இந்த நிலைக்குக் காரணம் என்று சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

விலங்குத் தீனிக்காக வருடந்தாந்தம் 30 கோடி டொலர் தேவைப்படுகின்றது. இவ்வாறான நிலையில் மாதாந்தம் 3 கோடி டொலராவது விலங்கு உணவுக்காக வழங்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது சந்தையில் முட்டை ஒன்றின் விற்பனை விலை 50 ரூபாவை எட்டியுள்ளது.

மேலும், ஒரு கிலோ கோழி இறைச்சி 1,200 ரூபா தொடக்கம் 1,300 வரை விற்பனை செய்யப்படுகின்றது. (அ)

# சீனிக்கும் கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, ஜுன். 12

சீனிக்கும் கட்டுப்பாட்டு விலையை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக வர்த்தக, வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச சந்தையின் விலைகளுடன் ஒப்பிடுகையில், ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் உள்ளூர் சந்தையில் சீனியின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 4 வகையான அரிசிக்கு அதிக பட்ச சில்லறை விலை விதிக்கப் பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியானது. (அ)

# நாட்டில் உணவு பாதுகாப்புக்கு முதலிடம் கொடுக்கவேண்டும்

## விதுர விக்கிரமநாயக்க கோரிக்கை

கொழும்பு, ஜுன். 12

நாட்டில் உணவுப் பாதுகாப்புக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், நாட்டிலோ அல்லது உலகிலோ அனைத்து அம்சங்களும் உணவுப் பாதுகாப்பில் தங்கியுள்ளன.

90 களில் தொழில்மயமாக்கலை நோக்கி நகர்த்த முயற்சிகள் மூலம் உருவாக்கப்பட்ட திறந்த சந்தைக் கொள்கை காரணமாக உள்ளூர் விவசாயம் தோல்வியடைந்தது.

பஞ்சம் வரவுள்ளதாக உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது. இது முழு உலகத்தையும் பாதிக்கும்.

விவசாயத்தில் தன்னிறைவு அடையத் தவறினால், உணவுப் பொருட்களைத் தொடர்ந்து கடனாகப் பெற முடியாத அவல நிலை ஏற்படும்.

இது வெறும் குறுகிய கால நடவடிக்கையாக மட்டுமே இருக்க வேண்டும். அத்தகைய முயற்சியை அடைய அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (அ)

# அமரகீர்த்தி அத்துகோரள கொலை: இதுவரை 31 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜுன். 12

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், மற்றுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நிட்டம்புவ பகுதியில் வைத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் அவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

24 வயதான குறித்த சந்தேக நபர், போலகந்தகம பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி, பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள கொலை செய்யப்பட்டார்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை 31 சந்தேகநபர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# சென்னையிலிருந்து வருகை தந்த நபர் ஐஸ் போதைப்பொருளுடன் சிக்கினார்

கொழும்பு, ஜுன். 12

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையிலிருந்து வருகை தந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 1.3 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# பொது இடங்களில் மாஸ்க் அணியுங்கள்

## ராஜித சேனாரத்ன கோரிக்கை



கொழும்பு, ஜுன். 12

பொது இடங்களில் முகக் கவசம் அணியுமாறு முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா தொற்று காரணமாக முகக்கவசம் அணிவதற்கான கட்டாயத் தேவையை நீக்குவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தீர்மானித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த தீர்மானம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் நாட்டில் தற்போது மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் கொரோனா தொற்று உறுதியான நோயாளி மேலும் சிரமத்தை எதிர்கொள்ளலாம் என அவர் குறிப்பிட்டார். (அ)

# யாழ்.பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரானார் ஜெல்சின்

யாழ்ப்பாணம், ஜுன். 12

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக சில்வெஸ்ரார் ஜெல்சின் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றிய தேர்தல் இரண்டு வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நேற்று முன் தினம் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பீடத்திலும் வாக்களித்தனர்.

இதன்போது வேட்பாளர்களாக வி.ஜெனார்த்தனன் மற்றும் சி.ஜெல்சின் போட்டியிட்டனர்.

இதன்போது 645 வாக்குகள் பதிவான நிலையில் ஒரு வாக்கு நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில், 476 வாக்குகளை வாக்குகளை பெற்று கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக சில்வெஸ்ரார் ஜெல் ஸ்சின் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து யாழ்.பல்கலைக்கழக பிரதான மாணவர் ஒன்றியம் எதிர்வரும் வாரத்தில் அமைக்கப்படவுள்ள நிலையில் இவ்வருடம் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் பதவி சுழற்சி முறையில் கலைப்பீடத்துக்கு வரவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பொன்னாலைப் பகுதியில் வெள்ளி இரவு கத்திக்குத்து

## இரண்டு பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜுன். 12

பொன்னாலை பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை இரவு 7.30 மணியளவில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் பொன்னாலையை சேர்ந்த 57 வயதுடைய கி.பூபாலரத்தினம் மற்றும் 41 வயதுடைய பகிரதன் ஆகியோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டு, இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாகியும் பொலிஸார் வரவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (அ)

# உணவுத்திட்ட பணிப்பாளர் இலங்கைக்கு வருகின்றார்



கொழும்பு, ஜுன். 12

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் பீஸ்லி விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் தலைவரை நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு தான் அழைப்பு விடுத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள பிரதமர், உலக உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அனைத்து ஆதரவையும் பாராட்டுவதாகவும் கூறியுள்ளார். (அ)




## மாற்றுப்பாலின சமூகத்துக்கு எதிரான ஒடுக்குமுறைகளை கண்டித்து பேரணி

யாழ்ப்பாணம், ஜூன். 12

மாற்றுப்பாலின சமூகத்தினருக்கு எதிரான ஒடுக்குமுறைகளை கண்டித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் யாழ்ப்பாணத்தில் பேரணியொன்று இடம்பெற்றது.

நேற்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் யாழ். நகரப்பகுதிகளில் பேரணியாகச் சென்றனர்.

யாழ். திருநர் வலையமைப்பின் ஏற்பாட்டில் மாற்றுப்பாலின சமூகத்தினரை ஒடுக்குமுறைகளுக்குட்படுத்தாத வாழ்தலை நோக்கி குரல் கொடுப்போம் என்ற நோக்கில் வானவில் நடைப்பயண ஒருங்கிணைவு எனும் தலைப்பில் இந்தப் பேரணி இடம்பெற்றது.

சமத்துவம், சுயமரியாதை, மற்றும் சமூக நீதியை அடிப்படையாக கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பேரணியில் பாலின வேறுபாடின்றி போராட்டகாரர்கள் கலந்து கொண்டனர்.

(அ-03)

# மே 09ஆம் திகதி வன்முறையின் பின்னணியில் மதத்தலைவர்கள்

### அமைச்சர் பிரசன்ன குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூன் 12**

**நாட்டில் கடந்த 09ஆம் திகதி நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் மதத் தலைவர்களும் உள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

அதேவேளை பாதாள உலக கும்பல்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களையும் பாதுகாப்பதற்கு சட்டம் முன் நின்றது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமரகீர்த்தி அத்துக்கோரளவின் அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:

அமரகீர்த்தி அத்துக்கோரளவின் மரணம் ஒரு கொடூரமான படுகொலையாகும். அவர் கௌரவமாக வாழ்ந்த ஒரு மனிதர். பாராளுமன்ற உறுப்பினர்.

அவரது படுகொலையை தொலைக்காட்சியில் பார்த்த போது அவரைக் கொன்றவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. வீடுகளுக்கு தீ வைத்தவர்கள் நீதிமன்றத்தில் சுமார் 150 சட்டத்தரணிகள் மூலமாக எந்த குற்றமும் செய்யாதவர்கள் போன்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது போன்ற அப்பாவி மனிதர்களை கொல்வது எவ்வாறு நியாயமாகும். நாம் வெறுமனே அனுதாபப் பிரேரணை நடத்துவதில் பயனில்லை. இதன் மூலம் நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இது நம் அனைவருக்கும் சிறந்த பாடம்.

சம்பவம் இடம்பெற்ற கடந்த மே 9ஆம் திகதி மக்களை குழப்புவதிலும் வீடுகளுக்கு தீ வைத்ததிலும் பௌத்த துறவிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர். வன்முறை சம்பவங்களுக்கு தலைமைத்துவம் வழங்கியது அந்தப் பகுதிகளில் உள்ள பௌத்த துறவிகளே.

என்னுடைய வீட்டைத் தாக்குவதற்கு வந்தவர்களுள் ஒரு பௌத்த மத துறவியும் உள்ளடங்குகிறார் - என்றார். (அ)

## ஆசிரியர்கள், மாணவர்களை 3 நாள் பாடசாலைக்கு அழைக்க யோசனை

கொழும்பு, ஜூன். 12

எரிபொருள் நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு மத்தியில் ஆசிரியர்களையும், மாணவர்களையும் இரண்டு பிரிவுகளாக பிரித்து, வாரத்துக்கு தலா மூன்று தினங்கள் பாடசாலைக்கு அழைப்பதற்கு, அதிபர் -ஆசிரியர் தொழிற்சங்க ஒன்றியம் கல்வி அமைச்சிடம் யோசனை முன்வைத்துள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும், அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்க ஒன்றியத்துக்கும் இடையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சந்திப்பில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தூரப் பிரதேசங்களில் இருந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை, அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இணைப்பதற்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை, பிரயோக ரீதியாக பயன்படுத்துவதற்கான முறைமை தயாரிக்கப்படவேண்டும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மேல் மாகாணத்தில் டெங்கு தாண்டவம்!




கொழும்பு, ஜூன். 12

நாட்டின் 16 மாவட்டங்களில் 83 சுகாதார உத்தியோகத்தர் பிரிவுகள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டம் அதிகளவிலான டெங்கு பரவும் மாவட்டமாகவும், 18 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. பாதுக்க, பொரலஸ்கமுவ, ஹன்வெல்ல, கஹதுடுவ, பத்தரமுல்லை, இரத்மலானை, எகொட உயன மற்றும் கொதடுவ ஆகிய இடங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக கருதப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, யாழ்ப்பாணம், இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்கள் டெங்கு அபாயமுள்ள மாவட் டங்களாக அடையாளம் காணப் பட்டுள்ளன.

நாடு முழுவதிலும் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களில் 51.2 வீதமானவர்கள் மேல் மாகாணத்தில் மாத்திரம் பதி வாகியுள்ளதாகவும், கடந்த 08 நாட்களில் மாத்திரம் 2,416 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த 9 ஆம் திகதி 349 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேல் மாகாணத்தில் டெங்கு நோயின் பரவலைக் குறைப்பதற்காக எதிர்வரும்15 ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் தாங்கள் வாழும் சூழலை நுளம்புகள் பெருக்கம் அதிகரிக்காமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், 24 மணி நேரமும் காய்ச்சல் இருந்தால் டெங்கு சந்தேகத்தின் பேரில் தகுதியான மருத்துவரை அணுகி சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

### மே 09 வன்முறைச் சம்பவம்:

# பொதுநலவாய அமைப்பின் விசாரணை உடன் வேண்டும்

### பிரதமர் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 12

இலங்கையில் மே 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில், விசாரணை நடத்துமாறு பொதுநலவாய அமைப்பிடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று முன் தினம் பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. இதன்போது நாட்டில் மே 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையின் கொல்லப்பட்ட, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரளவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்றது. ஆளுங்கட்சி எம்.பிக்கள் மேற்படி சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் கறுப்புப்பட்டி அணிந்தே சபை அமர்வில் பங்கேற்றிருந்தனர்.

இவ்விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்படி தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மே-09 சம்பவம் பாராளுமன்ற கட்டமைப்பு மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாகும். இது தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த வேண்டியுள்ளது.

உள்ளகக் கட்டமைப்பில் விசாரணை நடத்துவதில் சிக்கல் உள்ளதெனில், வெளியகப் பொறிமுறையை நாடலாம்.

பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பின் செயலாளருக்கு நான் கடிதமொன்றை அனுப்பியுள்ளேன்.

காலிமுகத்திடல் தாக்குதல் உட்பட அனைத்து சம்பவங்கள் தொடர்பிலும் ஆராயுமாறு கோரியுள்ளேன். எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை என அறிக்கை முன்வைக்குமாறும் கோரியுள்ளேன்.

இது தொடர்பில் சபாநாயகரும் கோரிக்கை விடுக்கலாம் - என்றார். (அ)

## மற்றுமொரு ராஜபக்ஷவும் விரைவில் இராஜினாமா?

கொழும்பு, ஜூன். 12

ராஜபக்ஷ குடும்பத்தின் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரும் விரைவில் இராஜினாமா செய்யவுள்ளாரென தகவல் வெளியாகியுள்ளது.

இன்னும் இரு வாரங்களுக்கு பின்னர் அவர் பதவி விலகும் முடிவை அறிவிப்பாரென அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷ கடந்த 9 ஆம் திகதி பதவி விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே மற்றுமொரு ராஜபக்ஷவும் பதவி விலகவுள்ளார். (அ)

## அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலை ரூ.210

கொழும்பு, ஜூன். 12

அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் இவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, சிவப்பு மற்றும் வெள்ளை நாட்டரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த விலைகளை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Eelanadu
12.06.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 29


**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.


E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370


# நபர்களை மாற்றும் ஆட்டம்?

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்று உறுப்புரிமையிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, அந்த இடத்திற்கு இலங்கையின் முன்னிலை வர்த்தகர்களில் ஒருவரான தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு தன்னிடம் திட்டங்கள் இருப்பதாக தம்மிக்க கூறிக்கொண்டிருந்த நிலையில், அவர் தற்போது பொதுஜன பெரமுனவிற்குள் பிரவேசித்திருக்கின்றார். தம்மிக்க பெரேரா போன்ற பணப்பலம் கொண்ட ஒருவர், சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக காலத்தை கடத்த வாய்ப்பில்லை. எனவே, அவர் வேறு பொறுப்புக்களில் அமர்த்தப்படலாம்.

ஜனாதிபதி கோட்டாபயவினால் நியமிக்கப்பட்டவர்களில் பலர் மாற்றப்பட்டு, அந்த இடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்கவின் நியமனம்தான் இதில் உச்சமானது. ஆனால், உறுதியான பொருளாதார கொள்கையும், நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான தெளிவான திட்டங்களும் இல்லாமல், வெறுமனே நபர்களை மாற்றுவதால் - எவ்வாறான விடயங்களை சாதிக்க முடியும்? நாடு முன்னோக்கி நகருமா? இந்தக் கேள்விகளுக்கான பதில் இல்லை என்பதாக இருந்தாலும்கூட, உண்மையான பிரச்னை - இதனை விடவும், என்னசெய்வதென்று அரசாங்கத்திற்கு தெரியாது.

ஜனாதிபதி கதிரையை இலக்கு வைத்து, இரண்டு வருடங்களுக்கு முன்பதாகவே கோட்டாபய ராஜபக்ஷ செயற்படத் தொடங்கியிருந்தார். இதற்காக அவர் உருவாக்கிய அமைப்புத்தான் விஜத்மக. சிங்கள தேசியவாத கருத்தியல்மீது நாட்டம்கொண்ட, ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள், புத்திஜீவிகள், தொழில்வல்லுனர்கள், கலைஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எனப் பலரும் விஜயத்மகவில் அங்கம்வகித்திருந்தனர். அது ஒரு புதிய சிங்கள-பௌத்த தேசியவாத புத்திசாலிகளின் அமைப்புப் போன்றே காட்சிப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதி, கோட்டாபய ராஜபக்ஷ, புதிய புலமையாளர்கள் படையணியொன்றுடன் இணைந்து, நாட்டை வழிநடத்தப்போவதான, அட்டகாசமான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. தான் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றதும் அவர்களைக் கொண்டே அனைத்தையும் முன்னெடுப்பதற்கான திட்டங்களை கோட்டாபய கொண்டிருந்தார். அவர்களது ஆலோசனையின் பெயரிலேயே பல விடயங்களை முன்னெடுத்திருந்தார். விஜத்மகவின் செல்வாக்கின் காரணமாகவே, அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நோக்கி செல்லவில்லையென்று, ரணில் விக்கிரமசிங்க ஒரு நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், ஒரு திடீர் பொருளாதார நெருக்கடியேற்பட்டபோது, கோட்டாபயவை பாதுகாத்து, நாட்டை முன்கொண்டு செல்வதற்கான எந்தவொரு திட்டமும் விஜயத்மகவினரிடம் இருந்திருக்கவில்லை. இந்தப் பின்னணியில்தான், சரிவை சமாளிப்பதற்காக முகங்களை மாற்றும் அரசியலுக்குள் கோட்டாபய சென்றார். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிலிருந்து, அனைத்து பொறுப்புக்களிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் சுவாரசியமான விடயம் - பசில் நிதியமைச்சராக பொறுப்பேற்றதும், பசிலினது ஆலோசனையின் பெயரில் கோட்டாபயவினால் பொருத்தமற்றவரென்று கைவிடப்பட்ட அஜித் கப்ரால் மீளவும் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டமையும். ஆனால், எதுவும் கைகொடுக்கவில்லை.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட முகம்மாற்றும் அரசியல் விளையாட்டு இன்னும் முடிவுறவில்லை. தேர்தல் ஒன்றின் மூலம் புதிய அரசாங்கமொன்று தெரிவாகும் வரையில், இவ்வாறான பல புதிய முகங்களை அடிக்கடி பார்க்க நேரிடலாம். ஆனால், இவ்வாறான முகம்மாற்றும் படலத்தால் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்த முடியுமென்பதுதான் கேள்வி. எவ்வாறான ஆற்றலுள்ளவர்கள் வந்தாலும், ஒரு ஸ்திரமான - அதேவேளை, உறுதியான பொருளாதார கொள்கையொன்றுடன், உலகத்தோடு ஊடாடக் கூடிய தலைவர் ஒருவரின் கீழ் - ஸ்திரமான அரசாங்கம் இல்லாது போனால், உருப்படியான மாற்றங்கள் நிகழ வாய்ப்பில்லை. இடம்பெறும் அனைத்து மாற்றங்களும் குறைந்த ஆயுளுடையவையாகவே இருக்கமுடியும்.

**வாரசாரம்** - *அரசியல் நிருபர்*

# தந்தையும் தளபதியும்!



*நாட்டின் இன்றைய அரசியல் பொருளாதார அவல நிலைக்கு, இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்குவந்த அரசுகளின் தமிழ் மக்களைப் புறந்தள்ளிய நடவடிக்கைகள் தாம் காரணம் என்று பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்திருக்கிறார். இன்றைய அரசியல்வாதிகளில் சம்பிக்க ரணவக்க தனது கருத்துக்களில் சற்று காத்திரமானவர் என்றே கருதப்படுபவர். அவர் இதனைத் தன்னுடைய ஒரு தெளிவான கருத்தாக உண்மையில் உணர்ந்ததிலேயே சொல்கிறார் என்றால், அந்த உண்மையில் விசுவாசமான அரசியல் செயல்பாடுகளுடன் அவரின் அரசியல் அமையும்.*

*சம்பிக்க ரணவக்க சொல்லும் உண்மை, நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்றுவரை தொடர்வதுதான். அரசுகளின் இப் புறக்கணிப்பிலும் - இப் புறக்கணிப்பு இக் காலப் பகுதியின் வரலாறாகவிருந்தாலும், எதைச் சாதித்தார்களோ இல்லையோ ஆனால், தமிழ் மக்கள் கண்ணியமான ஓர் அரசியல் வரலாற்றையும் தமக்கு இக் காலப்பகுதியில் பதித்திருக்கிறார்கள். அரைவாசிக் காலம் சாத்வீக வழிகளிலும், அரைவாசிக் காலம் ஆயுத போராட்டத்துடனுமாக அது எழுதப்பட்டது. இந்த இரண்டு காலப்பகுதிகளுமே தீரங்கள் நிறைத்தவை. இன்னமும் ஓர் அரசியல் தீர்வுக்கான எதிர்பார்ப்புடனேயே இந்த வரலாற்று காலம் தொடர்கின்றபோது, கடந்த இந்த வரலாற்றுக் காலங்களை மறந்த - தெரியாத நிலைமை, நம்முடைய அரசியலில் ஏற்படுத்தும் மந்த நிலை பொதுவில் உணரப்படுவதில்லை.*

*தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழு கூட்டத்தில் இடம்பெற்ற ஒரு ‘கொசிப்’பாக, யாழ்ப்பாணத்து பத்திரிகைளில் பத்தி எழுத்தாளர்கள் சிலாகித்த ஒன்று இந்த நிலையை துலாம்பரமாக்கும். எஸ். ஜே. வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன் தொடர்பில் அந்த ‘கொசிப்’ இருந்தது. இப்போது அரசியல் செய்பவர்களில் இரா. சம்பந்தன், வீ. ஆனந்தசங்கரி தவிர, அந்த சாத்வீக வரலாற்று காலத்தை சரியாக தெரிந்தவர்கள் - அந்த காலத்தின் தாத்பரியத்தை உணர்ந்தவர்கள் தர்மலிங்கம் சித்தார்த்தனும் மாவை. சேனாதிராசாவும்தான். அதனால்தான் அந்த கூட்டத்தில் தந்தை செல்வநாயகமும் ‘தளபதி’ அமிர்தலிங்கமும் பற்றி சித்தார்த்தன் கூறிய ஒன்று, ‘தந்தையும் தளபதியுமாக’ மற்றையவர்களால் கொசிப்பாக உருக்கொடுக்கப்பட்டிருக்கிறது.*

*சம்பந்தனிடம் தனித்த சில ஆற்றல்கள் இருக்கின்றன. அவ்வாறே சுமந்திரனிடமும் இருக்கின்றன. ஆனால், எஸ். ஜே. வி.யும் அமிர்தலிங்கமுமாக இவர்களை அரசியலில் ஒப்பிட்டுப் பார்க்க நினைப்பதும் முயல்வதும், நமது அரசியல் வரலாற்று ஞானத்தின் சூனியம்தான்.*

*அரசுகள் தமிழ் மக்களைப் புறக்கணித்ததாக சம்பிக்க ரணவக்க கூறும் விதத்திலேயே, 1972 அரசியல் நிர்ணய சபையிலிருந்து எஸ். ஜே. வி. செல்வநாயகம் வெளியேறிய விதத்தை அண்மையில் டாக்டர் ஜெயம்பதி விக்கிரமரத்தின ‘ஐலன்ட்’ பத்திரிகையில் வெளியான ஒரு தொடர் கட்டுரையில், மிகுந்த கண்ணியத்துடன் குறிப்பிட்டிருந்தார்.*

*“இச் சபையில் நாம் தொடர்ந்தும் இருப்பதில் பயனில்லை. இம் முடிவை நாம் எடுப்பதால், நாம் எவரையும் வஞ்சிக்கவில்லை. எமது மக்களின் கௌரவத்தை பேணவே நாம் முனைகிறோம். இவ்வேளையில், இச் சபையிலிருந்து நாம் வெளிநடப்புச் செய்வதான ஒரு காட்சியை உருவாக்கவும் நாம் இங்கு முனையவில்லை” என்று எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறியதை குறிப்பிட்டுச் சொல்லும் டாக்டர் ஜெயம்பதி, நமது தமிழ் எம். பி.க்கள் எஸ். ஜே. வி.யை காணவேண்டிய தன் ஆதங்கத்தையும் தெரிவித்திருந்தார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -33

# உணவுப் பகிர்வு, அது ஒரு உணர்வுப் பகிர்வு

கணபதி சர்வானந்தா

நீர் அறம் நன்று, நிழல் நன்று, தன் இல்லுள்
பார் அறம் நன்று, பாத்து உண்பானேல், பேர் அறம்,
தளி, சாலை, நாட்டல், – பெரும் போகம்,
ஒன்றுமாம், சால உடன்.

– காரியாசான் இயற்றிய சிறு பஞ்ச மூலம் என்ற நூலில் உள்ள 61 வது பாடல் இது.

இதன் உட்பொருள் - நீர் அறம் செய்தல், நிழல் அறம் செய்தல், பிறர் உறைய இடங் கொடுத்தல், பகிர்ந்து உண்பது. ஆகிய இவை பெரிய அறமாகும். சாலையை நிலைபெறச் செய்தல் நன்று.இவை அனைத்தையும் செய்பவருக்குப் பேரின்பம் உண்டாகும். - என்றவாறு அமைகிறது.

மனித வாழ்வில் உணவு ஒரு பிரதான விடயமாகிறது. அந்த உணவைப் பகிர்ந்து உண்பதைத்தான் உயர்ந்த அறம் என்று மேலே சொல்லப்பட்டிருக்கிறது. தற்காலச் சூழ்நிலையில் பகிர்ந்து உண்ணல் என்ற விடயம் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகிறது. எமது நாட்டில் பெரும்பாலான பொருட் களுக்குத் தட்டுப்பாடு நிலவத் தொடங்கிவிட்டது. அரசு ஒரு சீரற்ற பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்ததன் விளைவு இது என்று சொல்லப் பட்டாலும் அதனை அனுபவிப்பவர்கள் மக்களே.உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் அவற்றின் விலைகள் ஏற்றம் கண்டுள்ளன. ரூபா.50 - 60 க்கு விற்ற அரிசியை இன்று ரூபா.290 க்கு மேல் விலை கொடுத்து வாங்க வேண்டிய துர்ப்பாக்கியச் சூழலுக்குள் நாமிருக்கிறோம்.

ஐக்கிய நாடுகள் சபை ஜூன் 5 ஆம் திகதியினைச் சுற்றுச் சூழல் தினமாக அறிவித்திருக்கிறது. அதன் 2013 ஆண்டின் கருப்பொருள் சிந்தி. உண். சேமி என்பதாகும். இதன் பரப்புரை , ஒவ்வோராண்டும் பேரளவில் வீணாக்கப்படும் உணவுப் பொருள்களின்பால் கவனத்தைக் குவித்தது. இந்த உணவு சேமிக்கப்பட்டால், ஏராளமானோர்க்கு உணவு வழங்கி அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க முடியும் என்ற எண்ணத்தில் உணவுப் பொருளை விரயமாக்கும் வாழ்வுமுறைமை உள்ள நாடுகளின்பால் அதிக கவனம் செலுத்தப்பட்டது. உலகளாவிய உணவு விளைச்சலால் சூழலின் மீது ஏற்படும் ஒட்டுமொத்தத் தாக்கத்தைக் குறைக்க மக்கள் உண்ண விரும்பும் உணவின் தேர்வை அறிவிக்கும் உரிமையைப் பெறவைக்கும் குறிக்கோளையும் முன்வைத்ததாக அது அமைந்தது.

தற்போதுள்ள உலகின் ஒரு பக்கத்தில் நடுஇரவில் போன் பண்ணினால் விரும்பியவாறு எல்லா வகை உணவுகளையும் வரவழைத்துச் சாப்பிடக்கூடிய சூழல் உள்ளது. மறுபக்கத்தில் ஏறத்தாழ 30 கோடி மக்கள் இரவு உணவு இல்லாமல் வெறும் வயிற்றுடன் உறங்கச் செல்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதிகம் உண்பதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், உற்பத்தியாகும் உணவில் மூன்றில் ஒரு பங்கை வீணாக்குகிறோம் என்ற விடயத்தில் வருத்தம் உண்டு. உணவை வீணாக்குதல் என்பதை ஒரு குற்றம் எனத்தான் கருத முடியும். இந்த குற்றத்துக்கு நாம் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும்.

எமக்கு அறிவூட்டுகின்ற நூல்கள் எல்லாவற்றிலும் உணவை வீணாக்குதல் என்பது பாவம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. சிறுவயதில் நாம் உணவு உண்ணும் போது உணவை மதித்து உண்ண வேண்டும் என்ற அறிவுரையைச் சொல்லுவர். பெரும்பாலான தர்ம நிறுவனங்களில் உணவை உண்ண முன்னர் அது தொடர்பான பிரார்த்தனை செய்வர். அதன் பின்பே உணவை உண்பர். அதனை ஒரு அறம் சார்ந்த விடயம் என்று சொல்லுவர். அது மட்டுமல்லாது சிறுவயதில் உணவு தொடர்பாகப் பல நீதிகளும், நீதிக் கதைகளும் எமக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன.

உணவை வீணாக்குதல் என்ற விடயம் எமது சூழலில் குறைவு என்றுதான் சொல்லலாம். ஆனால் மேற்குலக நாடுகளில் உண்டு. அவர்கள் கலாச்சாரத்தில் நுகர்வு அதிகமாகவே இருக்கும். வடிவத்துக்காகவும், நிறத்துக்காகவும், காட்சிப்பொருளாகக் காட்டவும் கிட்டத்தட்ட 30 சதவீதம் வரை அங்கே உணவு வீணடிக்கப்படுகிறதாக இணையத்தில் ஒரு கட்டுரையில் சொல்லியிருக்கிறார்கள். வீணாக்குதல் என்பது வேண்டாம் என ஒதுக்குவது போலாகும். சில இடங்களில் உண்ட பாத்திரத்தில் உணவை மீதி வைப்பதை ஒரு பெருமையாகவும் அவர்கள் நினைக்கிறார்கள் என்பதுதான் வருத்தத்துக்குரிய விடயம். உணவை வீணாக்குவது என்ற விடயம் ஒரு வியாபார யுக்தியாகவும் மாறிவிட்டது. சரியாக வேகவில்லை என்றால் உணவைத் தூக்கிப்போட்டு விடுகிறார்கள். தரம் பார்க்கிறோம் என்ற போர்வையில் உணவு வீணாக்கப் படுகிறது. ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம். உணவில் 20மூ சதவீதம் அதிகம் கிடைக்கும், அதற்கான சலுகைக் கூப்பன்கள் என நுகர்வை அதிகமாக்கவும் முயல்கிறார்கள். இதில் சலுகைகள அனுபவிப்பதற்காகவும் உணவு வீணாக்கப்படுகிறது.

இதில் என்ன மன வருத்தம் என்றால் அவர்களைப் போல நாமும் வாழ நினைப்பதுதான். எமது மரபிலே உணவை வீணக்குவதை ஒரு குற்றமாகக் கருதும்போது நாகரிகம் என்ற போர்வையில் நாம் எமது மரபை மீறுவதோடு மட்டுமல்லாது அது தொடர்பான அறத்தையும் மறந்துவிடுகிறோம்.

ஆனால் இனிவருங்காலத்தில் உணவு ஒரு சவாலான விடயமாகப் போவதாக எதிர்வு கூறப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ நான்கு அல்லது ஐந்து மடங்கு விலை கொடுத்து உணவுப் பொருட்களை வாங்கத் தொடங்கி விட்டோம். 2009 இல் வடக்கில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது உப்புக் கஞ்சிக்காக வரிசையில் காத்துநின்றதை மறந்தவர்களாக நாம் மாறிவிட்டது தான் ஏன், எதனால் என்று தெரியவில்லை?

அன்றைய பாடம் ஒன்றே போதும் நாம் அறவழியில் சிந்திக்க. அந்த அனுபவங்களே போதும் நாம் மனிதர்களாக வாழ. பசி தொடர்பாக.. ஒரு பயங்கரமான எதிர்காலத்துக்குள் நாம் போவதற்குரிய அறிகுறிகள் தென்படுவதாக் தெரிகிறது. அதற்கு நாம் எப்படி ஆயத்தமாகப் போகிறோம் என்ற விடயம் தான் இன்னும் எம்மிடத்தில் தெளிவாக இல்லை என்ற கவலையோடு...!

# இந்தவார ராசிபலன் 12.06.2022 - 18.06.2022



ஜுன் 12 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 29

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : திரையோதசி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

உங்கள் செயலில் சிரமம் ஏற்படும். அதன்பின் போராடி வெல்வீர்கள்.உங்களுடைய நீண்ட நாள் கனவுகள் நிறைவேறும். திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுங்கள்.சந்தோஷமும் சங்கடமும் கலந்த வாரமாக இந்த வாரம் இருக்கும். நீங்கள் எதிர்பார்த்த சந்தோஷத்தை அடைவீர்கள். எதிர்பாலினரிடம் எச்சரிக்கையுடன் பழகுங்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

யோகமான நாட்களாகும். உங்கள் வீட்டில் சுப விசேஷங்களுக்கு திட்டமிடுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். அதன்பின் கவனமுடன் செயல்பட வேண்டும். உங்களுடைய முயற்சிகளில் வெற்றி உண்டாகும். உங்கள் செயல்களில் கவனம் தேவை.நீண்ட நாள் எண்ணங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும். எதிர்பார்த்தவற்றில் லாபம் உண்டாகும். புதிய நட்புகளால் உங்கள் நிலையில் உயர்வு ஏற்படும். தொழிலில் இருந்த பிரச்னைகளை சரிசெய்வீர்கள்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

முயற்சிகளில் இழுபறி இருக்கும். திங்கள்கிழமை முதல் உங்களுடைய செயல்களில் லாபகரமான நிலையைக் காண்பீர்கள். தொழிலில் முன்னேற்றமும் திடீர் வரவுகளும் உண்டாகும். எதிர்பார்த்த பண வரவு உண்டாகும். தொழிலில் லாபம் காண்பீர்கள். அந்நியர்கள் வழியே ஆதாயங்களை அடைவீர்கள். வெளிநாட்டுத் தொடர்புகள் ஆதாயத்தை ஏற்படுத்தும். துணையை இழந்தவர்களுக்கு புதிய நட்பு ஒன்று ஏற்படும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உங்கள் செயல்களில் உடனே முடிவைக் காண்பீர்கள். அதன் பிறகு உங்கள் முயற்சிகளில் இழுபறி இருக்கும் அடுத்தவரின் கருத்துகளை ஏற்பதால் சங்கடம் உண்டாகும். உங்கள் செயல்களில் கூடுதல் கவனம் தேவைப்படும். புதிய முயற்சிகள் இந்த வாரத்தில் வேண்டாம். அரசு வழியிலான எதிர்பார்ப்புகள் நிறைவேறும். புதிய சொத்துகள் வாங்கும் முயற்சி பலிதமாகும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் அரசு வழி முயற்சிகள் ஆதாயத்தை ஏற்படுத்தும். அதன்பின் தடைகள், தாமதங்கள் என்று ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பாராட்டப்படுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். கவனமுடன் செயல்படுவதால் நன்மைகள் அதிகரிக்கும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

செயல்களில் தடைகளும் தாமதமும் ஏற்படும். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீட்டில் திருமணப்பேச்சு எழும். முயற்சிக்கேற்ற லாபம் உண்டாகும். நீங்கள் தொட்டதெல்லாம் வெற்றியாகும். சிந்தித்து செயல்படவும். உங்கள் எதிர்பார்ப்பு திங்கள் கிழமை நிறைவேறும். அதுவரை பெரிய அளவில் வருமானம் இல்லாமல் போனாலும் தேவைக்கேற்ற அளவிற்கு வந்து சேரும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

குடும்பத்தில் நிம்மதியற்ற நிலை உண்டாகும். உங்களுடைய எதிர்பார்ப்புகளில் பின்னடைவுகளை சந்திப்பீர்கள். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். எந்த ஒன்றிலும் அவசரம் வேண்டாம். ஒரு சிலர் உங்களைப் பயன்படுத்தி ஆதாயம் தேட முயற்சிப்பார்கள். சட்டத்திற்கு புறம்பானவற்றில் ஈடுபட வேண்டாம். நீங்கள் நினைப்பதற்கு எதிர்மறையான விஷயங்கள் நடந்தேறலாம்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். குடும்பத்தின் நலனை ஒட்டி சில முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நீங்கள் நினைத்திருந்த செயல்கள் ஒவ்வொன்றாக நிறைவேற ஆரம்பிக்கும். பிள்ளைகளின் கல்வி முயற்சிக்காக செலவுகளை சந்திப்பீர்கள்.திட்டமிட்டிருந்த செயல்களை செலவுகள் செய்து முடிப்பீர்கள். வீட்டில் திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் தேடி வரும். எதிர்ப்புகள் விலகும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

புதிய நண்பர்கள் விஷயத்தில் எச்சரிக்கை அவசியம். செலவுகள் அதிகரிக்கும் என்பதால் கவனம் தேவை. தாய்வழி உறவுகள் உங்களை விட்டு விலகிச் செல்வார்கள். உங்களுடைய சுய ஆற்றலால் நினைத்ததை சாதிப்பீர்கள். பிள்ளைகள் விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டி வரும். குடும்பத்தினரின் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள்.செலவுகள் அதிகரிக்கும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

உறவினர்களின் வருகையும் ஆதரவும் உங்களை மகிழ்ச்சிப் படுத்தும். உங்களுடைய செயல்களில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த வரவுகளால் நீங்கள் எண்ணியது ஈடேறும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். எதிர்பார்த்த வகையில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த நெருக்கடிகள் விலகும்.உறவினர்களின் உதவியுடன் உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நினைத்ததை சாதித்திடக் கூடிய வாரம் இது. தொழிலை விரிவு செய்யும் முயற்சி பலிக்கும். வேலை தேடியவர்களுக்கு வேலை வாய்ப்பு அமையும்.உடலில் இருந்த பிரச்னைகள் விலகும். மனதில் புதிய உற்சாகம் தோன்றும். எதிர்பார்த்த வருவாய் வரும். குடும்பத்தினரின் நலனில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். நீண்டநாள் பிரச்னைகள் முடிவிற்கு வரும். வாழ்க்கைக்குரிய வழியைக் கண்டுபிடித்து முன்னேறுவீர்கள்.குடுபத்தில் உங்களுடைய செல்வாக்கு உயரும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]


உங்கள் முயற்சிகளில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைகளைக் காண முடியாமல் போகும். கவனமுடன் செயல்பட்டால் உங்களுடைய எண்ணங்கள் நிறைவேறும்.செயல்களில் சங்கடங்களை சந்திக்கலாம். வேலையில் இருப்பவர்கள் கவனமுடன் செயல்பட வேண்டும். மனதில் தன்னம்பிக்கை உண்டாகும். எதையும் போராடி முடிப்பீர்கள். உங்களுடைய வார்த்தைகளில் கவனம் தேவை.உங்களுடைய எதிர்பார்ப்புகள் இழுபறியாகவே இருக்கும். அலைச்சல் அதிகரிக்கும். உடல் நிலையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும்.

## நபிகள் நாயகம் தொடர்பில் நூபுர் ஷர்மா கிளப்பிய சர்ச்சை:

# இஸ்லாமிய நாடுகளில் பரவும் இந்திய எதிர்ப்பு கண்டனங்கள்

**சென்னை மடல்**

**-பகவான் சிங்-**



கடந்த சில வாரங்களாக இலங்கையில் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் நிலையைச் சித்தரிக்கும் வீடியோக்கள் மிகுந்த கவலையளித்தன. உணவு மற்றும் எரிபொருளுக்கான நீண்ட வரிசைகள், காலிமுக கடற்கரையில் கூடாரங்கள் போட்டிருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் கூட்டத்தினர், ஆளும் கட்சித் தலைவர்களைத் தாக்கி அவர்களின் சொத்துக்களை அழித்த பேரழிவுக் காணொளிகள் உலகம் முழுவதும் உள்ள பார்வையாளர்களுக்குப் பெரும் துயரத்தை அளித்தன.

பல்வேறு தரப்பிலிருந்தும் அனுதாபங்கள் குவிந்தன. பல அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகள் முன்வந்து உதவிகள் வழங்கியதுடன், எதிர்காலத்தில் ஆதரவளிப்பதாகவும் உறுதியளித்தன. இந்திய பெருங்கடலின் இந்த அழகிய முத்து போன்ற ஒரு தீவு தேசத்தின் இந்தத் துயர நிலை, இதன் ஆட்சியாளர்களின் பேராசை, ஊழல் மற்றும் திறமையின்மையின் காரணமாகவே ஏற்பட்டுள்ளது.

எனது சொந்த நாடான இந்தியாவிலும் ஒரு  துயர நிலை நிலவுகிறது, ஆனால், இது சற்றே வித்தியாசமானது. இது பசி, தட்டுப்பாடு மற்றும் விலையுயர்வால் ஏற்பட்ட நிலையன்று. ஆனால், இதுவும் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட வேதனையான நிலையே. மதம் மற்றும் கடவுள் குறித்த வக்கிரமான பார்வையால் தமது தனிப்பட்ட மற்றும் பொது வாழ்வின் சித்தாந்தத்தைத் தீர்மானிக்கும் நபர்களால் இந்த இந்தியத் துயரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆளும் பாரதிய ஜனதா கட்சியையோ அல்லது ஆர் எஸ் எஸ் என்ற அதன் தாய் அமைப்பையோ சேர்ந்தவராக இருப்பதுதான் துயரத்தின் மையப் புள்ளியாக உள்ளது. மே 2014இல் முதல் முதலில் பிரதமராகப்

## மத துவேஷம் என்ற கண்ணிவெடியில் கால் வைக்கும்போது சற்று விவேகத்துடன் சிந்தித்திருக்க வேண்டாமா?

பதவியேற்று, உலக அளவில் பிரதமர் நரேந்திர மோடி உருவாக்கியுள்ள நேர்மறை பிம்பத்தை வலுப்படுத்தி, நாட்டு மக்களுக்குச் சிறந்த நிர்வாகத்தை அளிக்கும் பொறுப்பு இவர்களுக்கு உள்ளது என்பதுதான் இதில் குறிப்பிடத்தக்கது. மேலும் பாஜக /ஆர் எஸ் எஸ் அல்லது காவியுடன் சம்பந்தப்பட்ட எதுவானாலும் அதை எதிர்க்கும் சமூக-அரசியல் அடையாளங்களைத் தங்கள் பேச்சிலும் தோற்றத்திலும் சுமக்கும் சிலராலும் பிரச்னை ஏற்படுத்தப்படுகிறது.

இரு துருவங்களான இந்த இரு தரப்பிலிருந்தும் வெளியாகும் வெறுப்புப் பேச்சுகள், தொலைக்காட்சி விவாதங்கள் மற்றும் ஊடக நேர்காணல்கள் ஆகியவை பொதுமக்கள் குறித்த கவலையும் தேசிய முன்னுரிமைகள் குறித்த விழிப்புணர்வும் இவர்களுக்கு இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இவர்களின் நாகரிகமற்ற கூச்சல்கள், வயிறு புடைக்க உண்டு, அடுத்த வேளை உணவு குறித்த கவலை இல்லாமல், அறையின் குளிர்சாதனம் வேகமாகக் குளிர்விக்கவில்லை என்ற ஒரே கவலை மட்டுமே கொண்டவர்கள் இவர்கள் என்பதைக் காட்டுகின்றன.

மே 26 அன்று ஒரு தொலைக்காட்சி விவாதத்தில் பாஜக செய்தித் தொடர்பாளர் நூபுர் ஷர்மா நபிகள் நாயகம் பற்றிப் பேசிய சில கருத்துகள் வைரலானது, மாபெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது . அந்தக் கருத்துகளை நான் இங்கு மீண்டும் குறிப்பிட விரும்பவில்லை. அந்தக் கருத்துகளுக்குப் பல தரப்பிலிருந்தும் எழுந்துள்ள எதிர்வினை குறித்து மட்டுமே நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

நூபுர் ஷர்மா நபிகளை இழிவுபடுத்தும் விதமாகப் பேசியதாகப் பல இஸ்லாமியத் தலைவர்களும் மௌலவிகளும் குற்றம் சாட்டியுள்ளனர். மேலும், சிறுபான்மையினர், குறிப்பாக இஸ்லாமியர்களைப் புண்படுத்தும் பேச்சுக்கும் தாக்குதலுக்கும் பேர்போன அக்கட்சியின் செயல்திட்டத்தைத்தான் இவரது பேச்சும் செயலும் பிரதிபலிக்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளனர். இவரது இழிவுபடுத்தும் பேச்சின் ‘ஸ்க்ரீன் ஷாட்’டை அக்கட்சியின் டெல்லி ஊடகத் துறைத் தலைவர் நவீன் குமார் ஜிண்டல் ட்விட்டரில் வெளியிட்டது நிலைமையை இன்னும் மோசமாக்கியது. இது குறித்து எழுந்த விமர்சனங்களுக்குச் செவிசாய்க்காத கட்சி மேலிடம், பத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமிய நாடுகள், நூபுரின் பேச்சை இறை நிந்தனை என்று குறிப்பிட்டுக் கடும் கண்டனங்களை வெளியிட்டதையடுத்து, அவரைக் கட்சியிலிருந்து இடை நீக்கம் செய்ததுடன், ஜிண்டலை நீக்கம் செய்துள்ளது. ‘எந்த ஒரு பிரிவையோ மதத்தையோ இழிவுபடுத்தும் எந்தக் கருத்தியலுக்கும் கட்சி எதிரானது’ என்றும், ‘அப்படிப்பட்ட நபர்களையோ சித்தாந்தத்தையோ கட்சி ஒருபோதும் ஊக்குவிக்காது’ என்றும் பாஜக அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மிகவும் காலம் கடந்து எடுக்கப்பட்டது என்றும் நூபுர் ஷர்மாவிற்கு வழங்கப்பட்ட தண்டனை மிகவும் லேசானது என்றும் கருதும் விமர்சகர்கள் அவர் மீண்டும் கட்சியில் சேர்க்கப் பட்டு, விரைவில் அமைச்சராகப் பதவி உயர்வு அளிக்கப் படவும் வாய்ப்புள்ளது என்று சுட்டிக்காட்டுகிறார்கள்.

நூபுர் ஷர்மாவின் கருத்துகள் கட்சியின் நிலைப்பாட்



டைப் பிரதிபலிக்கவில்லை என்றும், அவை ஒரு சிறு கூட்டத்தின் கருத்துகளே என்றும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வேடிக்கையான ஒரு விளக்கமளித்தது. இது, விமர்சகர்களின் கைகளில் மீண்டும் ஒரு கசையைக் கொடுப்பதுபோல இருந்தது. அவர்கள் அதை உடனடியாகக் கைக்கொண்டு, ஆளும் கட்சியின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளரைச் சிறு கூட்டதைச் சேர்ந்தவர் என்று எப்படிக் கூறமுடியும் என்ற கேள்வியை எழுப்பினர்.

அதற்குள், இஸ்லாமிய நாடுகளின் கண்டனங்கள் வேகமாகப் பரவி, இந்தியாவின் நீண்ட நாள் நலனுக்குக் குந்தகம் ஏற்படும் நிலை ஏற்பட்டது. அரபு நாடுகளில் வெளியான சமூக ஊடகப் பதிவுகள், இந்தியாவைக் கடுமையாக விமர்சித்ததுடன், இந்து வாக்கு வங்கியைத் தேர்தல் வெற்றிக்குப் பயன்படுத்தும் நோக்கில், ஆளும் பாஜக மதப் பிரிவினையை ஊக்குவித்து வருவதாகவும் குற்றம் சாட்டின. குவைத் மற்றும் கட்டாரில் ட்விட்டரில் கொந்தளித்த கோபமடைந்த குடிமக்கள், இந்தியப் பொருட்களைப் புறக்கணிக்கக் கோரிப் பதிவுகள் இட்டனர். குவைத்தில் ஒரு பல்பொருள் அங்காடியில், அரபு மொழியில் ‘இந்தியப் பொருட்களை நாங்கள் நீக்கி விட்டோம்’ என்ற பெரிய பலகையை வைத்ததாக பி பி சி தெரிவித்தது.

இந்தியாவில் உள்ள விமர்சகர்களும் சர்வதேச உரையாளர்களும், பாஜக மேலிடமும் மோடி அரசாங்கமும் இஸ்லாமியர்களின் வலியைத் தணிக்கும் ஓர் அறிக்கையை ஏன் வெளியிடவில்லை என்று கேள்வி எழுப்பினர். பாஜக குறிப்பிடுவதைப்போல, நூபுர் ஷர்மா, ஒரு சிறு கூட்டத்தைச் சேர்ந்தவரல்லர் என்றும் அனைத்து வகை ஊடகங்களிலும் அரசின் கொள்கைகளையும் முடிவுகளையும் தீவிரமாக ஆதரிக்கும் கட்சியின் அதிகாரபூர்வ செய்தித் தொடர்பாளர் என் றும், லண்டனில் படித்த வழக்கறிஞரான இவர் தனது உரத்த, கடும் வாதங்களால் தொலைக்காட்சி விவாதங் களிலும் பொதுக்கூட்டங்களிலும் எதிராளியைத் திணறடிக்கக் கூடியவர் என்பதால், தொலைக்காட்சி சனல்களால் அதிகம் விரும்பப்பட்டவர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பாஜக மேலிடம், நூபுர் ஷர்மாவைத் தற்காலிகமாக மட்டுமே நீக்கியுள்ளதாகவும், இவரின் பேச்சை ட்விட்டரில் பகிரமட்டுமே செய்த ஜிண்டலுக்கு அதிக கடும் தண்டனையாகக் கட்சியிலிருந்தே வெளியேற்றியுள்ளதாகவும் சில விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

நபிகள் குறித்த தனது கருத்துகளுக்கு வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட் டுள்ள நூபுர் ஷர்மா, சிவபெருமான்மீது தெரிவிக்கப்பட்ட இழிவுபடுத்தும் கருத்தால் வேதனையடைந்துதான் தொலைக்காட்சி விவாதத்தில் உணர்ச்சிவசப்பட்டதாகவும் விளக்கியுள்ளார். அந்தத் தொலைக்காட்சி விவாதம், புனிதத் தலமான வாரணாசியில் உள்ள காசி விஷ்வ நாதர் கோவிலின் அருகில் உள்ள ஞானவாபி மசூதி குறித்த ஒரு சர்ச்சை தொடர்பானது. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு மாபெரும் இந்துக் கோவிலை அழித்து, அதன்மீது இந்த மசூதியை முகலாய மன்னர் ஔரங்கசீப் கட்டியதாக பாஜகவும் அதன் இந்துத்துவக் கூட்டாளி அமைப்புகளும் கோருகின்றன.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, இந்த மசூதியில் அண்மையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அது வீடியோ பதிவும் செய்யப்பட்டது. அதில் கிணற்றில் ஒரு கல் தண்டு இருப்பது வெளியானது. இந்து தரப்பினர் அதை சிவ லிங்கம் என்று கூற, இஸ்லாமியர்கள் அதை ஒரு நீரூற்றின் இடிபாடு என்றும், ஒரு சிலர் அது வெறும் சாலைக் குறியீடு என்றும் கூறினார்கள். இதனால் நூபுர் ஷர்மா வேதனையடைந்ததில் வியப்பில்லை. ஆனால், எதிர்தரப்பினரால் தூண்டப்பட்டபோதும், 37 வயதான, ஒரு படித்த பெண்மணி, தொலைக்காட்சி விவாதத்தில், மதத் துவேஷம் என்ற கண்ணிவெடிமீது கால் வைப்பதற்கு முன்னர், சிறிது விவேகத்துடன் செயல்பட்டிருக்க வேண்டாமா என்பதுதான் எனக்கு எழும் கேள்வி. உண்மையைத் தானே சொன்னார் நூபுர், குரானில் எழுதப்பட்டதைத்தானே அவர் கூறினார் என்று வாதிப் பது ஓர் ஆளும் கட்சியினருக்குப் பொருந்தாது. அவர், மிகப் பொறுப்புடனும், பொறுமையுடனும், கண்ணியமாகவும் நடந்துகொள்வது அவரின் கட்சி அரசுக்கு உகந்தது.

ஏற்கெனவே மோடி பதவியேற்றதிலிருந்து (2014) சிறுபான்மையினர், குறிப்பாக இஸ்லாமியர்கள் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதாக இந்தியாவில் மட்டுமல்லாமல், உலக அளவில் விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. குறிப்பாக, கடந்த இரண்டாண்டுகளாக, வட மாநிலங்களில் இந்தத் தீவிர இந்து தேசியவாதம் அதிகரித்து வருவதாக அச்சம் நிலவுகிறது. ஆர் எஸ் எஸ் முன்னெடுத்த அகண்ட பாரதம் என்ற இலக்கை நோக்கி பாஜகவும் அதன் இந்துத்துவக் கூட்டாளிகளும் காய் நகர்த்தி வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இமய மலையடிவாரத்தில் உள்ள உத்தராகண்டி ஹரித்வாரில் அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசிய ஆர் எஸ் எஸ் தலைவர் மோகன் பகவத், அடுத்த 10-15 ஆண்டுகளில் அகண்ட பாரதம் உண்மையாகும் என்று கூறியது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆர் எஸ் எஸ் குறிப்பிடும் அகண்ட பாரதம் என்பது, இந்தியா உட்பட, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, மியன்மார், திபெத், பூட்டான், நேபாளாம், அக்ஸாய் சின் ஆகியவையும் அடங்கியது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. இவரது கருத்து விமர்சனத்துக்குள்ளானதை அடுத்து, தங்கள் தலைவர் குறிப்பிட்ட அகண்ட பாரதம் புவிசார் அரசியல் சூழலில் தவறாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது என்றும் இந்தியாவின் தலைமையில் அண்டை நாடுகளுடனான கலாசார ஒருங்கிணைப்பையே அது குறிப்பதாகவும் மூத்த ஆர் எஸ் எஸ் தலைவர்கள் விளக்கமளித்தார்கள். ஆங்கிலேயர்களும் மற்ற ஆக்கிரமிப்பாளர்களும் வந்து இந்தப் பூமியைப் பிரிப்பதற்கு முன், பாரதம் என்பது இவை அனைத்தையும் உள்ளடக்கியே இருந்தது என்பது ஆர் எஸ் எஸ் தலைவர்களின் வாதம். பேராசை கொண்ட ஆட்சியாளர்களின் கொடும் போர்கள் என்னும் கரும்புள்ளிகளால் உருவாக்கப்பட்ட இந்த எல்லைகளைப் பொருட்படுத்தாமல், நாம் அனைவரும் கைகோத்து, உண்மையான கலாசார ஒருங்கிணைப்பில் நமது ஆத்மாக்களை ஒன்றிணைத்து, அதன் மூலம், வலி மிகுந்த கடந்த காலத்தை மறந்து, பரஸ்பர அன்பிலும் அக்கறையிலும் நனைந்த, ஓர் ஒளிமயமான எதிர் காலத்தை நோக்கிய பயணத்தில், பசியாலும் நோயாலும் ஏற்படும் ஒருவரின் கண்ணீரை ஒருவர் துடைத்து வாழும் ஒரு கனவை இமயமலையின் ஏரிக்கரையில் காண்போமா? அப்படி ஒரு காலம் வந்தால், துடைக்க, கண்ணீரே இருக்காதே! என்னே ஒரு கனவு!

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# எவரும் விரும்பாத ஜனாதிபதி எவரும் தெரிவுசெய்யாத பிரதமர்

## இலங்கையின் இன்றைய ஆட்சிமுறையின் இலட்சணம்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

தன்னைப் பதவி விலகி வீட்டுக்குப் போகுமாறு கோரிக்கை விடுத்து வீதிப்போராட்டங்களை நடத்தி வரும் மக்களுக்கும் இளைய தலை முறையினருக்கும் எதிரணிக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெளிவான செய்தியொன்றைக் கூறியிருக்கிறார்.

கடந்தவாரம் புளூம்பேர்க் செய்திச் சேவைக்கு நேர்காணலொன்றை வழங்கிய அவர் தனது ஐந்து வருட பதவிக்காலத்தின் எஞ்சிய இரு வருடங்களையும் நிறைவுசெய்த பின்னரே பதவியில் இருந்து இறங்கப்போவதாகவும் இரண்டாவது பதவிக்காலத்துக்கு மக்களிடம் ஆணைகேட்டு தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்றும் தெரிவித்திருந்தார். தோல்விகண்ட ஒரு ஜனாதிபதியாக தன்னால் பதவியில் இருந்து போகமுடியாது என்றும் அவர் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்று இலங்கையின் 7வது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்றபோது இரண்டரை வருட குறுகிய காலத்திற்குள் நாட்டு மக்களால் பெரிதும் வெறுக்கப்படும் ஒரு ஆட்சியாளராக மாறவேண்டிய நிலை தனக்கு வரும் என்றோ நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுசென்ற ஒரு ஜனாதிபதி என்ற அவப்பெயரைச் சம்பாதிக்கவேண்டியேற்படும் என்றோ கோட்டாபய ராஜபக்ச கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார். தேர்தலில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எந்தளவுக்கு முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்று ஒரு தடவை கேட்கப்பட்டபோது "எனக்கு இன்னொரு ஐந்து வருட பதவிக்காலம் இருக்கிறது" என்று உறுதியாகப் பதிலளித்த அவர் இவ்வளவு குறுகிய காலத்திற்குள் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவிக்கவேண்டிய நிலை தனக்கு ஏற்படும் என்றும் நினைத்திருக்கமாட்டார்.

மேலும் பல தசாப்தங்களுக்கு இலங்கையை ஆட்சிசெய்யும் கனவுடன் இருந்த தனது குடும்பத்தின் உறுப்பினர்களை பதவிகளில் இருந்து இறங்குமாறு கேட்கவேண்டிவரும் என்றோ ராஜபக்ச சகோதரர்களோ அல்லது வாரிசுகளோ இல்லாத நிருவாகம் ஒன்றுக்கு இவ்வளவு விரைவாக தான் தலைமை தாங்கவேண்டி வரும் என்றோ கூட அவர் நினைத்திருக்கமாட்டார்.

இலங்கை சுதந்திரத்துக்கு பின்னரான அதன் வரலாற்றில் முன்னென்றுமே கண்டிராத படுமோசமான பொருளாதார அனர்த்தத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், வானளாவ உயர்ந்துகொண்டு செல்லும் வாழ்க்கைச்செலவினாலும் அத்தியாவசிய உணவுவகைகள், எரிபொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துப்பொருட்களுக்கு நிலவும் மோசமான தட்டுப்பாட்டினாலும் மக்கள் திணறிக்கொண்டிருக்கும் நிலையில் நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு பயனுறுதியுடைய திட்டங்களை அறிவிக்கமுடியாமல் அரசாங்கம் அன்றாடம் மக்களை அச்சுறுத்தும் அறிவிப்புக்களைச் செய்துகொண்டிருக்கும் பின்புலத்தில் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி வெளிப்படுத்தியிருப்பதைக் காண்கிறோம்.



இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களில் வேறு எவருமே இரண்டாவது பதவிக்காலத்துக்கு தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று முதலாவது பதவிக்காலத்தின் இடைநடுவில் அறிவித்ததில்லை. அவ்வாறு அறிவித்த முதல் ஜனாதிபதி என்ற விநோதமான பெருமையை கோட்டாபய ராஜபக்ச தனதாக்கிக்கொண்டுள்ளார்.

தோல்வி கண்ட ஒரு ஜனாதிபதியாக தன்னால் பதவியில் இருந்துவிலகமுடியாது என்று கூறியிருக்கும் அவர் தனது இதுவரையான இரண்டரை வருட கால ஆட்சியின் இலட்சணத்தை முதலில் நினைத்துப்பார்க்கவேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்த பிறகு பதவியில் இருந்த எந்த தலைவருமே நாடும் மக்களும் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகளைக் கண்டு வெற்றிபெற்ற ஜனாதிபதிகளாக வீடு சென்றதில்லை. சகலருமே மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், நிலைவரங்களை முன்னையதை விடவும் மோசமானதாக்கிவிட்டே சென்றார்கள். இலங்கை வெளிநாட்டுக்கடன்களை மீளச்செலுத்த வக்கற்றதாகி வங்குரோத்து நிலையை வேறு எந்த ஜனாதிபதியின் கீழும் அடைந்ததில்லை. கோட்டாபயவின் ஆட்சியில்தான் அந்த கதி நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறான ஒரு நிலையில் தோல்வியடையாத ஜனாதிபதியாக வீட்டுக்குப் போவது குறித்து அவர் கனவு கண்டுகொண்டிருக்கிறார் போலும்.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்த தனது தன்னிச்சையான தீர்மானங்கள் சிலவற்றின் தவறை ஜனாதிபதி ஏற்கெனவே ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஒத்துக்கொண்டிருக்கிறார். கடந்த வருடம் ஏப்ரலில் இரசாயனப் பசளை இறக்குமதியை திடீரெனத் தடை செய்த தனது தீர்மானத்தின் விளைவாக விவசாயத்துறைக்கு ஏற்பட்ட பாரதூரமான பாதிப்பை ஒத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதில் காட்டிய தாமதத்தையும் தவறு என்று அவர் ஒப்புக் கொண்டார்.




சர்வதேச நாணய நிதியத்திடம் குறைந்தபட்சம் 6 மாதகாலத்துக்கு முன்னராவது போயிருந்தால் இன்றைய அனர்த்தத்தை தவிர்த்திருக்கலாம் என்று ஜனாதிபதி புளூம்பேர்க் நேர்காணலில் கூறியிருந்தார். 2019 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற கையோடு தனது நேசசக்திகளான பெரு முதலாளித்துவ கோர்ப்ப ரேட் நிறுவனங்களின் உரிமையாளர்கள் பயனடையக் கூடியதாக தன்னால் மேற கொள்ளப்பட்ட பாரிய வரிக்குறைப்பு தீர்மானத்தின் தவறை அவர் இன்னமும் பகிரங்கமாக ஒத்துக் கொள்ளவில்லை. ஆனால், அரசாங்கத்துக்கு வருடாந்தம் 600 கோடி ரூபா வருமான இழப்பை ஏற்படுத்திய அந்த தீர்மானத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைவிடாமல் மக்களுக்கு நினைவுபடுத்திய வண்ணமேயிருக்கிறார்.

ஜனநாயக அரசியல் அணுகுமுறைகளிலும் நடைமுறைகளிலும் அக்கறைகாட்டாத இயல்பைக் கொண்ட கோட்டாபய ராஜபக்ச, எப்போதுமே தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதை வழக்கமாகக் கொண்டவர் என்பது இதுவரையான அனுபவம். புளூம்பேர்க் நேர்காணலில் கூட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை தொடரவேண்டுமென்றால் முற்று முழுதான அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்கிவிட்டு பாராளுமன்றத்தை ஆட்சிமுறையில் இருந்து விலக்கிவைக்கவேண்டும் என்றும் கலப்பான ஆட்சிமுறை பொருத்தமானதல்ல என்றும் அவர் கூறினார். ஒன்றில் ஜனாதிபதி ஆட்சி முறை இருக்கவேண்டும் அல்லது வெஸ் மினிஸ்டர் பாராளுமன்ற ஆட்சி முறை இருக்கவேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. இந்த சிந்தனை இதுவரையான அவரது ஆட்சியில் செல்வாக்கு செலுத்தியதை நடைமுறையிலும் காணக்கூடியதாக இருந்தது. தனது கையில் முழுமையாக அதிகாரங்களைக் குவிப்பதற்காகவே அவர் 20 வது அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டுவந்தார். மட்டுமீறிய அதிகாரங்களை கையில் வைத்திருந்தும் அவரால் நாட்டை உருப்படியாக ஆட்சி செய்யமுடியவில்லை.

பிரதமராக விக்கிரமசிங்கவை நியமித்தமை ஜனநாயக நடைமுறைகளை தலைகீழாக்கிய ஜனாதிபதி கோட்டாபயவின் மிக அண்மைய நடவடிக்கையாகும். கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி ஒரு ஆசனத்தைக்கூட பெறவில்லை. நாடுபூராவும் அந்த கட்சிக்கு கிடைத்த மொத்த வாக்குகளின் அடிப்படையில் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பயன்படுத்தியே விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்.


பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவைப் பெறக்கூடியவர் என்று தன்னால் கருதப்படக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி பிரதமராக நியமிக்கலாம் என்று அரசியலமைப்பு கூறுகிறது. ஆனால் ஐக்கிய தேசிய கட்சியின் தன்னந்தனி உறுப்பினராக இருக்கும் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்துவிட்டு அவரின் கொள்கைகளுடன் முற்றாக முரண்படுகின்ற சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றப் பெரும்பான்மை மூலம் அரசாங்கத்தைக் காப்பாற்றும் கேலிக்கூத்தை பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு பிரதமர் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளுக்கு மாத்திரமே தங்களால் ஆதரவளிக்கமுடியும் என்றும் அரசியலமைப்புக்கு திருத்தங்களைக் கொண்டுவரும் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கமுடியாது என்றும் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் வெளிப்படையாக கூறுகிறார்கள்.

(9 ஆம் பக்கம் பார்க்க...)

# லண்டனில் மலையக இலக்கிய மாநாடும் ஓவிய கண்காட்சியும்:

## மலையக இலக்கியம் உலக அரங்கில் பேசப்படும்!



"நாங்கள் லண்டனுக்கு வந்திருந்த போது, மலையகத்தின் மறைந்த எழுச்சித் தலைவர் பெ. சந்திரசேகரம், புலம்பெயர்ந்து வாழும் மலையக தமிழர்கள் அனைத்துலக ரீதியில் ஓர் அமைப்பாக உருப்பெறவேண்டும் என்று, மு. நித்தியானந்தனுடன் லண்டனில் பலதடவைகள் கலந்துரையாடி இருந்தார். அனைத்துலக ரீதியில் அத்தகைய அமைப்பு உருவாக இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என்று கூறத் தெரியவில்லை. ஆனால், அத்தகைய அமைப்பிற்கு லண்டனில் நடைபெறும் 'மலையக இலக்கிய மாநாடு' ஓர் அடித்தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை" என்று, பதிப்பாளரும் மலையக ஆய்வாளருமான எச். எச். விக்கிரமசிங்க செய்தி ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மலையக தமிழாராய்ச்சி மாநாடு 1996, 1997ஆம் ஆண்டுகளில் கண்டியில் சிறப்பாக நடைபெற்று, அம்மாநாட்டின் ஆய்வுக்கட்டுரைகள் ஒரு தொகுதியாகவும் வெளியிடப்பட்டது. அம்மாநாடு நடந்து இன்று 25 ஆண்டுகள் கடந்து போய்விட்டன. ஆனால், அதன் தொடர்ச்சி பேணப்படவில்லை. இன்றோ, இலங்கைச் சூழல் மிக துயரமான கட்டத்தை அடைந்து விட்டநிலையிலும், லண்டனில் இம்மாநாடு திட்டமிட்டபடி சிறப்பாக நடைபெறுவது மலையக இலக்கியவாணர்களுக்கும், இலக்கியச் சுவைஞர்களுக்கும் பெரும் உற்சாகத்தைதந்துள்ளது.

மிகச் சிறந்தமுறையில் திட்டமிடப்பட்டு, முறையாக நூல்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆற்றல்மிக்க விமர் சகர்களை உள்வாங்கி, ஐரோப்பா தழுவிய நிலையில் இம்மாநாடு நடை பெறுவது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இலங்கையிலிருந்து பல நூல்களை எழுத்தாளர்களிடமிருந்து சேகரித்து லண்டனுக்கு அனுப்பி வைக்கும் பொழுதில் சம்பந்தப்பட்ட எழுத்தாளர்கள் காட்டிய அக்கறையினை நேரில் பார்த்து அனுபவித்தேன். பாரபட்சமின்றி மூத்த எழுத்தாளர்கள், இளம் எழுத்தாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்று அனைவரையும் அணைத்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் இம்மாநாட்டு ஒழுங்கு முறை பெரிதும் பாராட்டிற்குரியதாகும்.

இலக்கிய நிகழ்விற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட அதேவேளை, ஓவியர் கே. கிருஷ்ணராஜா மலையகத்தில் 2019ஆம் ஆண்டு நிகழ்த்திய ஓவியப்போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட ஓவியங்களைப் பேணி, இம்மாநாட்டில் மலையக ஓவியக் கண்காட்சியை நிகழ்த்தவிருப்பது மிகப்பெருஞ் சிறப்பாகும். கோ. நடேசய்யர் நடத்திய 'வர்த்தகமித் திரன்' பத்திரிகை உட்பட நூற்றுக்கணக் கான மலையக நூல்களும், சஞ்சிகை களும் காட்சிக்கு வைக்கப்படவிருப் பதாக அறிந்து மகிழ்ச்சியுற்றேன்.

உலக அரங்கில் மலையக இலக்கியம் பேசப்படுவதற்கு இம்மாநாடு முக்கிய புள்ளியாக அமையும் என்று நம்புகிறேன். இம்மாநாட்டினை நடத்துவதற்கு முன்னின்றுழைக்கும் லண்டன் 'விம்பம்' அமைப்பினருக்கு என் பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரியன. விம்பம் அமைப்பினர் மலையக இலக்கிய மாநாட்டினை இனிவரும் ஆண்டுகளிலும் முன்னெடுத்துச்செல்லவேண்டும்.

# பதின்மூன்று

**திரு எஸ்.திருச்செல்வம்**

மேற்குலகைப் பொறுத்தளவில் பதின்மூன்று இலக்கம் எப்போதும் துர்க்குறியான, அதிர்ஷ்டமில்லாத ஒன்றாக கருதப்பட்டு வருகிறது. கட்டிடங்களிலும், மாடிக் குடியிருப்புகளிலும், எண்சோதிட கூட்டுத் தொகையிலும் பதின்மூன்று இலக்கம் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டே வருகிறது.

இலங்கையைப் பொறுத்தளவில் - முக்கியமாக தமிழர்களின் அரசியல் விவகாரங்களில் பதின்மூன்று இலக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாக முன்னிலையில் இடம்பெற்று வருகிறது. வரலாற்று ரீதியாக சில சம்பவங்களை இதன்கண் பார்க்கலாம்.

சிறீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் முதலாவது குடியரசுக்கான அரசியல் யாப்பு 1972ல் உருவாக்கப்பட்டவேளை, தமிழரசுக் கட்சியின் பதின்மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதனை எதிர்த்து பகிஷ்கரிப்பு செய்தனர்.

1983 யூலை மாதம் 23ம் திகதி திருநெல்வேலியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பதின்மூன்று ராணுவத்தினர் கொல்லப்பட்டதையடுத்து தமிழரின் விடுதலைப் போராட்டம் திருப்புமுனையைக் கண்டது.

1985 யூலை பதின்மூன்றாம் திகதி திம்புப் பேச்சுவார்த்தையின்போது, தமிழரை ஏமாற்றும் இலங்கையின் ஒற்றையாட்சியின் கீழான தீர்வுத் திட்டத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தன முன்வைத்ததோடு அப்பேச்சுவார்த்தை முறிவு கண்டது.

1987 யூலையில் ராஜீவ் காந்தியும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் வழியாக தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணவென பதின்மூன்றாவது அரசியல் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இன்றுவரை அது நிறைவேறாத ஒன்றாகவே இழுபடுகிறது.

விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவுபட்டு மூன்றாகி, தமிழ்த் தேசிய கட்சிகள் என்று இயங்கும் இவ்வேளையிலும், இவற்றின் நாடாளுமன்ற உறுப்பினஉகள் எண்ணிக்கை பதின்மூன்றாக இருப்பது விநோதமானது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் பதின்மூன்றாவது ஆண்டான இவ் வருடத்தில், முதன்முதலாக தமிழர் தாயகத்துக்கு வெளியே - கொழும்பு காலிமுகத்தில் அமைந்துள்ள 'கோதா கோ கம; இடத்தில் நினைவேந்தல் இடம்பெற்றது. சகல இன மக்களுடன் பௌத்த பிக்குகளும் இணைந்து ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் நினைவேந்தல் பேரணியை நடத்தி, ஈகைச்சுடரேற்றி ஒரு மாற்றத்தைக் காட்டியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையென கனடிய நாடாளுமன்றம் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியதும் இதே முள்ளிவாய்க்காலின் பதின்மூன்றாம் நினைவேந்தல் ஆண்டில்தான்.

2020ம் ஆண்டு பொதுத்தேர்தலில் படுதோல்வி கண்ட ரணில் விக்கிரமசிங்க தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகியபோது அவருக்கு சபையில் ஒதுக்கப்பட்ட ஆசன இலக்கம் பதின்மூன்று. அதிலிருந்துதான் இப்போது பிரதமராகியுள்ளார்.

இந்தப் பதின்மூன்று இன்னும் என்னென்ன செய்யக் காத்திருக்கிறதோ தெரியாது.

**(தமிழர் தகவல்- கனடா)**

# எவரும் விரும்பாத ஜனாதிபதி

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

21வது அரசியலமைப்புத் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேறுவது குறித்து நேர்காணலில் ஜனாதிபதி கிளப்பிய சந்தேகம் பொதுஜன பெரமுன பாராளுமன்றக்குழு மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதில் அவருக்கு இருக்கும் இயலாமையை வெளிக்காட்டுகிறது. ஒரேயொரு உறுப்பினராக பாராளுமன்றத்தில் தனது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர் பிரதமராக நியமிக்கப்படக் கூடிய அதிசயம் இலங்கையைத் தவிர உலகில் வேறு எந்த நாட்டிலும் நடந்ததில்லை. பிரதமர் ஒருவரைத் தேடுவதில் ஜனாதிபதி கோட்டாபய கடந்த மாதம் எந்தளவுக்கு அந்தரித்தார் என்பதை கடந்தவாரம் பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா வெளியிட்ட தகவல் உணர்த்தியது.

பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு தன்னை ஜனாதிபதி கேட்டதாகவும் ஆனால் தனது கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவளிக்க முன்வந்தால் மாத்திரமே பிரதமராகுவதற்கு இணங்க மடியும் என்று தான் நிபந்தனை விதித்ததாகவும் பொன்சேகா சபையில் கூறினார். தன்னுடன் தொலைபேசியில் ஜனாதிபதி பேசிய மூன்று மணித்தியாலங்களில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றுக் கொண்டார் என்று குறிப்பிட்ட முன்னாள் இராணுவத்தளபதி, தனது புண்ணியத்தினால் தான் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கிறார் என்று அவருக்கு நேரடியாகவே கூறினார்.

கோட்டாபயவுக்கும் பொன்சேகாவுக்கும் இடையிலான உறவுமுறையின் இலட்சணம் எல்லோருக்கும் தெரியும். அவ்வாறிருந்தும் கூட அவரை பிரதமராக வருமாறு கேட்குமளவுக்கு விரக்தியின் விளிம்பில் ஜனாதிபதி இருந்தார் என்று தெரிகிறது.

முன்னர் இந்த பத்தியில் சுட்டிக்காட்டப்பட்டதைப் போன்று, ஒரு அமைதிவழி அரசியல் புரட்சியின் பரிமாணங்களை எடுத்திருந்த மக்களின் வீதிப் போராட்டங்ளையும் அவர்களின் கோரிக்கைகளையும் அலட்சியம் செய்து கோதாபய ராஜபக்ச பதவியில் இருந்து விலகாமல் தொடர்ந்து தனது பதவிக்காலம் முடியும் வரை ஆட்சியதிகாரத்தில் இருக்கத் தீர்மானித்திருக்கிறார் என்று தெரிகிறது. ஆனால், அவர் ஏன் பதவியில் இருக்கக்கூடாது என்பதற்கு கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் முன்வைத்த காரணத்தை விடவும் வேறு காரணம் எதுவும் தேவையில்லை.

முதல் நாள் பிரதமர் பொருளாதார நிலைவரம் குறித்து வெளியிட்ட விசேட அறிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்ற சுமந்திரன், ஜனாதிபதியாக பதவியேற்ற கையோடு கோதாபய அறிவித்த பாரிய வரிக்குறைப்புக்கள் இன்றைய பொருளாதார இடர் நிலைக்கான காரணிகளில் முக்கியமான ஒன்று என்று சுட்டிக்காட்டினார்.

அந்த வரிக்குறைப்புகள் குறித்து முன்னாள் நிதியமைச்சர் காலஞ்சென்ற மங்கள சமரவீர செய்த முன்னெச்சரிக்கைகளையும் அவர் நினைவுபடுத்தினார். கோதாபயவின் "சுபிட்சத்துக்கும் சீர்மைக்குமான வருங்கால நோக்குகள் " (vistas of prosperity and splendour) என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டவற்றையும் இன்றைய நிலைவரங்களையும் ஒப்பிட்டு வாசிப்பவர்கள் பட்டினியால் சாவதற்கு முதல் வயிறுகுலுங்கச் சிரித்தே செத்துப்போவார்கள் என்று நகைச்சுவையாக குறிப்பிட்ட சுமந்திரன், 2019 அக்டோபரில் மங்கள சமரவீர அந்த விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த வரிக்குறைப்புகள் நடைமுறைப் படுத்தப்பட்டால் இலங்கை லெபனானையும் வெனிசூலாவையும் போன்று வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றுவிடும். அந்த யோசனைகள் இலங்கையை வங்குரோத்து நிலையை நோக்கி கடுகதி ரயிலில் ஏற்றிச் சென்றுவிடும் என்று கூறியதை நினைவு படுத்தினார்.

இன்றைய பொருளாதார இடர்நிலையின் சூத்திரதாரியான ஜனாதிபதியை பதவியில் தொடர்ந்து வைத்துக் கொண்டு மீட்சிக்கான நடவடிக்கைகள் பயன்தரும் என்று எதிர்பார்க்கமுடியாது என்பதே சுமந்திரனின் வாதத்தின் மையப்பொருளாகும்.

பிரதமர் மகிந்த ராஜபக்ச ஏன் பதவி விலகினார்? அமைச்சரவை ஏன் பதவி விலகியது? மத்திய வங்கி ஆளுநர் ஏன் பதவி விலகினார்? நிதியமைச்சின் செயலாளர் ஏன் பதவிவிலகினார்? என்று கேள்விகளை எழுப்பி சுமந்திரன் ஜனாதிபதியும் நிச்சயம் பதவிவிலக வேண்டும் என்பதை அழுத்தி வலியுறுத்தினார்.

இத்தகையதொரு சூழ்நிலையில், ஐந்து வருடங்களுக்கு பதவியில் இருப்பதற்கு தனக்கு 69 இலட்சம் மக்களின் ஆணை இருக்கிறது என்று கூறிக்கொண்டு ஜனாதிபதி பதவியில் கோட்டாபய தொங்கிக்கொண்டிருப்பது பொருத்தமானதல்ல.

சுபிட்சத்தை கொண்டு வருவதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணாக இன்று நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்து அத்தியாவசிய பொருட்களுக்காக மக்களை மைல்கணக்கான வரிசைகளில் காத்துநிற்க வைத்த பிறகு அந்த ஆணைக்கு உரிமைகோருவதற்கு அவர் தார்மீக அடிப்படையில் தகுதியானவரல்ல.

இன்று நாம் காண்பது எவருமே விரும்பாத ஜனாதிபதியையும் எவருமே தெரிவு செய்யாத பிரதமரையும் கொண்ட ஒரு அரசாங்கத்தையேயாகும். இதுவே இலங்கை ஜனநாயகத்தின் இன்றைய இலட்சணம்.

தனது ஒரு தம்பி மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முடிவில் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றிருக்கவேண்டும் என்று சில வாரங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் காலங்கடந்த அறிவுரையைக் கூறிய மூத்த சகோதரர் சமால் ராஜபக்ச, இன்னொரு தம்பி ஜனாதிபதி கோட்டாபயவுக்கு நேரகாலத்தோடு அறிவுரையைக் கூறுவாரா?

# அரசியல் துறவறத்துக்கு கோட்டா தயார்!

## பசிலுடன் சுமந்திரன் இணைவது ஏன்?

பனங்காட்டான்

விநோதமானவரே விநோதமானவரே என்ற சினிமாப் பாடலொன்று சில காலமாக பலராலும் விரும்பிக் கேட்கப்பட்டது. ஏதாவதொன்றை விநோதமாகச் செய்வதை இப்படி அழைப்பார்கள்.

கடந்த ஒரு மாதமாக இலங்கை அரசியலில் அவசரம் அவசரமாகவும், எதிரும் புதிருமாகவும் இடம்பெறும் சம்பவங்களைப் பார்க்கையில் விநோதமாக இருக்கிறது. பிரபலமான வின்ஸ் லோஸ் அகராதி விநோதம் என்ற சொல்லுக்கு பொழுதுபோக்குக்காக - மற்றவர்களை உற்றுநோக்க வைக்கும் எண்ணத்தில் மாயவித்தை காட்டுவதை அர்த்தமாகக் குறிப்பிடுகிறது.

இலங்கை அரசியலில் இடம்பெறும் விநோதங்களை அவ்வாறு அர்த்தப்படுத்திப் பார்க்க முடியாது. எல்லாமே தலைகீழாக இடம்பெறுகின்றன.

2019ல் இடம்பெற்ற தேர்தலில் 69 லட்சம் வாக்குகளால் ஜனாதிபதிப் பதவிக்கு வந்தவர் கோட்டாபய. 2020ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 68 லட்சம் வாக்குகளைப் பெற்ற பொதுஜன பெரமுனவின் தலைவரான மகிந்த பிரதமரானார். அரசியலில் தம்பியும் அண்ணனும் முறையே ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளுக்கு வந்தது புதுமை.

இலங்கையின் முதலாவது அரசியற் கட்சி என்ற பெயரைப் பெற்ற ஐக்கிய தேசிய கட்சி 2020ம் ஆண்டுத் தேர்தலில் இரண்டரை லட்சம் வாக்குகளை மட்டும் பெற்று ஒரு ஆசனத்தைக்கூட பெறமுடியாது போனது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரில் புதிய கட்சியை உருவாக்கி இத் தேர்தலில் 27 லட்சம் வாக்குகளைப் பெற்றதுடன் நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவருமானார். இதுவும் ஒரு புதுமை.

இந்தப் புதுமைகளை ஓரந்தள்ளி விட்டு, கடந்த மாதம் (மே) 9ம் திகதி இடம்பெற்றவைகளை விநோதமானவை எனலாம். 68 லட்சம் வாக்குகளால் பிரதமரான மகிந்த இதே நாளில் பதவியை ராஜினாமா செய்தார். ஜனாதிபதியின் கோரிக்கைக்கு இணங்க - ஆனால் மனம் ஒப்பாது இது இடம்பெற்றது. மறுநாளான மே பத்தாம் திகதியன்று இரண்டரை லட்சம் வாக்குகளை மட்டும் தேர்தலில் பெற்ற கட்சியின் தலைவரான - ஆனால் தேர்தலில் வெற்றி பெறாத ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார் கோட்டாபய.

ஒரு நாடகத்தின் முதலாம் கட்டம் இதுவென்றால், இரண்டாம் கட்டம் இதனிலும் விநோதமானது. எப்படியாவது ரணிலை பிரதமர் பதவியிலிருந்து இறக்கி வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று திடசங்கற்பம் பூண்டு அதற்கேற்றவாறு பொதுஜன பெரமுனவினரை வழிநடத்திய பசில் ராஜபக்ச தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்துள்ளார். இது ஜூன் 9ம் திகதி இடம்பெற்றது.

மே 9ல் பிரதமர் பதவியிலிருந்து மகிந்த விலக, யூன் 9ம் திகதி பசில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார். இலங்கை அரசியலில் இவை வித்தியாசமான விநோதங்கள்.

இலங்கை அரசியலில் ரணிலின் அணுகுமுறையும் சாமர்த்தியமும் நாற்பத்தைந்து வருட அனுபவத்தால் வந்தது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்ததால் பெற்ற அனுபவம் வேறு. இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் ராஜபக்சக்களை தோற்கடிக்கவென தமது கட்சியின் சார்பில் இருவரை (சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன) நிறுத்திய அனுபவம் இன்னும் வேறானது. எந்தவொரு கட்சித் தலைவரும் இவ்வாறு விட்டுக் கொடுத்து அரசியல் செய்யவில்லை. தனது தோல்வியை எதிர்பார்த்தவர் தனது கட்சி வெல்ல வேண்டுமென்று எண்ணி இவ்வாறு நடந்துகொண்டது விசித்திரமானது.

இப்போதும் அதே வியூகங்களையே அவரிடம் காண முடிகிறது. கோதாவும் மகிந்தவும் இணைந்து நிறைவேற்றிய இருபதாம் அரசியல் திருத்தத்தை இல்லாமல் செய்ய இருபத்தோராம் திருத்தத்தை நிறைவேற்ற உறுதி கொண்டுள்ளார் ரணில். தமது ஜனாதிபதி பதவியைக் காப்பாற்றுவதற்காக - தமது சகோதரர்களையும் துறந்து ரணிலோடு இணைந்து போகிறார் கோட்டா. இருவர் நிலைப்பாடும் கரணம் தப்பினால் மரணம் போன்றது.



> மகிந்தவைத் தொடர்ந்து பசிலும் வீடேகி விட்டார். அடுத்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென உத்தரவாதம் கொடுக்கும் கோட்டாபய, அதுவரை தம்மைப் பதவியில் இருக்க விடுமாறு இரந்து கேட்கிறார். இதற்கிடையில் நாடாளுமன்றத்தை கலைக்கக் கோரும் பசிலுடன் ஒத்தூதுகிறார் சுமந்திரன். நல்லாட்சியில் ரணிலின் உற்ற தோழனாக இருந்த சுமந்திரன் இப்போது அவரை பரம எதிரியாகப் பார்ப்பதுடன் நிற்காது பசிலின் கூட்டாளியாவது ஏன்?

இப்போது இந்த அரசியல் சூதாட்டத்தில் பலியாகியுள்ளவர் பசில் ராஜபக்ச. இருபத்தோராவது அரசியல் திருத்தம் இரட்டைப் பிரஜாவுரிமைக் காரர்களை எந்தப் பதவியும் வகிக்க முடியாது தடுப்பது. இத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமென்பது ஓரளவுக்கு நிச்சயமாகிவிட்டது. அதன் பின்னர் பதவி பறிபோவதை விட அதற்கு முன்னர் அப்பதவியிலிருந்து விலகி விட்டார் பசில்.

இதிலுள்ள சிறப்பம்சம் என்ன வென்றால், பசிலைப் போன்றே ரணிலும் தேசியப்பட்டியலூடாக நாடாளுமன்ற உறுப்பினரானவர் என்பதுவே. அண்ணன் ஜனாதிபதியின் ஆட்சியில் தம்பி பசிலின் பதவிக்கு வேட்டு வைத்துள்ளார் ரணில் என்றால், குருசேத்திரத்தில் அரசியல் சதுரங்கம் எவ்வாறு விளையாடப் படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாவிட்டாலும், அரச நிர்வாகத்தில்



பங்கேற்காவிட்டாலும் அரசியலைத் தாம் தொடரப் போவதாக பசில் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை அவர் விடுத்த எட்டாம் திகதியன்று அவரது மனைவி அமெரிக்கா திரும்பி விட்டார். இவர்களின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அங்குதான் வசிக்கிறார்கள். இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள பசில் எப்போதும் அங்கு போய் வரலாம்.

பசிலின் அறிவிப்புக்கு நிகரான அறிவிப்பொன்றை கோட்டாபய இந்த வார முற்பகுதியில் விடுத்திருந்தார். அந்த அறிவிப்பு பின்வருமாறு அமைந்தது - தோல்வி அடைந்த ஜனாதிபதியாக நான் வெளியேற மாட்டேன், ஆனால் மீண்டும் தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன் என்பதுவே இந்த அறிவிப்பு.

கோட்டா கோ ஹோம் பேரெழுச்சி ஆரம்பித்த நாளிலிருந்து ஜனாதிபதி பதவியிலிருந்து விலக மறுத்து வந்த இவர், அறுபத்தொன்பது லட்சம் மக்கள் தம்மை இப்பதவிக்குக் கொண்டு வந்தவர்கள் என்றும் அவர்கள் தம் பக்கமே உள்ளனர் என்றும் அறைகூவி வந்தார். இப்பதவியை தக்க வைப்பதற்காகவே மற்றைய ராஜபக்சக்களின் பதவிகளைப் பறித்தார். ஆனால், இப்போது அதற்கும் அப்பால் சென்று ஒரு விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார். அது - நான் மீண்டும் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்பது.

இந்த உத்தரவாதம் எட்டாத பழம் புளிக்கும் என்பது போன்றது. மார்ச் 31ம் திகதியிலிருந்து பதுங்கு குழிக்குள் பாதுகாப்பாக வாசம் செய்பவர் எவ்வாறு அடுத்த தேர்தலை நினைத்துப் பார்க்க முடியும். அதனாற்தான் கிடைத்த பதவியை முழுமையாக அனுபவிக்க விரும்புகிறார். தோற்றவராக வீடு போக எந்த ராணுவத்தினரும் விரும்புவதில்லைத்தானே!

இந்தப் பின்னணியில்தான் இப்போது அவர் விடுத்திருக்கும் அறிவிப்பின் உள்ளார்ந்த அர்த்தத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும். நான் மீண்டும் அரசியல் பக்கம் தலை வைத்தும் படுக்க மாட்டேன் தயவு செய்து என்னை இப்பதவிக் காலம் முடியும்வரை ஜனாதிபதியாக இருக்க அனுமதியுங்கள் என்று தம்மைப் பதவி விலகக்கோரும் போராட்டக்காரர்களிடம் இவர் விநயமாக இரந்து கேட்பது போலவே இதனைப் பார்க்க வேண்டும்.

சர்வதேசத்தின் கண்களில் நன்கு அறிமுகமான, நன்கு அறியப்பட்ட ரணிலை முன்னிறுத்தி தம்மைப் பல வழிகளிலும் காப்பாற்றிக்கொள்ள முனைகிறார் கோதா. தேவைப்பட்டால் ரணிலின் முதுகிலும் குத்தத் தயங்காதவர். உலகிலுள்ள அத்தனை வங்கிகளின் கதவுகளும் தட்டப்படுகிறது. சீனா, இந்தியா என்பவற்றுக்கு அப்பாற் சென்று நேரடியாகவே முக்கிய வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து உதவி கோருகிறார் கோட்டா.

சர்வதேச நாணய வங்கியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பல்லாயிரம் அரச ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பும் திட்டம் தயாராகிறது. பொதுமக்களுக்கான சில சலுகைகளில் வெட்டு வருகிறது. அலுவலகங்களை வெள்ளிக்கிழமைகளில் மூடி ஊழியர்களை வீட்டில் நின்று தோட்டம் செய்யுமாறு நவீன ஆலோசனை வழங்கப்படுகிறது.

பலாக்காய், ஈரப்பலாக்காய், வற்றாளைக் கிழங்கு போன்றவற்றை தாராள மாகச் சாப்பிடுமாறு இலவச ஆலோச னையும் கொடுக்கப்படுகிறது. சமையலுக்கு எரிபொருள் இல்லாததை மறைக்க விறகுகளைப் பயன்படுத்தினால் ஆயுள் கூடுமென அபார கண்டுபிடிப்பு வேறு.

இவைகளுக்கிடையே நாடாளுமன் றத்தை உடன் கலைத்து தேர்தல் நடத்துமாறு பசில் ராஜபக்ச சவால் விடுத்துள்ளார். சொல்லி வைத்து பேசுவது போல தமிழ் தேசிய கூட்டமைப்பின் சுமந்திரனும் அதே வேண்டுகோளை விடுக்கிறார்.

நல்லாட்சிக் காலத்தில் ரணிலின் உற்றதோழனாகவிருந்த சுமந்திரன், இன்று அவரை பகிரங்கமாக எதிர்ப்பதோடு நிற்காது, முழுமையாக பசிலின் உயிர்த்தோழனாக மாறியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

கடந்த பொதுத்தேர்தல் முடிவுக்கான கைமாறு இதுவென கட்சி வட்டாரங்களில் பேசப்படுகிறது. எல்லாமே சந்திக்கும் சந்தைக்கு வரும் நேரம் நெருங்கி வருகிறதாகவும் கூறுகிறார்கள்.

# பாண் விலையதிகரிப்பு ஏற்படுத்தியுள்ள பாதிப்பும் நெருக்கடியும்!



சாமானிய மக்களுக்கு மாத்திரமல்ல நடுத்தர மக்களுக்கும் இலங்கையில் பாண் என்பது இன்றியமையாத உணவு. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி அத்தியாவசிய பொருட்கள் எல்லாவற்றின் விலையையும் பன் மடங்கு அதிகரிக்கச் செய்திருக்கின்றது. அதற்கு பாணின் விலையேற்றமும் விதிவிலக்கு அல்ல. ஆனால் அதன் விலையேற்றம் என்பது பல்வேறு தரப்பினரையும் வெகுவாகப் பாதித்திருப்பதை உணரமுடிகின்றது.

கோதுமை மாவின் விலை சர்வதேச சந்தையில் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலை மாத்திரமன்றி, சர்வதேச சந்தையில் பாரிய பற்றாக் குறையும் ஏற்படலாம் என்று சர்வதேச மட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. உலகின் கோதுமைமா தேவையில் சுமார் முப்பது வீதத்திற்கும் அதிகமான கோதுமையை ரஷ்யாவும் உக்ரைனுமே வழங்குகின்றன. அங்கு நடந்துகொண்டிருக்கும் போர் காரணமாக கோதுமை ஏற்றுமதி முற்றாக தடைப்பட்டிருப்பதும் அதன் விலையேற்றத்திற்கும் பற்றாக்குறைக்கும் காரணமாகிவிடுகின்றபோதிலும், இலங்கையில் இன்னமும் அத்தகைய பற்றாக்குறை ஏற்படாவில்லை என்றாலும், அதன் விலையேற்றம் பாணின் விலையிலும் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அது தொடர்பாக மனம் திறக்கிறார்கள் பாண் உற்பத்தியோடும் விற்பனையோடும் சம்பந்தப்பட்டவர்கள்.

**அறிக்கையிடல் - என். குகராஜ்**



### க.சுரேஷ்
(யாழ். ஆஸ்பத்திரி வீதி பலசரக்கு கடை உரிமையாளர்)

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக கடை ஒன்றினை நடாத்தி எனது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றேன். பாண், பணிஸ் போன்ற பேக்கரி உற்பத்தி பொருட்களின் விற்பனை என்பது ஒரு முக்கியமான வியாபாரமாக என்னால் முன்னெடுக்கப்படுகின்றது.

ஒவ்வொரு நாளும் காலையில் வீட்டில் இருந்து பேக்கறிக்குச் சென்றுபாண் எடுத்துக்கொண்டுதான் எனது கடையை திறப்பேன். ஒவ்வொரு நாளும் காலை, மாலை பத்து இறாத்தல் பாணுக்குமேல் விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் தற்போது மூன்று இறாத்தல் பாண் மாத்திரம் விற்பனை செய்யப்படுகின்றது. பாண் விற்பனை இடம் பெற்றால் எமக்கு ஏனைய பொருட்களின் விற்பனையும் இடம் பெறும். பாண் வியாபாரத்தின் மூலம் இலாபத்தைப் பெற்றுக் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் தற்போது பாண் உற்பத்தியும் குறைவு முன்னரைப் போல பேக்கரிகளில் இருந்து அதிகளவு பாண் கிடைப்பதில்லை. அதோடு பாண் அதிகவிலை என்பதனால் பாண் வாங்குவதற்கும் யாரும் விரும்புவதும் இல்லை.

முன்னர் கூடுதலான பாண் விற்பனை செய்திருந்தோம். தற்பொழுது 200 ரூபா என்பதனால் யாரும் அதனை வாங்குவதில்லை. கஷ்டப்பட்ட மக்கள் ஏன் 180-200 விலையில் பாண் வாங்கப் போகிறார்கள் எமது கடை வியாபாரம் காற்றுடன் போய்விட்டது. வேலைக்கு போய்விட்டு வருபவர்கள் வேலை முடிந்தபின் வீட்டுக்கு செல்லும் போது பாண் வாங்கி செல்வார்கள். ஆனால் இன்று அந்த வியாபாரம் இல்லாமல் போய்விட்டது. பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாக பாண் வியாபாரம் முற்றாக படுத்துவிட்டது.

முன்னர் எமது கடையில் பாண் பணிஷ் என பேக்கரி உற்பத்தி பொருட்களை விற்பனை செய்தோம். ஆனால் இன்று வறியமக்கள் இந்த விலை ஏற்றத்தால் ஏன் பாண் மற்றும் பேக்கரி பொருட்களை வாங்கப் போகிறார்கள். முன்னர் பாடசாலை செல்லும் மாணவர்கள் பணிஸ் வாங்கி செல்வார்கள். இப்போது அவ்வாறு இடம்பெறுவதில்லை. எனவே இந்த பாணின் விலையை குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால் நல்லதாக இருக்கும்.

### தி. மைக்கல்
சமூக செயற்பாட்டாளர்



தற்போதைய சூழ்நிலையில் பாண் மற்றும் பேக்கரி பொருட்களின் விலை அதிக அளவில் அதிகரித்துள்ளது இலங்கை மக்களில் 75 வீதமான மக்களின் காலை உணவு பாண் மற்றும் பேக்கரி பண்டங்களாகவே காணப்படுகின்றது. ஆனால் தற்பொழுது பாணின் விலை அதிகளவில் உச்சத்தை தொட்டுள்ளது. பாணின் விலை அதிகரித்துள்ளதன் காரணமாக- அதாவது வறிய குடும்பத் தைச் சேர்ந்த மக்களை பெரிதும் பாதித் துள்ளது. வறிய மக்கள் தற்போதைய விலையில் பாண் வாங்குவதென்றால் மிகவும் கடினமான விடயமாக காணப்படுகின்றது.

இலங்கையில் வறிய குடும்பங்களின் காலை உணவாக பாண் காணப்படுகின்றது. அரசாங்கமானது பாணின் விலையை அதிகரித்துள்ளதால் இலங்கையில் 75 வீதமான மக்கள் காலை உணவை தவிர்த்துள்ளார்கள். சுகாதார ஸ்தாபனங்கள் காலை உணவு என்பது மிகவும் முக்கியமானதாக செல்கிறார்கள்.

ஆனால் இலங் கையை பொறுத்தவரை தற்போது பாண் மற்றும் பேக்கரி பொருட்களின் வெளியேற்றம் காரணமாக காலை உணவினை தவிர்த்து வருகிறார்கள். பேக்கரி பொருட்களின் விலையேற்றம் தற்போது சிறுவர்களையும் பாடசாலை மாணவர்களையும் பொதுமக்களையும் மிகவும் பாதிக்கும் விடயமாக காணப்படுகின்றது. இதனால் நோய்கள் அல்சர் மற்றும் நெஞ்சு எரிவு தொண்டை நோபோன்ற நோய் உருவாக்குவதற்கு காரணமாக உள்ளது. எனவே இந்த பாணின் விலையை மேலும் அதிகரிக்காது மக்களின் வயிற்றில் அடிக்காது பாதுகாக்குமாறு சம்பந்தப்பட்ட சகலரையும் கேட்டுக்கொள்கின்றோம்.



### எஸ். முத்தையா
(முத்தையா பேக்கரி உரிமையாளர்)

தற்பொழுதுள்ள பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையேற்றத்தை உன்னிப்பாக பார்ப்போமாக இருந்தால் பாண் மற்றும் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. ஆனால் பாண் கொள்வனவு செய்யும் நுகர்வோரின் எண்ணிக்கையில் பெரிதாக மாற்றம் இல்லை. எதிர்வரும் மாதங்களில் நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். குறிப்பாக எதிர்வரும் மாதங்களில் பாண் கொள்வனவு செய்யும் நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

பிறீமா நிறுவனத்தினரால் மாதம் ஒன்றுக்கு ஒன்றரை லட்சம் மெட்ரிக் றொன் கோதுமை மா உற்பத்தி செய்த இடத்தில் 30 ஆயிரம் மெட்ரிக் றொன் வரை தற்போது கோதுமை மா உற்பத்தி செய்கின்றது. எனவே கோதுமை மாவின் உற்பத்தி குறைந்துள்ளது. எமது பேக்கரிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டளவில் கோதுமைமா விநியோகிக்கப் படுகின்றது. எனினும் கோதுமை மாவினை பெறுவதில் இடர்நிலை இல்லை. ஆனால் விலை அதிகரித்துள்ளது. மட்டுப்படுத்தப்பட்டளவில் கிரமமாக கோதுமைமா வழங்கப்படுகின்றது. பாணின் விலை அதிகரிப்பு ஏற்பட்டாலும் நுகர்வோரின் பாவனை குறைந்ததாக இல்லை. எதிர்வரும் மாதங்களில் இன்னும் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது.

ஏனைய பொருட்களோடு ஒப்பிடும்போது இந்த பாணின் விலையேற்றம் பெரிதாக தென்படவில்லை. ஆனால் இது வறியமக்களை மிகவும் பாதிக்கின்றது. எமக்கு ஒரு நாள் பாண்உற்பத்திக்கு 100லீற்றர் டீசல் தேவைப் படுகின்றது. முன்னர் நாங்கள் வாங்கிய விலைக்கும் இன்றைய விலைக்கும் சரியான வித்தியாசம். முன்னர் 100 லீற்றர் டீசலில் பாண் உற்பத்தி செய்தோம் ஆனால் இன்று அந்த பாண் உற்பத்தியின் அளவை குறைத்து 20 லீற்றர் 30 லீற்றர் டீசலை பயன்படுத்தி அதற்கு அளவான பாண் உற்பத்தி செய்கின்றோம். ஏனைய பொருட்களின் உற்பத்தியோடு ஒப்பிடும்போது இந்த பாண் உற்பத்திப் பொருட்களின் விலை அதிக அளவில் அதிகரித்ததாக இல்லை.

இந்த பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலையேற்றமானது சாதாரண மக்களை பாதிக்கின்றது. இந்த பாதிப்பு எதிர்வரும் மாதங்களில் இன்னும் அதிகரிக்கும். தற்போதுள்ள விலையேற்றம் தொடருமாக இருந்தால் இனிவரும் காலங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பாண் வழங்க வேண்டிய நிலை ஏற்படும்.

தற்பொழுது எரிபொருள் பெற நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கிறார்கள் ஆனால் எதிர்வரும் காலங்களில் கூட்டுறவுச் சங்கங்களில் பாண் வாங்க வரிசையில் நிற்க வேண்டிய நிலை வரப்போகிறது. அதுதான் உண்மை. தற்போது விலையேற்றத்தின் காரணமாக நாங்கள் எமது உற்பத்திப் பொருட்களை விலையினை அதிகரித்துள்ளோம்.

முன்னரைப் போல நாங்கள் போறணையில் பாண் போடுவதில்லை. தற்பொழுது பாண் மின்சார இலத்திரனியல் கருவி மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனால் மக்களுக்கு சுடச்சுட பாண்வழங்க கூடியதாக உள்ளது. அவ்வாறு பாண் வழங்க வேண்டுமாக இருந்தால் எமக்கு எரிபொருள் தேவையாக இருக்கும். மின்சாரம் தேவையாக இருக்கும். அதே போல் எரிவாயு தேவையாக இருக்கும். அந்த மூன்றும் பெறுவதற்கு நாங்கள் பல இடர்களை எதிர் நோக்குகிறோம்.

குறிப்பாக நாங்கள் எரிபொருள் நிரப்புவதற்கு நீண்ட வரிசையில் நிற்க வேண்டி உள்ளது எனவே இதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் கட்டாயமாக ஒரு நடவடிக்கை எடுக்கும் இடத்தில் தொடர்ச்சியாக எமது மக்களுக்கான பேக்கரி பொருட்களை தங்குதடையின்றி வழங்க முடியும்

இலங்கை பூராகவும் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன யாழ்ப்பாணத்திலும் சிலபேக்கரிகள் தற்பொழுது ஸ்தம்பிதம் அடைந்துள்ளன

ஆனால் சிலர் நீண்ட காலமாக அந்த தொழிலை மேற்கொள்வது என்றபடியால் ஏதோ பல்லை கடித்துக்கொண்டு இந்த தொழிலை முன்னெடுக்கிறார்கள்

ஆனால் எமக்கு முன்னரைப் போல லாபம் கிடைப்பதில்லை அத்தோடு வேலையாட்களையும் மட்டுபடுத்திய அளவிலேயே நாங்கள் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளம் அதேபோல முன்னர் இரண்டு தடவை காலை மாலை பாண் போடுவோம் ஆனால் தற்பொழுது ஒரு வேளையாக அதனை மட்டுப் படுத்தியுள்ளோம்

எனினும் இந்த பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## 200 கோடி வசூலித்த "விக்ரம்"



கமல் ஹாசன் தயாரிப்பு - நடிப்பில் கடந்த 3ஆம் திகதி "விக்ரம்" படம் வெளியானது. இந்தப் படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்கினார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி என 5 மொழிகளில் மிகப் பெரிய அளவில் வசூல் செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் படம் திரைக்கு வந்து 5 நாள்களில் 200 கோடிக்கு இந்திய ரூபாய்க்கு மேல் வசூல் செய்துள்ளது. அதுமட்டுமின்றி இந்த ஆண்டு தமிழில் இதுவரை வெளியான படங்களில் குறைந்தநாளில் அதிக வசூல் செய்த படம் என்ற பட்டியலில் கமலின் விக்ரம் படமும் இணைந்துள்ளது.

## அவந்திகாவுக்கு வரவேற்பு



மொடலிங் துறையில் இருந்து சினிமாவுக்கு வந்தவர் டில்லியை சேர்ந்த அவந்திகா மிஸ்ரா. மீக்கு மீரா மாக்கு மீமே என்ற தெலுங்கு படத்தில் அறிமுகமானவர் அதன் பிறகு அங்கு பல படங்களில் நடித்தார். தமிழில் என்ன சொல்ல போகிறாய் என்ற படத்தின் மூலம் அறிமுகமானார்.

தற்போது அவர் நடித்து முடித்துள்ள டி பிளாக் படம் வெளிவர இருக்கிறது. இதில் அவர் அருள்நிதி ஜோடியாகவும், கல்லூரி மாணவியாகவும் நடித்துள்ளார். அடுத்து அவர் நெஞ்சமெல்லாம் காதல் படத்தில் படத்தில் நடித்து வருகிறார். இதுதவிர, மேலும் 2 புதிய படங்களில் ஒப்பந்தமாகி இருக்கிறார். அதுபற்றிய அறிவிப்புகள் விரைவில் வெளிவரவிருக்கிறது.

## வெளியாகும் யாஷிகா படங்கள்



இருட்டு அறையில் முரட்டு குத்து படத்தில் நடித்து பிரபலமானவர் யாஷிகா ஆனந்த். சில படங்களில் நடித்தவர், இடையில் விபத் தில் சிக்கி மீண்டு வந்தார். தற்போது கடமையைச் செய், பாம்பாட்டம், பஹீரா, சிறுத்தை சிவா, தி லைஜன்ட், பெஸ்டி உள்பட பத்து படங்கள் இவர் கைவசம் உள்ளன.

இவற்றில், எஸ்.ஜே. சூர்யாவுடன் இணைந்து அவர் நடித்துள்ள கடமையைச் செய் படம் வரும் 24 இல் திரைக்கு வருகிறது. அதைத் தொடர்ந்து ரங்கா இயக்கத்தில் அவர் நடித்துள்ள பெஸ்டி என்ற படம் ஜூலை 1இல் திரைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இரண்டு ஆண்டு இடைவெளிக்கு பிறகு யாஷிகாவின் படங்கள் வெளியாகவுள்ளன.

## மலைக்க வைக்கும் சமந்தா!

இன்ஸ்டாகிராம் மூலம் நடிகை சமந்தாவுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு என்ற தகவல் வெளியாகி இருக்கிறது.

தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகை சமந்தா. இன்ஸ்டாகிராம் சமீபத்தில் கூட பிரபல நிறுவனத்தின் விலையுயர்ந்த நீச்சலுடை ஒன்றை விளம்பரப்படுத்தியி ருந்தார்.

இந்நிலையில், அப்படி விளம்பரப்படுத்தும் பொருட்களுக்காக, அவர் வாங்கும் ஊதியம் எவ்வளவு என்று தெரியவந்துள்ளது. அவருக்கு மாதம் 3 கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 11 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறதாம்.



## பொன்னியின் செல்வன் டீசர் எப்போது?




மணிரத்னம் இயக்கத்தில் தயாராகும் பொன்னியின் செல்வன் வரலாற்றுப் படம் இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டது. விக்ரம், ஜெயம் ரவி, கார்த்தி, ஐஸ்வர்யா ராய், த்ரிஷா மற்றும் பலர் நடித்துள்ள இந்தப் படத்தின் இறுதிக் கட்டவேலைகள் முழுமூச்சாக இடம்பெற்று வருகின்றன.

இரு பாகங்களாக தயாராகியுள்ள இந்தப் படத்தின் முதல் செப்ரெம்பரில் வெளியாகிறது. இந்நிலையில், படத்தின் டீசர் தற்போது உருவாகி வருகிறது.எதிர்வரும் ஜூலை மாதம் பிரமாண்டமான விழாவில் டீசரை வெளியிவுள்ளார்கள் எனத் தகவல் வெளியாகியுள்ளது.




## திரைப்படம் - 777 சார்லி

**இயக்கம் - கிரண்ராஜ்**

**இசை - நோபின் பால்**

**நடிப்பு - ரக்ஷித் ஷெட்டி, சங்கீதா சிருங்கேரி**

ஒரு மனிதனுக்கும், ஒரு நாய்க்கும் உள்ள பாசப் பிணைப்பை உருக வைக்கும் அளவுக்கு சொல்லியிருக்கும் படம் "777 சார்லி". கன்னடத்திலிருந்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளிவந்துள்ள படம். ஆனால், எங்குமே ஒரு மொழிமாற்றுப் படம் பார்க்கிறோம் என்ற எண்ணம் ஏற்படாமல் நம்மை உணர்வுபூர்வமாகக் கட்டிப் போட்டுவிடுகிறார் இயக்குநர் கிரண்ராஜ்.

இந்தப் படத்தைப் பார்த்த பிறகு நாயை வளர்த்து வருபவர்கள் அவர்கள் நாய்மீது மேலும் அதிக பாசம் வைப்பார்கள். நாயை வளர்க்காதவர்கள் நாமும் ஒரு நாயை வீட்டில் வளர்க்கலாமே என்று ஆசைப்படுவார்கள். அந்த அளவுக்கு ஓர் அன்பான, பாசமான, அழகான, அற்புதமான நாயை படத்தில் நடிக்க வைத்ததன் மூலம் படம் பார்க்கும் இரசிகர்களிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளார்கள்.

ரக்ஷித் ஷெட்டி சிறு வயதிலேயே தனது பெற்றோர், தங்கை ஆகியோரை விபத்தில் இழந்தவர். உறவு, நட்பு என எதுவும் இல்லாமல் வீட்டில் தனியாக வசிக்கிறார். வேலை பார்க்கும் நிறுவனம், வீடு என அவருடைய வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. அப்படிப் பட்டவரிடம் எங்கிருந்தோ வரும் ஒரு நாய் எதேச்சையாக அடைக்கலம் ஆகிறது. முதலில் அந்த நாயை வெறுக்கும் ரக்ஷித் போகப் போக அந்த நாய் இல்லாமல் தானில்லை என்ற நிலைக்கு வருகிறார். அந்த சமயத்தில் நாய்க்கு புற்றுநோய் பாதிப்பு வருகிறது. கொஞ்ச நாட்கள்தான் அது உயிருடன் இருக்கும் என்கிறார் கால்நடை மருத்துவர். அதற்குள் அந்த நாயின் ஆசை ஒன்றை நிறைவேற்ற முயல்கிறார் ரக்ஷித். அது நடந்ததா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

2019இல் கன்னடத்திலிருந்து தமிழுக்கு வந்த "அவனே ஸ்ரீமன் நாராயணா" படத்தின் மூலம் ஓரளவுக்கு அறியப்பட்டவர் இப்படத்தின் கதாநாயகன் ரக்ஷித் ஷெட்டி. இந்தப் படத்தில் ஓர் உணர்வுபூர்வமான கதாபாத்திரத்தில் நடித்து காட்சிக்குக் காட்சி உருக வைக்கிறார். வாழ்க்கையில் எந்த ஒரு பிடிப்பும் இல்லாமல் வாழ்பவருக்கு ஒரு நாய் பிடிப்பாக வருகிறது. அந்த நாய் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றங்களை உணர்ந்து நடித்து உருக வைக்கிறார் ரக்ஷித். ஆசையாக வளர்க்கும் நாய் இன்னும் கொஞ்ச நாளில் இறந்துவிடும் என மருத்துவர் சொல்ல அதிர்ச்சியடைகிறார். தொலைக் காட்சி பார்க்கும் போது பனிப்பிரதேசத்தைப் பார்த்து அந்த நாய் அடையும் மகிழ்ச்சியை ஏற்கனவே பார்த்தவர், அந்த இடத்திற்கு நாயை அழைத்துச் சென்று மகிழ்ச்சிப்படுத்த நினைக்கிறார். அதற்காக அவர் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் நெகிழ்ச்சிக்கு உத்தரவாதம்.

நாய் சார்லியின் நடிப்பைப் பார்க்கும் போது அதற்கு பயிற்சி கொடுத்த பிரமோத்தைப் பாராட்டியே ஆக வேண்டும். நாய் செய்யும் சேட்டைகளைப் பார்த்து அட்டா, நாமும் இப்படி ஒரு நாயை வளர்க்க வேண்டும் என்று படம் பார்க்கும் பலருக்கும் தோன்றும். அடிக்கடி முன்னங்கால்களைத் தூக்கி ரக்ஷித் மீது காட்டும் பாசத்துக்கு நாமும் அடிமையாகி விடுகிறோம். இடைவேளைக்குப் பின்னர் நாய்மீது நமக்கு அப்படி ஓர் அனுதாபம் வந்துவிடுகிறது. அதற்கு ஒன்றும் ஆகிவிடக்கூடாது என படம் பார்ப்பவர்கள் "உச்" கொட்டும் அளவுக்கு காட்சிகள் அமைந்திருக்கிறது.

படத்தில் ரக்ஷித்துக்கும், நாய்க்கும் மட்டும் தான் அதிக முக்கியத்துவம். விலங்கு நல வாரிய அதிகாரியாக வரும் சங்கீதா சிருங்கேரியை படத்தின் நாயகி என்று சொல்லிக் கொள்ளலாம். மருத்துவராக ராஜ் பி ஷெட்டி, சிறப்புத் தோற்றத்தில் பாபி சிம்ஹா, சிறுமி அத்ரிகாவாக ஷர்வரி கொஞ்சமே வந்தாலும் மனதில் நிற்கிறார்கள்.

படத்துக்கு நோபின் பால் பின்னணி இசை, அரவிந்த் காஷ்யப் ஒளிப்பதிவு, பிரதீக் ஷெட்டியின் படத்தொகுப்பு பக்கபலமாக அமைந்துள்ளது. இடைவேளைக்குப் பிறகான படத்தின் நீளம்தான் படத்தின் எதிர்மறையாகத் தெரிகிறது.

குடும்பத்துடன், குட்டீஸ்களுடன் பார்த்து ரசிக்க வேண்டிய ஒரு படம் "777 சார்லி".

# இந்தியாவின் சாதனையை கனவாக்கிய தென்னாபிரிக்கா!

ஐயப்பன்

இந்தியாவின் அடுத்த தலைமுறை ஆரம்ப வீரர்கள் இஷான் - கெய்க்வாட் இணை, சற்றே தடுமாறினாலும் குறுகிய பௌண்ட்ரியை சாதகமாகப் பயன்படுத்தி வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பந்துகளை பௌண்ட்ரிகளாக்கினர். பவர்பிளேவுக்குள் 20 பந்துகள் ஓட்டம் எதையும் பெறாத பந்துகள் ஆகியும்கூட, அணியின் ஓட்ட எண்ணிக்கை 51-ஐ எட்டியது.

மூன்று சிக்ஸர்களோடு சிறப்பாகத் தொடங்கினாலும், அதை பெரிய ஓட்டமாக கெய்க்வாட் மாற்றவில்லை. தனது முதல் மூன்று இருபது - 20 போட்டிகளில், 21தான் அவரது அதிகபட்ச ஓட்டமே. அதை மட்டும் இப்போட்டியில் 23 ஆக மாற்றிய கையோடு விடைபெற்றார். முந்தைய பந்தை, சிக்ஸருக்கு அனுப்பிய குஷியில், ஓவ் ஸ்டம்புக்கு வெளியே பர்னெல் வீசிய பந்தை, நடு விக்கெட்டை தட்ட முயன்று, பவுமாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து, ஸ்ரேயாஸ் உள்ளே வந்த பிறகுதான், களத்தில் அனல் பறந்தது. இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை சடாரென அதிகரித்ததும் இதற்குப் பிறகுதான். மத்திய ஓவர்களிலும் ஓட்டங்களை ஏற்ற வேண்டுமென்ற உத்தியோடு, சந்தித்த முதல் ஓவரிலிருந்தே அதிரடியைத் தொடங்கினார் ஸ்ரேயாஸ். சுழல் பந்துகளை ஓட்டங்களாக மாற்றும் அவருக்குக் கைவந்த அக்கலை, மீண்டும் கைகொடுத்தது.

மறுமுனையிலோ அதுவரை வெறும் 113 ஸ்ட்ரைக்ரேட்டோடு ஆடிக் கொண்டிருந்த இஷானும், ஸ்ரேயாஸிடமிருந்து கற்றுக் கொண்டதைப் போல் அடித்து ஆடத் தொடங்கினார். 37 பந்துகளில் அரைச்சதம் கடந்தபின் அவரின் ஆட்டத்தில் காட்டம் கூடியது. கேசவ் மகராஜ் வீசிய ஓவரில் இரண்டு சிக்ஸர்களையும், இரண்டு பௌண்ட்ரிகளையும் விளாசியதுதான் 158.3 என அவரது ஸ்ட்ரைக்ரேட்டை எகிற வைத்தது.

அந்த ஓவரின் முடிவில் கிடைத்த இஷானின் விக்கெட் மட்டுமே கேசவ்வுக்குக் கிடைத்த ஒரே ஆறுதல். எனினும், இஷான் மொத்தமாக அடித்திருந்த 3 சிக்ஸர்களும், 11 பௌண்ட்ரிகளும், பவுமா படைக்கான சேதாரத்தைச் சிறப்பாகவே செய்திருந்தன. ஷம்சியின் ஓவரை ஸ்ரேயாஸ் கவனித்துக் கொள்ளும்படி தங்களுக்குள் பேசி வைத்துக் கொண்டதாக இஷான் போட்டிக்குப் பின் கூறியிருந்தார். ஸ்ரேயாஸ் அடித்த மூன்று சிக்ஸர்களுமே அவருக்கு எதிராகத்தான் வந்திருந்தன. இந்தப் புரிந்துணர்வால் பிணைக்கப்பட்ட இணைப்பாட்டம்தான் 40 ஓவர்களில் 80 ஓட்டங்களைக் குவிக்க வைத்து இந்தியாவை முன்னிலைப்படுத்தியது.

தென்னாபிரிக்காவின் பக்கமும் களத்தடுப்பில் பெருங்குற்றங்கள் நிரம்பி வழிந்தன. டி கொக், ஸ்ரேயாஸின் ஸ்ரொம்ப் வாய்ப்பைத் தவற விட்டதிலிருந்து ரன்அவுட், பிடியெடுப்பு எனத் தங்களின் வீழ்ச்சிக்குத் தாங்களே உதவிக் கொண்டிருந்தனர். அப்படி தென்னாபிரிக்காவால் தவறவிடப்பட்ட வாய்ப்புகளின் முதுகிலோ இந்திய துடுப்பாட்ட வீரர்களோ அசுரவேகத்தில் பயணித்தனர்.

இஷான் - ஸ்ரேயாஸ் இணை மிடில் ஓவரில் மரண பயத்தைக் காட்டியதென்றால், மரண ஓவர்களில் 18 பந்துகள்தான் ஆயுட்காலம் என்றாலும் இறுதி அத்தியாயத்தை செவ்வனே செய்தது பந்த் - பாண்ட்யா கூட்டணி. “கிட்டத்தட்ட நான்கு ஓவர்கள், ஏழு விக்கெட்கள் கைவசமிருக்க கவலையெதற்கு?!” என முந்தைய கூட்டணி அமைத்துத் தந்த அடித்தளத்தில், தங்கள் இணைப்பாட்டத்தை அதிவேகமாகக் கட்டமைத்தனர் இந்த இரட்டையர்.




பிரிட்டோரியஸ் ஓவரில் பந்துகளை, பந்த் வெளுத்து வாங்கினார் என்றால் நார்க்கியா, ரபாடா, பர்னெல் என அனைவரின் ஓவர்களிலும் சிக்ஸர்களைப் பறக்கவிட்டு பழைய பாண்ட்யாவாக ஆர்ப்பரித்தார் ஹார்திக் பாண்ட்யா. மெதுவான பந்துகளால்கூட சிக்ஸர்களைத் தடுக்க முடியவில்லை. ஐ. பி. எல்.லில் குஜராத்தின் சார்பாக ஆடிய போதே அவரின் பழைய அடையாளங்கள் வெளிவரத் தொடங்கியதுதான் என்றாலும் இந்திய சீருடையில் அதுவும் போட்டி முடிவு ஆட்டக்காரராக அது இன்னமும் ஆக்ரோஷத்தோடு வெளிப்பட்டு 258 ஸ்ட்ரைக்ரேட்டோடு ஓட்டங்களை குவிக்க வைத்தது.

இறுதி ஓவரில் வந்து சேர்ந்த தினேஷ் கார்த்திக்குக்குப் பெரிதாக வேலை எதையும் வைக்காமல் 200 ஓட்டங்களை இந்த இளைஞர் படையே கடக்க வைத்துவிட்டது. 212 என்னும் சவாலான இலக்கையும் நிர்ணயித்தது இந்தியா. தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்கள் மூவரின் சராசரி பத்தையும், மூவரின் சராசரி எட்டையும் தாண்டி எல்லோருக்குமே இது ஓவ் டேஆனதைக் காட்டியது.

பனிப்பொழிவு வெற்றியை நிர்ணயிக்கும் காரணியாக இருக்கப் போவதில்லை. போதாக்குறைக்கு திரும்பும் பந்துகளும், சஹால் - அக்ஸருக்கான விக்கெட்களுக்கு உத்தரவாதம் தரும் என்பதால் முதல் பாதியின் முடிவில் தோல்வியின் நிழல் தென்னாபிரிக்காவின் மேல் அடர்த்தியாகப் படிவதைப் போல்தான் இருந்தது. ஆனால், பவர்பிளேயிலேயே பயமுறுத்தியது தென்னாபிரிக்கா.

பலவித பந்துவீச்சுக்களின் நாயகனாக புவனேஷ்வர், தனது ஆயுதங்களான இன்ஸ்விங்கர், கட்டர்களால் மிரட்டினார். அவர் வீசிய லெக் கட்டரில் தான் பிடித்த அற்புதமான பிடியெடுப்பால் பவுமாவை வெறும் எட்டு ஓட்டங்களுக்கு வெளியேற்றினார் பந்த். அடுத்ததாக உள்ளே வந்த பிரிட்டோரியஸ், பவர்பிளேயைச் சிறப்பிக்க வந்ததைப் போல எல்லா பந்துவீச்சாளர்களையும் பந்தாடத் தொடங்கினார்.

முன்னதாக ஒன்பது இருபது - 20 போட்டிகளில் ஆறில், டி கொக்கின் விக்கெட்டை சஹால் எடுத்திருப்பதால் அவரை பந்த் உள்ளே கொண்டுவர, அது பெறுமதியான ஓவராக முடிந்தது. ஹார்திக் பாண்ட்யா வீசிய அடுத்த ஓவரில் மூன்று சிக்ஸர்களை விளாசி வெறித்தனம் காட்டினார் பிரிட்டோரியஸ். ஐந்து ஓவர்களுக்குள்ளாகவே 60 ஓட்டங்களை சேர்த்து, பயமுறுத்தியது இக்கூட்டணி.

ஆனால், புவனேஷ்வரைப் போலவே ஹர்சலும் முடிவை மாற்றுபவராக அவதாரமெடுத்தார். முழுநீளப் பந்தைக் குறைந்த வேகத்தில் மெதுவாக வீச, அது பிரிட்டோரியஸின் விக்கெட்டைத் தூக்கியது. பவர்பிளேயில் மற்ற பந்துவீச்சாளர்கள் மூன்று ஓவர்களில் 49 ஓட்டங்களைத் தந்திருக்க, புவனேஷ்வர் - ஹர்சல் மொத்தமாக மூன்று ஓவர்களில் 12 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து இரண்டு விக்கெட்களையும் வீழ்த்தி அசத்தினர். அந்த அழுத்தம்தானே அதிகூடிய இலக்கு போட்டிகளில் எதிரணி துடுப்பாட்ட வீரர்களை திணறடிக்கும் சாவி?!

போக வேண்டிய தூரம் பயமுறுத்த, துணிந்து அக்ஸரின் பந்தை உயரமான அடிகளாக மாற்றினார் டி கொக். ஆனால், அது இஷானின் கையில் பிடியெடுப்பாகி நம்பிக்கை வீரரை ஆட்டமிழக்கச் செய்து தள்ளாடியது தென்னாபிரிக்கா. இந்தத் தருணத்திலேயே 12ஐ சுற்றி வந்து கொண்டிருந்தது தேவைப்படும் சராசரி ஓட்டம்.

பெரிய இலக்கைத் துரத்துகையில் விக்கெட்டுகள் வேகத்தடை மட்டுமல்ல, அதி அபாய வளைவும்கூட. ஆனால், எதிர்ப்பதமாக நங்கூரம் பாய்ச்சும் இணைப்பாட்டம்தான் அணியை மேடேற வைக்கும் முக்கிய காரணி. வான் டேர் டுசன் - மில்லர் இணை, இதைத்தான் செய்தது. சரியாக மூன்று ஓவர்கள், தங்களை நிலைநிறுத்த எடுத்துக் கொண்டனர். அந்த இடைவெளியில் 15 ஓட்டங்கள் மட்டுமே சேர்ந்தன. முடிவில் ஹர்சல் ஓவரில் (12), யோர்க்கரை பௌண்ட்ரியாக்கி மில்லர் ஆரம்பித்தார். அங்கிருந்து எந்த பந்துவீச்சாளரைப் பார்த்தாலும் அடிப்போம் என்ற நிலைக்கு மாறிவிட்டனர் இவ்விருவரும். 22 பந்துகளில் மில்லரின் அரைச்சதம் எக்ஸ்பிரஸ் வேகத்தில் வந்து சேர்ந்தது.

அவருக்குத் துணையாக இன்னொரு முனையில் இருந்த வான் டேர் டுசனும் மெதுவாகத் தொடங்கினாலும், போகப் போக ஓட்டங்களை குவித்து 37 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். அதிலும் வேகப்பந்து வீச்சாளர்களைத் திறம்பட எதிர்கொண்டார். வெறும் 29 பந்துகளில் 28 ஓட்டங்களை எடுத்திருந்தவர், அடுத்த 17 பந்துகளில் 47 ஓட்டங்களைக் குவித்தார். 16ஆவது ஓவரில் ஸ்ரேயாஸ் கோட்டைவிட்ட அவரின் பிடியெடுப்புத்தான் போட்டியையே மாற்றியது.

இவர்களின் இந்த இரண்டு அரைச்சதங்கள் மட்டுமல்ல, மரண ஓவரில் ஹர்சல் ஒரே ஓவரில் தந்த 22 ஓட்டங்களும் போட்டியைக் கிட்டத்தட்ட முடித்து வைத்தன. அதற்கு முன்னதாக 14ஆக இருந்த தேவைப்படும் ஓட்டவேகம் அந்த ஓவர் முடிவில் 18 பந்துகளில் 34 ரன்களே தேவை எனச் சுலபமாக வந்து நின்றுவிட்டது. வேறெந்த அதிசயத்தையும் இந்திய பந்துவீச்சாளர்களால் இறுதியில் நிகழ்த்த முடியாமல் போக ஏழு விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது தென்னாபிரிக்கா.

சமதரையான ஆடுகளம் நிலைத்து விட்ட துடுப்பாட்ட வீரர்கள், அதிலும் போட்டியை வெற்றிகரமாக முடிக்கும் நிபுணத்துவ வீரர்கள் என எல்லாமே, தென்னாபிரிக்காவுக்குச் சாதகமாகவே நகர்ந்தது.

இந்தியாவுக்கு எதிராக ஓர் அணியின் அதிகபட்ச இருவது -20 ஓட்ட துரத்தலும் இதுதான்.

தொடர்ந்து 12 இருபது - 20 போட்டிகளில் வெற்றி பெற்றதோடு, 13ஆவது போட்டியையும் வென்று சாதனை படைக்க வேண்டுமென்று கனவு கண்ட இந்திய அணி தோற்றிருக்கிறது. தென்னாபிரிக்கா அந்தத் தொடர் வெற்றிப் பயணத்தை முடித்து வைத்துள்ளது.

## ஆஸி வரலாற்றில் முதன்முறையாக

# புகலிட பிரியா - நடேஷ் குடும்பத்தை பிலோலா நகரமே மீள வரவேற்றது

## புலம்பெயர் மடல்

• ஐங்கரன் விக்கினேஸ்வரா

நான்கு வருடங்கள் குடிவரவுத் தடுப்புக்காவலில் இருந்த நடேசலிங்கம் குடும்பம் மீண்டும் அவுஸ்திரேலியாவின் பிலோலா நகரத்திற்கு கடந்த வெள்ளியன்று வந்துள்ளனர். உணர்ச்சி வசப்பட்ட ஆதரவாளர்கள் வெள்ளிக்கிழமை பிற்பகல் அவர்களை பிலோலா நகரத்தில் சிறப்பாக வரவேற்றனர்.




நான்கு வருட தடுப்பு மையங்கள், நீதிமன்ற சவால்களின் பிறகு, நாட்டின் இதயங்களைக் கைப்பற்றிய நான்கு பேர் கொண்ட குடும்பம் பிற்பகல் 2.30 மணிக்குப் பிலோலாவுக்கு அருகிலுள்ள தங்கூல் விமான நிலையத்தில் தரை இறங்கினர்.

பிரியா மற்றும் நடேசலிங்கம் மற்றும் அவர்களது ஆஸ்திரேலியவில் பிறந்த மகள்கள் கோபிகா, 6, தர்னிகா, 4, ஆகியோர் தங்கள் சிறிய விமானத்தில் இறங்கும்போது அனைவரும் சிரித்த வண்ணம் பிலோலா வந்தடைந்தனர். மேலும் இரண்டு சிறுமிகளும் காத்திருந்த கூட்டத்தை கை அசைத்து, அவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

மார்ச் 2018 இல் குடும்பம் முதன் முதலில் தடுத்து வைக்கப்பட்டதிலிருந்து வெள்ளிக்கிழமை மீண்டும் ஒன்றிணைவதற்காகப் போராடிய நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு திருமதி நடேசலிங்கம் முத்தமிட்டு வரவேற்றனர்.

அத்துடன் விமான நிலையத்திற்கு வெளியே மேலும் உணர்ச்சிகரமான மக்கள் காத்திருந்தனர். சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காட்சிகள், திருமதி நடேசலிங்கம் தனது நகர நண்பர்களுடன் மீண்டும் இணைவதில் மிகுந்த ஆனந்தமடைவதை காட்டியது.

பிலோலாவின் தங்கூல் விமான நிலையத்தில் குடும்பத்தினரின் ஆதரவாளர்கள் அவர்களை வரவேற்றனர். பின்னர், அவர் பிலோலா சமூகத்திற்கும் ஆஸ்திரேலிய மக்களுக்கும் நன்றி தெரிவித்தார் - மேலும் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குவது பற்றி பேசினார்.

“மிக்க நன்றி, நானும் எனது குடும்பத்தினரும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளோம், மீண்டும் எனது சமூகமான பிலோவிற்கு எனது பயணத்தைத் தொடங்குகிறோம். எனது சமூகம் மற்றும் ஆஸ்திரேலிய மக்கள், எனது குடும்பத்தினருக்கு பாரிய உதவி செய்கிறார்கள் - பிலோலா சமூகத்தில் உள்ள அனைவருக்கும் நன்றி.

“நான் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குகிறேன் ... மிகவும் மகிழ்ச்சி, நன்றி.” என்றார்.

நடேசலிங்கம் குடும்பம் நான்கு வருடங்களுக்கும் மேலாக தடுப்புக் காவலில் இருப்பதைப் பற்றி சுருக்கமாகப் பேசினார், அது மிகவும் கடினமாக இருந்தது என்று கூறினார்.

“நீண்ட காலமாக தடுப்புக் காவலில், மருத்துவ வசதிகள் இல்லை, ஆரோக்கியமான உணவு இல்லை, மிக்க மன உளைச்சல்” என்றும் அவர் கூறினார். தடுப்பு வாழ்க்கை மனரீதியாக இரு குழந்தைகளுக்கும் கடினமாக உள்ளது. நாங்கள் மிகவும் கடினமான வாழ்க்கை வாழ்ந்தோம்,

இந்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என நம்பினேன் என்றார். அத்துடன் வெள்ளிக்கிழமை பிலோலாவின் வீட்டிற்கு நான் பறப்பது போல் உணர்ந்தேன், பிலோவில் தரையிறங்கிய தருணத்தை என்னால் விவரிக்க முடியாது,” என்று திருமதி நடேசலிங்கம் கூறினார்.“இங்கே தரையிறங்குவது எனக்கு மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது, என் மகள்களுக்கு, சிறந்த வாழ்க்கையையும் சிறந்த எதிர்காலத்தையும் கொடுக்க முடியும் என்று நம்புகிறேன். நான் என்ன உணர்கிறேன் என்பதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.”

பிலோலா நகரத்தில் வரவேற்க காத்திருந்த மக்கள் கூட்டம் உணர்ச்சி வசப்பட்டு, வரவேற்புப் பலகைகள் அசைத்து, அவர்கள் குதித்து ஆரவாரம் செய்து, முழு நகரமே கொண்டாட்டத்தில் நடனமாடினர்.

இது ஒரு சிறப்பு நாள் என்று அவர்களின் குடும்ப நண்பர் ப்ரோன்வின் டென்டில் கூறினார். “இது தனிப்பட்ட முறையில் எனக்கு ஒரு சிறப்பு நாள்,



ஏனென்றால் எனது நண்பர்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு எங்களிடமிருந்து தேவையில்லாமல் பிரிக்கப்பட்டதால் அவர்களை தொடர்ந்து பார்க்க எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை,” என்று அவர் கூறினார். இது பிலோலா மற்றும் ஆஸ்திரேலியாவின் சமூகத்திற்கு மிகவும் சிறப்பான நாள். மக்கள் சக்தியை நீங்கள் ஒருபோதும் குறைத்து மதிப்பிடக்கூடாது என்பதை நாங்கள் நிரூபிக்கும் நாள் இன்று.

“இதயம் இருக்கும் இடத்தில் வீடு எப்போதும் இருக்கும் என்பதை நாம் நிரூபிக்கும் நாள் இன்று.

“அன்பு உண்மையில் அனைத்தையும் வெல்லும் என்பதை நாம் நிரூபிக்கும் நாள் இன்று. “பிலோலாவில் எங்களுடைய அழகான சிறிய குடும்பத்தை எங்கள் நகரில் வைத்திருப்பதற்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்றும் கூறினார்.

இக்குடும்பத்திற்கு ஆதரவாக (Home To Biloela) ஹோம் டு பிலோலா பிரச்சாரகர் ஏஞ்சலா ஃபிரடெரிக்கின் மனுவில் கிட்டத்தட்ட 600,000 பேர் கையெழுத்திட்டனர், மேலும் 53,000 க்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புகள் மற்றும் மின்னஞ்சல்கள் ஆஸ்திரேலிய அரசியல்வாதிகளுக்கு அனுப்பப்பட்டன.

இந்த சனிக்கிழமையன்று பிலோலாவில் மலர்ச்சியான பல்கலாச்சார விழா கொண்டாடப்படவுள்ளது. பின்னர் ஞாயிற்றுக்கிழமை தர்னிகாவின் ஐந்தாவது பிறந்தநாளுமாகும்.

புகலிட குடும்பம் முதலில் மெல்போர்னில் உள்ள குடியேற்ற தடுப்பு மையத்தில் வைக்கப்பட்டபோது தர்ணிகாவுக்கு ஒன்பது மாத வயது.

முன்னாள் லிபரல் கூட்டணி அரசாங்கம் 2019 இல் மெல்போர்னில் இருந்து இலங்கைக்கு வணிக விமானத்தில் குடும்பத்தை நாடு கடத்த முயன் றது. பின்னர் டார்வினில் விமா னத்தை தரையிறக்க 11 மணிநேர நீதிமன்ற தடை உத்தரவு இட் டது.

நான்கு பேரும் கிறிஸ்மஸ் தீவு தடுப்பு மையத்தில் இரண்டு ஆண்டுகள் வைக்கப் பட்டனர், அப்போது குடிவரவு அமைச்சர் அலெக்ஸ் ஹாக் அவர்களை 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பெர்த்தில் உள்ள சமூக காவலுக்கு மாற்றினார்.

மே மாதம் தொழிற்கட்சி அரசாங்க மாற்றத்தைத் தொடர்ந்து, இடைக்கால உள்துறை அமைச்சர் ஜிம் சால்மர்ஸ், பிரிட்ஜிங் விசாவில் பிலோலாவுக்குத் திரும்ப குடும்பத்திற்கு அனுமதி வழங்கினார். வெள்ளிக்கிழமை பிலோலா நகரத்தில் வரவேற்க காத்திருந்த மக்கள் கூட்டம் உணர்ச்சி வசப்பட்டு, குதித்து ஆரவாரம் செய்து, முழு பிலோலா நகரமே கொண்டாட்டத்தில் மூழ்கியுள் ளதை காணக்கூடியதாக உள்ளது.

---




**சோ. சிவராஜா, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**

### கேள்வி:

எல்லோரும் வீட்டுத் தோட்டம் செய்யுங்கள் என்கிறார்கள். எனது வீட்டில் தோட்டம் செய்தாலும் ஐஞ்சு-ஆறு கிலோ கத்தரியோ, பச்சை மிளகாயோதானே வரும், அதனை காசுகொடுத்து வாங்க அண்ணன் ஜெர்மனியிலிருந்து அனுப்பும் பணம் இருக்கின்றது. இனி நான் எப்படி விவசாயம் செய்வது என்று படித்து அதனை செய்ய வேண்டுமே?. இது எல்லாம் அவசியம் தானா?

### வியுக்தியார்:

அண்ணன் ஜெர்மனியிலிருந்து பணம் அனுப்புகின்றார் சரி தம்பி, ஆனால் அவரும் பாவம் ஜெர்மனியில் பழத்தோட்டத்தில் வேலைசெய்துதான் பணம் அனுப்புகின்றாராரோ தெரியவில்லை. அது சரி தம்பி, பணம் இருந்தால் கத்தரிக்காய் வாங்கலாம்தான். என்னிடமும் பணம் இருக்கிறது தருகின்றேன், பத்து லீட்டர் டீசல் வாங்கித்தருகின்றீர்களா?. காசு இருந்தாலும் கத்தரிக்காய் வாங்க முடியாத சூழல் வரலாம் என்றுதான் கத்தரி மரம் நடச்சொல்கின்றார்கள். கொஞ்சம் வைத்துத்தான் பாருங்களேன்? உங்கள் வீட்டு கத்தரி காய்க்கின்றபோது, வெளியே சந்தையில் கத்திரிக்காய் வாங்க கிடைக்காமல் இருக்கும் பாருங்கள். உங்கள் வீட்டு கத்தரி மரத்தை கவனமாக பாதுகாக்கவேண்டியும் வரலாம். ஏனெனில் அது அந்தக் காலத்தில் தங்கத்தைப்போல பெறுமதியானதாகவும் இருக்கலாம்.

---

**ஆர். ஆனந்த்கணேஷ், வெள்ளவத்தை, கொழும்பு**

### கேள்வி:

யாழ்ப்பாண பொதுநூல்நிலையம் எரிக்கப்பட்டதன் 41வது நினைவுதினத்தை கொழும்பில் கோட்டா கோ கமவில் நினைவுகூர்ந்திருக்கின்றனர். இதிலிருந்தே இந்த பொருளாதார நெருக்கடி தெற்கில் இன வாதத்தை இல்லாமல் செய்திருக்கின்றது தெரிகின்றதல்லவா. பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பது இதைத்தானோ?

### வியுக்தியார்:

சரியாகச் சொன்னீர்கள். பசி வந்தால் பத்தும் பறந்து போகும்தான். ஆனால் பசி போன பின்னர் பறந்துபோனது திரும்பி வராது என்றும் சொல்லவில்லையே. தமிழர்கள் நாங்கள் சமஷ்டி கேட்டு பல தசாப்தங்களாக போராடிக்கொண்டி ருக்கின்றோம். அந்தக் கோரிக்கையை நாம் முன்வைப்பதற்கு முன்னரே வைத்தவர் மறைந்த எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா, ஆனால் அவர்தான் சிங்களம் மட்டும் சட்டத்ததை கொண்டு வந்தவர். நமது போராட்டங்களை- கோரிக்கையை தெற்கில் ஆதரித்தவர்கள் இடதுசாரிகள் மாத்திரமே. ஆனால் அவர்கள் தனித்து தேர்தலில் நின்றால் ஒருவர் கூட தெற்கில் வெல்ல மாட்டார்கள். அதுபோன்ற சிறிய ஒரு கூட்டம் காலிமுகத்திடலில் இதுபோன்ற நினைவு கூரல்களை நடாத்துகின்றது என்றதும் இனவாதம் இல்லாமல்போய்விட்டது என்று சந்தேசப்படாதீர்கள். அடுத்து வருகின்ற தேர்தலில், கோட்டா கோ கமவிற்கு பின்னால் நிற்பவர்களே எப்படி இனவாதம் பேசுகின்றார்கள் என்று பாருங்கள்.

---

**ஆர். சுதன், வடலியடைப்பு, சித்தன்கேணி,**

### கேள்வி:

தமிழக அரசு இலங்கைத் தமிழர்களுக்கு அனுப்பிய நிவாரணப் பொருட்களைக் கூட யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒழுங்காக விநியோகிக்க நமது அரசியல்வாதிகள் இடம்கொடுக்கவில்லையே. இது உங்களுக்கு கோபத்தை உண்டாக்கியதா எரிச்சலை உண்டாக்கியதா?

### வியுக்தியார்:

உண்மையைச் சொல்லப்போனால் எனக்கு மிக்க மகிழ்ச்சியையே உண் டாக்கியது. முதல் மகிழ்ச்சி: இந்த உதவிப்பொருட்களை தமிழர்களுக்கு என்று மாத்திரம் அனுப்பாமல் மொத்த இலங்கையர்களுக்கும் என்று அனுப்ப தமிழக முதல்வர் முடிவெடுத்தபோது மகிழ்ச்சியாக இருந்தது. தமிழகம் எமக்கு எப்பொதும் உதவும் என்பதுதான் சிங்கள மக்களுக்கு தமிழர் மீது இருக்கும் மிகப்பெரிய பயமே. அது இப்போது இல்லாமல் போய்விட்டது. இரண்டாவது மகிழ்ச்சி: நமது அரசியல் வாதிகள் இந்த நிவாரணத்தை தமக்கு வேண்டியவர்களுக்கு விநியோகிக்க அதிகாரிகளுக்கு நிர்ப்பந்தம் கொடுத்தார்களே தவிர, அந்த நிவாரணப் பொதிகளில் தங்கள் பெயர்களையும் எழுதிக்கொடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்காததை நினைத்து.

# "சின்னம்மாவின் "அவர்""

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

கலா அவளின் கைகடிகாரத்தில் நேரத்தைப் பார்த்துக் கொண்டாள். "ஆட்டோ எடுத்துக் கொண்டு வந்திருக் கலாம்" கலா தர்மசங்கடத்துடன் சொன்னாள். யாழ்ப் பாணத்தில் அவர்கள் தங்கியிருக்கும் சொந்தக்காரர் விட்டுக்கும் சின்னம்மா தேவராணி வீட்டிற்கும் இருபது நிமிட நடைதான் என்று அவள் சொல்லியிருந்தாள்.

நேரம் மங்கத் தொடங்கியது. கலா கிட்டத்தட்ட ஓட்டமும் நடையுமாகச் சென்றாள். "கலா ஏன் இந்த அவசரமான நடை. நாங்கள் அங்கு வருவதாகச் சொன்ன நேரத்தைவிடச் கொஞ்ச நேரம் பிந்திப் போகிறோம், அதற்கான காரணத்தைச் சொன்னால் எனது சின்னம்மா கோபிக்கமாட்டார்" அவன் அவளைச் சமாதானம் பண்ணும் தொனியிற் சொன்னான்.

அவள் பட்டென்று திரும்பினாள்.

சின்னம்மாவின் "அவர்" வரமுதல் நாங்கள் அங்கு போகவேண்டும்" கலாவின் குரல் உயர்ந்து ஒலித்தது.

"சின்னம்மாவின் அவரா?" சின்னம்மாவைப் பின் னேரங்களில் வந்து பார்க்கும் "ஒருத்தர்" இருப்பதாக அவனுக்குத் தெரியாது.

"சின்னம்மாவின் அவரா?" அவன் வாயைப் பிழந்தான். அவள் அவனை ஏற இறங்கப் பார்த்தாள். "என்ன நடு வழியில் வைத்து சின்னம்மாவின் "அவர்" பற்றிக் கேட்கப்போகிறீர்களா" ? அவள் வேகமாக நடந் தாள். சிவாவுக்கு கலா சொன்ன விடயம் குழப்பமாக வருந்தது. இதுவரை சின்னம்மாவுக்கு "ஒருத்தர்" இருப் பதைப் பற்றி அவன் மனைவி சொன்னதேயில்லை. அவன் தனக்குள் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டு அவளைப் பின் தொடர்ந்தான்.

அவனின் மனதில் உதித்த கேள்விகளுக்கு மனைவியிடம் பதில் கிடைக்கவேண்டும் என்ற அவன் எதிர்பார்த்தான். ஆனால் கலா விரைவாக நடந்து கொண்டிருந்தாள்.

ஒரு சில நிமிடங்களில் கலா ஒரு வீட்டுக் கேட்டின் மணியை அழுத்தினாள். ஒரு நிமிடத்தில் கதவு திறந்தது. ஒரு அழகிய புன்முறுவலுடன் கலாவின் சின்னம்மா தேவராணி கதவைத் திறந்தாள். கலாவின் முகச் சாயல் தெளிவாக அவளின் சின்னம்மாவில் பதிந்திருந்தது. நடுத்தரவயது என்று சொல்ல முடியாத உடற்கட்டு. அவளின் தோற்றம் ஒரு பெண்துறவியை ஞாபகப்படுத்தியது..

"வாங்கோ தம்பி" தேவராணி தனது மருமகனை வர வேற்றாள். அவளின் அழகிய முகம்போல் குரலும் கணி ரென்று அழகாகவிருந்தது. "கொஞ்ச நேரம் பிந்தி வந்ததற்கு மன்னிக்கவும்" சிவா பணிவுடன் சொன்னான். சின்னம்மா அதற்குப் பதிலாக ஒன்றும் சொல்ல வில்லை. அவர்கள் அவளைப் பின் தொடர்ந்தார்கள்.

பெரிய பழையவீடு. அடர்த்தியான வாழைத் தோட்டத்தின் நடுவில் அமைதியாகக் காட்சி தந்தது.

உள்நுழைந்ததும் கோயிலுக்கள் நுழைந்ததொரு பிரமை. மிகவும் அமைதியாகவும், அதிக சாமான்கள் இல்லாத முன்னறை. சுவரில் மாட்டியிருந்த ஒரு கல்யாணப்படம் அவனின் பார்வையைக் கவர்ந்தது.

அழகான இளம் தம்பதிகளாகத் தேவராணியும் அவளின் மறைந்த கணவன் மாதவனும் புன்னகையும் பூமாலைகளுடனும் படமாகப் பதிந்திருந்தார்கள். படத்திற்கு பூமாலை போடப்பட்டிருந்தது.

அவர்கள் பேசத் தொடங்க முதலே, தேவராணி அவர்களை அடுத்த நாள் மதிய சாப்பாட்டுக்கக் கட் டாயம் வரவேண்டும் என்றும் தற்போது, அவர்களுக்கு இரவுச் சாப்பாடு செய்யத் தனக்கு நேரமில்லை என்றும் சொன்னாள். அதாவது அவள் இப்போது இவர்களுடன் நேரம் செலவளிக்க முடியாது என்று சொல்கிறாள் என்று அவன் புரிந்துகொண்டான்.

அவள் குரலில் இவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குத் தன்னிடம் வரவில்லை என்று கோபத்தின் பிரதி பலிப்பு ஒன்றும் கிடையாது. இவர்களுக்காகச் செய்து வைத்திருந்த பலகாரங்களைக்கொண்டு வந்தாள். அதைத் தொடர்ந்து தேனீர் வந்தது.

சிவா, கலா தம்பதிகளின் இருகுழந்தைகளும் சிவாவின் பெற்றோர்களுடன் கொழும்பில் இருப்பதாகத் தனது சின்னம்மாவுக்குச் சொன்னாள் கலா. அந்த விட யத்தை டெலிபோனில் சில தினங்களுக்கு முன் கலா தேவராணிக்கு டெலிபோனிற் சொன்னது சிவா வுக்குத் தெரியும். அதுபற்றிக் கலா அவளது சின்னம்மாவுக்கு இன்றும் சொன்னபோது,

"அதற்கென்ன அடுத்த தரம் பிள்ளைகளையும் கூட்டி வாருங்கள்" தேவராணி எழுந்தாள். அதாவது தங்க ளைப் புறப்படச் சொல்கிறாள் என்று சிவா உணர்ந்து கொண்டான். அவனுக்குத் தர்ம சங்கடமாகவிருந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு வராததால் பிரித்தானியர் மாதிரி தேவராணியும் கோபப்படுகிறாளோ என்று அவனுக்குப் புரியவில்லை.

சின்னம்மா வெளிக் கதவு வரையும் வந்தாள். அவர் கள் வாழைத்தோட்டத்தைக் கடந்து வரும்போது பெருவாழை இலைகளால் மறைக்கப்பட்டிருந்த இடை வெளியினூடாகத் தூரத்தில் வீட்டின் வேலியருகே படர்ந்திருந்த வேப்ப மரமும் அதனடியிலிருந்த ஒரு பெரும் பாம்புப் புற்றும் பட்டென்று சிவாவின் கண் களில் பட்டு மறைந்தன.. இந்தப் பெண்மணி இந்தப் பெரிய பாம்புப் புற்று இருக்கும் வீட்டில் இருக்கிறாளே? அவன் தனக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டான்..



இவர்கள் வீட்டைக் கடந்ததும் சின்னம்மா கேட்டைப் பூட்டிவிட்டு வீட்டை நோக்கி நடப்பது கேட்டது. கலா சில அடிகள் நடந்துவிட்டுத் தன் நடையை மேலே நகர்த்தாமல் அப்படியே நின்றாள். "சின்னம்மாவின் அவர் வரும் நேரம்" கலா சிவாவின் காதுகளில் முணுமுணுத்தாள்.

"வாட்" அவன் வாயெடுக்கமுதல் அவனின் வாயைப் பொத்தினாள் கலா. "பேசாமலிருங்கள்"

துறவி மாதிரியிருக்கும் இந்தப் பெண்ணுக்கு ஒரு "அவரா?" அவன் தனது மனைவியை ஏற இறங்கப் பார்த்தான். "இருந்தாலும் அது பெரியவிடய மில்லை. பத்தொன்பது வயதில் விதவையாகிய ஒரு தமிழ்ப்பெண் கடைசி காலத்தில் தனக்கு ஒரு துணை யைத் தேடுவது நல்லதுதானே"

அவன் வாய்விட்டுச் சொல்லவில்லை ஆனால் ஒரு தாராளவாதியாக நினைத்துக்கொண்டான். ஆனால் சின்னம்மாவின், அமைதியும், சாந்தமும், கருணைபடிந்த குணமுள்ள துறவி மாதிரியான தோற்றமும் அவனைக் குழப்பியது.

அவன் மனதில் எத்தனையோ கேள்விகள் வரும் என்று கலாவுக்குத் தெரியும் என்ற அவனுக்கும் தெரி யும். மனைவியைக் கேள்விக் குறியுடன் பார்த்தான்.

"இலங்கையில் தொடர்ந்த இந்தப் போர் எத்தனை மனிதர்களை இபபடி ஆக்கியிருக்கிறது தெரியுமா?" கலா அவனைக் கேட்டாள்.. அவள் குரல் சோகமாகவிரந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

"அவளை உலகத்திற்குப் புரியாமலிருக்கலாம் ஆனால் என்னைப் பொறுத்தவரையில் எனது சின்னம்மா ஒரு புனிதமான பிறவி, பைத்தியமல்ல" கலா தனக்குத்தானே மெல்லமாகப் பேசிக் கொண்டாள்.

"ஒரு கணவன் இறந்தால் இன்னொரு துணை தேடுவதில் என்ன பிழை?" என்று கேட்க அவன் வாயெடுத்தபோது அருகில் ஏதோ சர சரவென்று ஏதோ ஊர்வது போலிருந்தது. அவன் பயத்துடன் அங்கும் இங்கும் பார்த்தான்.

கலா அவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு சின் னம்மாவின் கேட் அருகில் நகர்ந்தாள். ஒரு பிரமாண் டமான நாகம் சின்னம்மா வீட்டுக்கு ஊர்ந்து போவது கேட்டின் அடியிலிருந்த சிறு இடைவெளியால் தெரிந்தது. "இதுதான் சின்னம்மாவின் அவர்" கலா கணவனின் கண்களை நேரே பார்த்தபடி சொன்னாள். சிவா திகைப்பில் சிலையாக நின்றான்.

"சின்னம்மாவின் கணவன் கொலை செய்யப்பட்டு இறந்தபின் சில நாட்கள் அவள் யாருடனும் பேசிக் கொள்ளவில்லை. அவருடைய எட்டாம் நாள் சடங்கு செய்த அன்று வேப்ப மரத்தடியில் ஒரு புற்று வந்திருந்தது. அதை எனது அம்மா கொத்தி அழித்து விட்டார். சில நாட்களுக்கப் பின் அதே புற்று வளர்ந்திருந்தது. அம்மா அங்கு சென்றபோது ஒரு பாம்பு படமெடுத்தபடி ஆடிக்கொண்டிருந்தது.

"யாரையும் கூப்பிட்டு இந்தப் பாம்பை அடிக்க வேண்டும்" என்ற அம்மா சொன்னா. அதுவரையும் யாருடனும் பேசாமலிருந்து சின்னம்மா ஓடி வந்தார். "வேண்டாம். அவரை அடிக்க வேண்டாம் என்றாள்". அவளின் மனநிலை குழம்பிப் போயிருந்தபடியால் அவள் பாம்பு உருவில் கணவன் வந்திருப்பதாக நினைக்கிறாள் என்று எல்லோரும் நினைத்தார்கள்.

"என்னையும் எங்கள் பிள்ளையையும் இனி அவர் பார்த்துக்கொள்வார்" என்று சின்னம்மா கதறினாள்.

வயிற்றில் குழந்தையுடன் விதவையாக ஒரு பத்தொன் பது வயது இளம் பெண் நின்ற கதறும்போது அவளுக்கு எதிராக யாரும் எதுவும் சொல்லவிலலை"

சிவா தனது மனைவி அவளின் சின்னம்மாவைப் பற்றி இதுவரை அவனிடம் சொல்லாத விட யங்கள் இவை. "தமிழர்களுக்காகப் போராடு வதாகப் புறப்பட்ட தமிழ் இயக்கங்கள் எதிரியான சிங்கள இராணுவம் செய்த கொடுமையைவிடப் பயங்கரமாகவிருக்கிறதே?

அவன் பெருமூச்சுவிட்டான். யதார்த்ததிற்க அப்பால் வாழும் சின்னம்மாவின் சிதைந்த வாழ்க் கைக்கு் காரணமானவர்களை அவன் மனம் சாப மிட்டது. கலா, சின்னம்மா பற்றிய தனது விளக் கத்தால் குழம்பிப்போன அவனது கைகளை அன் புடன் கோர்த்துக் கொண்டாள். "உங்களுக்கு அப்படியேதும் நடந்தால் நான் உடனே உயிரை விட்டிருப்போன் ஆனால் சின்னம்மா, அதன் பின் யாரையும் அந்தப் புற்று அருகில் போகவிடவில்லை. தினமும் பாம்புக்கு பால் வைப்பார். அடுத்த கணம் தனது கணவனுக்குப் பூஜை செய்வார்." மாலை இருள் பரவத் தொடங்கியது. கலா விம் முவது அவனுக்குப் புரிந்தது. சின்னம்மாவில் கலாவுக்கு ஏன் அத்தனை பாவம், பரிதாபம், மதிப்பு என்று அவனுக்கு இப்போது தெளி வாகப் புரியத் தொடங்கியது.

கலா மெல்லிய குரலில் சின்னம்மா பற்றிய கதையைத் தொடர்ந்தாள்.

" காலம் பறந்தது நாங்கள் அத்தனைபேரும் இந்த வீட்டை விட்டு ஒவ்வொருத்தராக வெளியேறி விட் டோம். சின்னம்மாவின் மகனையும் வெளிநாடு அனுப்பி விட்டாள். எனது வாழ்க்கையை அழித்தவர்களின் வாழ்க்கை நிர்மூலமாவதை நான் காண்பேன் என்று சாபம் போட்டாள்..

போர் முடிந்தது. போரைத் தொடங்கிக் கொலை வெறியாட்டம் போட்டவர்கள் ஒரு சூறாவழியில் தொலைந்த இலைகளாக மறைந்து விட்டார்கள். "வானத்தில் இளம் நிலா எட்டிப்பார்த்தது. இந்த நிலவில் தனது குழந்தையுடன் கணவனுடன் சந்தோ சமாக வாழ்க்கையைத் தொடராமல்போன சின்னம்மா வின் துயர் சிவாவின் மனதை நெருடியது. மனைவியை அணைத்துக் கொண்டான். யாழ்ப்பாணப் பட்டினம் கோயில் அணி ஓசைகளால் நிறையத் தொடங்கியது.

சின்னம்மா இப்போது இறந்து விட்ட கணவ ருக்குப் பூஜை செய்து கொண்டிருப்பாள் என்று நினைத்தபோது அவனால் தனது வாழ்க்கையைத் தமிழ்ப் பயங்கரவாதத்தால் இழந்த பவித்திரமான பெண்மைக்குக் கலங்கியது. கணவனின் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் சிந்தனையைப் புரிந்தவளான கலா அவளை அணைத்துக் கொண்டாள். கலா பெருமூச்சு விட்டாள்.

"சின்னம்மா தனியாகப் பாம்புடன் வாழ்கிறார். இந்தப் பாம்புக்கு எத்தனை வயதோ தெரியாது. அல்லது ஒரு பாம்பு இறந்தால் இன்னொரு பாம்பு வருமோ தெரியாது..ஏதோ ஒரு நல்ல பாம்பு அடிக் கடி வரும். தன்னுடைய "அவர்" பாம்பு உருவில் தன்னைப் பாதுகாப்பதாகச் சின்னம்மா நினைக்கி றாள். அந்தப் பாம்பு பின்னேரத்திற்தான் வரும். அதற்காகச் சின்னம்மா யாரையும் பின்னேரங்களில் வீட்டுக்கு வர அனுமதிப்பதில்லை".

மாதவனை அழித்தவர்கள் ஒட்டுமொத்தமாக அழிந்துவிட்டார்கள். மாதவன் பாம்பாகத் தன் அருமை மனைவியைப் பாதுகாக்கிறானா? சிவா தனது கேள்வியைத் தனக்குள் புதைத்துக் கொண்டான். அவன் விஞ்ஞானம் படித்தவன், ஆனாலும் சின்னம்மா போன்றோரின் மனித சிந்தனையின் நம்பிக்கை களுக்குக் காரணம் அவனுக்குத் தெரியாது.

வானத்தில் இளம் நிலா எட்டிப்பார்த்தது. இந்த நிலவில் தனது குழந்தையுடன் கணவனுடன் சந்தோசமாக வாழ்க்கையைத் தொடராமல்போன சின்னம்மாவின் துயர் சிவாவின் மனதை நெருடியது. மனைவியை அணைத்துக் கொண்டான். யாழ்ப் பாணப் பட்டினம் கோயில் அணி ஓசைகளால் நிறையத் தொடங்கியது.

சின்னம்மா இப்போது இறந்து விட்ட கணவ ருக்குப் பூஜை செய்து கொண்டிருப்பாள் என்று நினைத்தபோது அவனால் தனது வாழ்க்கையைத் தமிழ்ப் பயங்கரவாதத்தால் இழந்த பவித்திரமான பெண்மைக்குக் கலங்கியது. கணவனின் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் சிந்தனையைப் புரிந்தவ ளானக் கலா அவளை அணைத்துக் கொண்டாள். கலா பெருமூச்சு விட்டாள்.

"சின்னம்மா தனியாகப் பாம்புடன் வாழ்கிறார். இந்தப் பாம்புக்கு எத்தனை வயதோ தெரியாது. அல் லது ஒரு பாம்பு இறந்தால் இன்னொரு பாம்பு வருமோ தெரியாது..ஏதோ ஒரு நல்ல பாம்பு அடிக்கடி வரும். தன்னுடைய "அவர்" பாம்பு உருவில் தன்னைப் பாதுகாப்பதாகச் சின்னம்மா நினைக்கிறாள். அந்தப் பாம்பு பின்னேரத்திற்தான் வரும். அதற்காகச் சின்னம்மா யாரையும் பின்னேரங்களில் வீட்டுக்கு வர அனுமதிப்பதில்லை".

மாதவனை அழித்தவர்கள் ஒட்டுமொத்தமாக அழிந்துவிட்டார்கள். மாதவன் பாம்பாகத் தன் அருமை மனைவியைப் பாதுகாக்கிறானா? சிவா தனது கேள்வியைத் தனக்குள் புதைத்துக் கொண் டான். அவன் விஞ்ஞானம் படித்தவன், ஆனாலும் சின்னம்மா போன்றோரின் மனித சிந்தனையின் நம்பிக்கை களுக்குக் காரணம் அவனுக்குத் தெரியாது.(முற்றும்)

# வரலாற்றில் ஒரு மகாராணி

## சமநிலையை இழக்கும் ஜனநாயகமும் முடியாட்சியும்?

மாலி

மகாராணி இரண்டாம் எலிஸபெத், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை மிக நீண்ட காலம் ஆட்சி செய்யும் அரசி என்ற தனித்த பெருமையுடன், ஆட்சியில் எழுபது ஆண்டுகளை நிறைத்திருக்கிறார். நான்கு நாள் விடுமுறையுடன், மகாராணியின் எழுபதாவது ஆண்டு நிறைவு, கடந்த வாரம் சிறப்பான பல வைபவங்களுடன் பிரிட்டனில் கொண்டாடப்பட்டது. 96 வயதான மகாராணியின் உடல் ஆரோக்கியம், இந்த வைபவங்களில் அவர் உற்சாகத்துடன் கலந்துகொள்வதை தடுத்திருந்தாலும், அரச குடும்பத்தினருடன் பொது மக்களும் இணைந்து, குதூகலமாக இந் நாள்களில் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

முதல் நாள் வியாழக்கிழமை பக்கிங்ஹாம் அரண்மனையின் உப்பரிகையில் நின்று, வானில் விமானங்களின் வைபவ அணிவகுப்பு சாகசங்களையும், படைகளின் வண்ண அணிவகுப்புக்களையும் சிறிதுநேரம் பார்த்து மகிழ்ந்தவர், மற்றிரு தினங்களும் எந்த வைபவத்திலும் கலந்துகொள்ளவில்லை. சென். போல்ஸ் தேவாலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட ஆராதனை அவர் கலந்துகொள்ளாமலேயே, மற்றெல்லோருடனும் சிறப்புற நிகழ்ந்தது. இறுதிநாள் ஞாயிற்றுக்கிழமையும், பலரும் எதிர்பார்க்கவில்லை. அன்று வைபவ இறுதியில், பங்கிங்ஹாம் அரண்மனை உப்பரிகையில் மீண்டும் அவர் சில நிமிடங்கள் தன்னுடைய முடிக்குரிய மூன்று தலைமுறை வாரிசுகளுடன் தோற்றினார். 'ஒவ்வொரு நாள் நிகழ்விலும் நான் கலந்துகொள்ளா விட்டாலும், என் உள்ளம் உங்களுடனேயே இருந்தது. மேலும், என் இயல்புக்கு எட்டியவரை, எனது குடும்பத்தினரின் அநுசரணையுடன் உங்களுக்கான தொடர்ந்த பணியில் நான் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவேன்' என்ற மகாராணியின் செய்தி அங்கு வெளியானது.

1952 பெப்ரவரி 6ஆம் திகதி, பிரிட்டிஷ் பாடசாலையொன்றில் தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தபோது எல்லோர் மனதிலும் பலவிதமான யூகங்கள் எழுந்தன. ஒரு சிறுமி சொன்னாள், "எலிஸபெத் இளவரசியை சிங்கம் கடித்துச் சாப்பிட்டு விட்டது போலிருக்கிறது."

இளவரசி எலிஸபெத்தும் கணவர் பிலிப் இளவரசரும் ஆறு தினங்களுக்கு முன்னர் ஓய்வுக்காக கெனியா சென்றிருந்தார்கள். வன விலங்குகள் நிறைந்த காட்டுப் பகுதியில், மர உச்சியில் அமைந்த உல்லாச விடுதியொன்றில் அவர்கள் இரவு தங்கியமை செய்தியாக பிரிட்டனில் முதல்நாள் வெளிவந்திருந்தது. ஆனால், இளவரசியாக அந்த மர உச்சி உல்லாச விடுதியில் ஏறியவர், மறுநாள் அங்கிருந்து மகாராணியாக கீழிறங்கினார்.

அந்த இரவு, பிரிட்டனில் தந்தையார் ஆறாம் ஜோர்ஜ் மன்னர் நித்திரையில் காலமானார். ஜோர்ஜ் மன்னரின் மறைவை அறிவித்துத்தான் தேசிய கொடி பாடசாலையில் அரைக் கம்பத்தில் பறந்ததென்பது பின்னர்தான் புரிந்தது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக்குமாக திட்டமிடப்பட்டிருந்த சுற்றுப் பயணத்தை 56 வயதான தந்தையார் சுகவீனமுற்ற நிலையில் மேற்கொள்ளவியலாதிருந்தபோது, இளவரசி எலிஸபெத்தும் பிலிப் இளவரசரும் மன்னர் சார்பில் அப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக மணமாகியிருந்த இளரசிக்கு அப்போது வயது 25.



புற்றுநோய் காரணமாக பல்வேறு சத்திரசிகிச்சைகளுக்கு உள்ளாகி, உடல் நிலை குன்றியிருந்த மன்னர், விமான நிலையத்தில் புதல்வியையும் கணவரையும் வழியனுப்பிவைத்தார். அது, 1952 ஜனவரி 31.

பெப்ரவரி 5ஆம் திகதி நைரோபியிலிருந்து நூறு மைல்கள் தொலைவில் வனவிலங்குகள் சரணாலயம் ஒன்றில் அவர்கள் அன்றைய பொழுதைக் கழித்தார்கள். கெனியாவின் பிரதம நீதியரசர் அளித்த அரச இராப் போசன விருந்தை முடித்து, அந்த மர உச்சி உல்லாச விடுதியில் இரவு தங்கியபோது, இளவரசியின் அந்தரங்க செயலாளர் இளவரசர் பிலிப்பின் உதவியாளருக்கு மன்னர் மரணமாகிவிட்ட செய்தியை தெரிவித்தார். அப்போது, பெப்ரவரி 6ஆம் திகதியாகியிருந்தது. முடிக்குரிய வாரிசான இளவரசி எலிஸபெத், அப்போது எலிஸபெத் மகாராணி!

காலையில், அந்த உல்லாச விடுதியிலிருந்து இறங்கி, இருபது மைல்கள் தொலைவில், கெனிய அரசாங்கம் திருமணப் பரிசாக அவர்களுக்கு அளித்திருந்த தோட்டத்தில் அமைந்த 'சகானா' விடுதிக்கு வந்தபோது, தந்தையாரின் மரண செய்தியை இளவரசர் பிலிப் தெரிவித்தார்.

25ஆவது வயதில் மகாராணியான எலிஸபெத், தந்தையாரின் மரண துயர் ஒருபுறமிருக்க, தனது மீதி பயணங்களை தொடரவியலாது இரத்துச்செய்யநேரும் மன்னிப்பு கடிதங்களை எழுதினார். லண்டன் திரும்பிய மகாராணியை, விமான நிலையத்தில் பிரதமர் வின்சன் சேர்ச்சில் வரவேற்றார்.

மரியாதை உணர்வுடனான ஜோர்ஜ் மன்னரின் மறைவில் ஓர் ஆவலும் கிளர்ந்தது. அழகான இளம் இளவரசி, மகாராணியாகிறார்.

1952 பெப்ரவரி 8ஆம் திகதி இளவரசி எலிஸபெத், சென் ஜேம்ஸ் மாளிகையில் நடைபெற்ற 20 நிமிட வைபவத்தில் மகாராணியாக தன்னை சம்பிரதாய பூர்வமாக பிரகடனப்படுத்தினார். ஐக்கிய இராச்சியத்துடன் இலங்கையும் உட்பட்ட ஏழு சுதந்திர நாடுகளினது அரசியாகவும், பொதுநல நாடுகளின் தலைவியாவும் அப் பிரகடனம் அமைந்தது. "என்னுடைய தந்தையாரின் திடீர் மறைவினால் ஆட்சியின் கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்க நான் விழைகிறேன். தன்னுடைய ஆட்சிக் காலம் முழுமையும் எனது தந்தையார் ஆற்றிய விதத்திலேயே, உலகம் முழுவதிலுமாக பரந்து வாழ்கின்ற எனது மக்களின் மகிழ்ச்சியையும் சுபீட்சத்தையும் பெருக்க நான் எப்போதும் உழைப்பேன் என்று சொல்வதில் என் உள்ளம் பெரு நிறைவடைகிறது" என்று, அவர் பிரகடனம் செய்தார்.

மூன்று தினங்கள் வெஸ்ற்மின்ஸ்ரர் மண்டபத்தில் மன்னரின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது சுமார் மூன்று லட்சம் மக்கள் அஞ்சலிசெலுத்தினார்கள்.

1953 ஜூன் 2ஆம் திகதி எலிஸபெத் மகாராணியின் முடிசூட்டு விழா நடைபெற்றது. வானிலை அவதானிகளின் ஆலோசனையுடன் பிரகாசமான கோடை நாளாக அது நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பேரரசியைப் போற்றி, மாமழையும் அன்று வாழ்த்திற்று.



விக்ரோறியா மகாராணிக்குப் பின்னர் மிக நீண்ட காலம் அரசாள்பவராக எலிஸபெத் மகாராணி பிரிட்டிஷ் வரலாற்றில் இடம் பெற்று, அவரது ஆட்சிக் காலத்தின் எழுபது ஆண்டுகள் நிறைவை அவர் இப்போது எய்தியிருக்கிறார். விக்ரோறியா மகாராணி 64 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.

முன்னதாக, மூன்றாம் எட்வேர்ட் மன்னர் 50 ஆண்டுகள், மூன்றாவது ஹென்றி 56 ஆண்டுகள், மூன்றாம் ஜோர்ஜ் 59 ஆண்டுகள் ஆட்சியிலிருந்தனர்.

பிரதமர்கள் வருவார்கள், போவார்கள். ஆனால், அரசர்களும் அரசிகளும் அரசாங்கத்தின் ஒருவகை தொடர்ச்சியை பேணுவதாக முடியாட்சிக்கு ஆதரவானவர்கள் கருதுகிறார்கள்.

தன்னுடைய 70 ஆண்டுகள் ஆட்சிக் காலத்தில் எலிஸபெத் மகாராணி 14 பிரதமர்களைப் பதவியில் பார்த்திருக்கிறார். முதல் பிரதமர் சேர். வின்சன் சேர்ச்சில் வயதில் பாட்டனாரைப் போல இருந்தபோது, தற்போதைய பிரதமர் பொறிஸ் ஜோன்சன் மகாராணிக்கு பேரப் பிள்ளை போன்றவர்.



பொதுவாக, இவர்கள் எல்லோருடனுமே நியாயமான அளவில் ஒரு நல்லுறவை மகாராணி எப்போதும் பேணிவந்ததாகவே அரசியல் அவதானிகள் மதிப்பிடுகிறார்கள். இல. 10 டவுணிங் தெருவில் குடிவந்த பலர் முடியாட்சியைப் பாதிப்பதும் அலட்சியப்படுத்துவதுமான போக்குகளைக் கொண்டிருந்த போதிலும் மகாராணி தனது பெருந்தன்மையைப் பேணுவதில் மிகவும் சிறப்புடன் விளங்குவதாகவே கணிக்கப்படுகிறார்.

பிரிட்டிஷ் முடியாட்சியின் அதிகாரங்கள் பலகாலமாகவே சிறிதுசிறிதாக பறிக்கப்பட்டுவந்தன. எனினும், 1952இல் எலிஸபெத் மகாராணி முடிசூடிய வேளையில் அதிகாரங்கள் பல அவர்வசமிருந்தன. பிரதமர் ஒருவர் இராஜினாமா செய்யும் வேளையில், தான் விரும்பும் ஒருவரை அழைத்து, புதிய தோர் அரசாங்கத்தை அமைக்கும் அதிகாரம் அவரிடமிருந்தது. பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான பிரதமரின் கோரிக்கையை ஏற்கும் அல்லது மறுக்கும் அதிகாரமும் இருந்தது.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை அவர் இப்போது இழந்திருக்கிறார். பிரதமர் ஒருவர் மரணமடையும்போது அல்லது இராஜினாமா செய்யும்போது அரசாங்கத்தை அமைக்க எவரை அழைப்பதென்பதற்கான ஆலோசனைகளை அரசியல் நிபுணர்களுடனும் சிரேஷ்ட அரசியல்வாதிகளுடனும் அவர் மேற்கொள்வதும் இல்லாமல் போயிருக்கிறது. அரசியல் கட்சிகள் தாமே தமது தலைவரைத் தெரிவு தன்மூலம், இந்த உரிமை மகாராணியிடமிருந்து இல்லாதுபோகிறது.

ஜனநாயகமும், அரசியல்சட்ட அதிகாரம் மிக்க மரபுவழி முடியாட்சியும் இணைந்த பிரிட்டனின் ஒரு சமநிலை அரசரமைப்பு, இப்போது ஜனநாயக பண்புகள் இல்லாதுபோகும் அரசியல்வாதிகளிடம் அதன் சமநிலையை இழப்பதான கருத்து நிலவுகிறது.

தன்னுடைய ஏழு தசாப்த காலத்தில், சகல அரசியல் கட்சிகளையும் சார்ந்த அரசியல் தலைவர்களும் பல்வேறு விதங்களில் தமது லாபங்களுக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், அனைத்து அரசியல்வாதிகளையும்விட உயர்வான மதிப்புடனும் பிரபல்யத்துடனுமே மகாராணி திகழ்கிறார்.

1997இல் இளவரசி டயானாவின் மரணத்தையடுத்து சூழ்ந்த கருமேகங்களையெல்லாம் விலக்கி, தனது சேவையாலும், கௌரவத்தினாலும், நடத்தையாலும் தன்னை ஓர் உன்னத நிலையில் அவர் பிரகாசமுறச் செய்கிறார். இதில் அவருக்கு தோன்றாத் துணையாக விருந்த கணவர் இளவரசர் பிலிப்பின் மரணமும் (2021) அவரில் ஒரு தளர்வை ஏற்படுத்தியே இருக்கிறது. இளவரசர் சார்ள்ஸ் இப்போது மகாராணிக்கு பதிலாக வைபவங்கள் பலவற்றிலும் கலந்துகொள்கிறார். அண்மையில், பிரிட்டிஷ் பாராளுமன்ற கூட்டத்தொடரையும் முதன்முதலாக மகாராணிக்கு பதிலாக இளவரசர் சார்ள்ஸ் கலந்துகொண்டு தொடக்கிவைத்தார்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 

பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

24. 2 28. 2 32. 1
25. 3 29. 2 33. 1
26. 1 30. 3 34. 2
27. 2 31. 1 35. 1

---

### கல்வி tv CHANNEL-1

**05.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி tv CHANNEL - 2

**05.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கோட்டாவை வீட்டுக்கு அனுப்பும் முயற்சியில் ரணில் விக்ரமசிங்க முதலில் இறங்கவேண்டும்

## வலியுறுத்துகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜூன். 12

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரைக்கும் நாட்டின் பொருளாதாரத்தை அதாள பாதாளத்தில் இருந்து மீட்டெடுப்பது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் எதுவுமே செய்ய முடியாது. எனவே, கோட்டாபயவை உடன் வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையில் ரணில் முதலில் இறங்க வேண்டும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ச விலகினால்தான் மக்களின் மனதை வென்று பிரதமர் ரணிலால் பணியாற்ற முடியும் என்றும் அவர் சஜித் சுட்டிக்காட்டினார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லுமாறு கோரி மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் தொடர்கின்றது. ஆனால், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய புள்ளியாக விளங்கும் கோட்டாபய வெட்கம் இல்லாமல் இன்னமும் ஜனாதிபதிக்கான கதிரையில் அமர்ந்திருக்கின்றார். தோல்வியடைந்த ஜனாதிபதியாகத் தான் செல்லமாட்டார் என்று அவர் சவால் விடுகின்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டின் நலன் சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை உடன் வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையில் ரணில் முதலில் இறங்க வேண்டும்.



ஏனெனில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரைக்கும் நாட்டின் பொருளாதாரத்தை அதாள பாதாளத்தில் இருந்து மீட்டெடுப்பது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் எதுவுமே செய்ய முடியாது.

ராஜபக்ஷ குடும்பத்தினரைக் காப்பாற்றவே பிரதமர் பதவியை ரணில் பொறுப்பேற்றார் என்று பலராலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில்கொண்டு ரணில் செயற்பட வேண்டும். கோட்டாபயவுக்கு எதிரான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத் தைக் கொச்சைப்படுத்தும் நடவடிக்கையில் ரணில் ஈடுபடக்கூடாது - என்றார். (அ)

# குடிவரவு குடியகல்வு அலுவலகங்கள் நாளை வழமை போன்று இயங்கும்

கொழும்பு, ஜூன். 12

நாளை திங்கட்கிழமை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் ஏனைய பிராந்திய அலுவலகங்கள் வழமை போல இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை அரச நிறுவனங்களுக்கு விசேட விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும், அத்தியாவசிய சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் இவ்வாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அடுத்த வாரம் தனியார் பஸ் சேவை முழுமையாக முடங்கும் அபாயநிலை

கொழும்பு, ஜூன். 12

நிலவும் டீசல் தட்டுப்பாடு காரணமாக, அடுத்த வாரத்தில் தனியார் பஸ் சேவை முழுமையாக முடங்கக்கூடும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையினால் வழங்கப்படும் டீசல் தற்போது பற்றாக்குறையாக உள்ளது. டீசல் இன்மையால், இன்றைய தினம் பெருமளவான பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை.

இன்று இந்த நிலைமை மேலும் தீவிரமடையும். எரிபொருள் வழங்கப்படாமையால், அடுத்த வாரம் தனியார் பஸ் சேவை முழுமையாக முடங்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம், அடுத்த வாரத்தில், பாடசாலை போக்குவரத்து சேவைகளும் தடைப்படும் அபாயம் உள்ளதாக அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து சேவைச் சங்கத்தின் தலைவர் மல்ஸ்ரீ டி சில்வா தெரிவித்துள்ளார்.

டீசலைப் பெற்றுக்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது. இதன் காரணமாக பாடசாலை பஸ் சேவையிலிருந்து பலர் விலகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)


# வீட்டுத் தோட்டம் செய்வோம்

வளம் கொழிக்கும் பூமி என
வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்
பெயர் பொறித்த நம் தாய்நாடு.
இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்
உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.
மூன்று வேளை உணவு இருவேளையாகவும்
ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.
பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே
நிழலாடுகின்றன...!



போதும்...! ஏந்திய கைகள்
சற்றே உயரட்டும்

நாம் வாழப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!
வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்
நமது பசியை நாமே போக்க...
எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!
பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு
போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!
திட்டமிடலும் உழைப்புமே
நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!

DAN TELEVISION
www.dantv.tv

ஈழநாடு
Eelanadu


# நாட்டில் 66 வருடங்களில் 45 எம்.பிக்கள் படுகொலை!

## டலஸ் எம்.பி. தகவல்

கொழும்பு, ஜூன். 12

இலங்கையில் கடந்த 66 வருடங்களில் 45 பாராளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

1956 முதல் 2022 வரையான காலப்பகுதியிலேயே இக்கொலைகள் இடம்பெற்றுள்ளன என்று பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் தகவல் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமராக இருந்த எஸ். டப்ளியூ. ஆர்.டி பண்டாரநாயக்கவின் கொலையே முதலாவது படுகொலையாகும். இறுதியாக அமரகீர்த்தி அத்துக்கோரள கொலை செய்யப்பட்டார்.

ஜனாதிபதி பதவியை வகித்த ஒருவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த ஒருவரும் எமது நாட்டில் கொல்லப்பட்டுள்ளனர்.

அதாவது 19 மாதங்களுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இக்கொலைகள் இடம்பெற்றுள்ளன - என்றார். (அ)

## இலங்கை...

இலங்கையில் கவனத்திற்கொள்ளப் படவேண்டிய 1.7 மில்லியன் சிறார்களின் வாழ்க்கையை பாதுகாப்பதற்காகவும் போசாக்கு, சுகாதாரம், சுத்தமான குடிதண்ணீர், கல்வி மற்றும் உளநல மேம்பாடு ஆகியவற்றுக்காகவும் இந்த நிதி கோரப்பட்டுள்ளதாக யுனிசெவ் நிறுவனம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 04 மாதங்களுக்குள் பாரிய அனர்த்த நிலையை எதிர்நோக்கக்கூடிய இலங்கை மக்களின் அவசர தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே வேண்டுகோளை முன்வைத்துள்ளது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையால், நாட்டில் உள்ள அரைவாசிக்கும் மேற்பட்ட சிறார்களுக்கு ஏதேனுமொரு வகையில் மனிதாபிமான உதவி தேவைப்படுவதாகவும்யுனிசெவ் அமைப்பு கூறியுள்ளது.

தற்போதைய நெருக்கடியால் குடும்பங்கள் தங்களை வரையறை செய்து கொண்டுள்ளதாக யுனிசெவ் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்ரியன் ஸ்கோக் தெரிவித்துள்ளார்.

சிறார்கள் துன்பப்படுவதாகவும், பசியுடன் உறங்கச்செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அநேகமான சிறார்கள் தினமும் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறார்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் அடங்கலாக வைத்தியசாலைகளிலுள்ள நோயாளர்களுக்கான மருத்துப் பொருட்கள் சடுதியாக குறைவடைந்து செல்வதாகவும் கிறிஸ்ரியன் ஸ்கோக் தெரிவித்துள்ளார்.

நெருக்கடி நிலைக்கு முன்பிருந்தே, தெற்காசியாவில் மந்தபோசனைக்குள்ளான சிறார்கள் காணப்படும் இரண்டாவது நாடாக இலங்கை பதிவாகியுள்ளதுடன், 05 சிறார்களில் இருவருக்கு மூன்று வேளைகளும் உரிய வகையில் உணவு கிடைப்பதில்லை எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

## அரசியல்...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மக்கள் வாக்குரிமையை தக்க வகையில் பயன்படுத்த வேண்டும். அந்த கருவி ஊடாக உரியவர்களுக்கு அதிகாரத்தை வழங்கவேண்டும். ஆனால் கடந்த காலங்களில் அவ்வாறு வழங்கப்படவில்லை. அதனால்தான் 74 வருடங்களாக நாடு நாசமடைந்துள்ளது.

ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி போராட்டம் இடம்பெற்று வருகின்றது. அந்த கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எனினும், மக்களின் போராட்டத்தால் பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் பதவியிலிருந்து விலகவேண்டியநிலை ஏற்பட்டது.

மக்கள் அதிகாரம் உருவாகும் போது அரசாங்கங்கள் இருக்கும். ஆனாலும் அரசாங்கங்கள் தாங்கள் நினைத்ததை போன்று நடக்க முடியாது. மக்கள் அதிகாரத்துடன் பேசியே செயற்பட முடியும். தற்போதைய மக்கள் அதிகாரம் காணப்படுகிறது. ஆனால் அதுவொரு அமைப்பாக உருவாக வேண்டும்.யார் ஆட்சிக்கு வந்தாலும் மக்கள் அதிகாரத்துடன் பேசியே செயற்படவேண்டும்

நிறைவேற்றதிகார முறை இல்லாமல் செய்யப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். சர்வஜன வாக்கெடுப்பை மக்கள் மத்தியில் நடத்தி புதிய அரசியலமைப்பை உருவாக்கவேண்டும். அது வெளியில் இருந்து பெறப்பட வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேசியபோதும் இதற்கு உடன்பட்டார்கள். நிறைவேற்று அதிகார முறையை இல்லாமல் செய்து தேசிய பிரச்னைக்கு இறுதி தீர்வு காணப்படவேண்டும்.

இனவாதம் இன ஒடுக்குமுறைக்கு எதிரான சட்டங்களை கொண்டு வரவேண்டும். அரசியல் மாற்றம் ஏற்பட்டாலே பொருளாதார ரீதியான பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும்-என்றார். (அ)

## ரஞ்சனுக்கு...

விடுத்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவைச் சிறைச்சாலையில் சென்றுபார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரஞ்சன் ராமநாயக்கவுக்குக் கடுமையான தண்டனை கிடைத்துள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியை அரசு மீள் பரிசீலிக்கும் என நம்புகின்றேன். அவர் மேலும் ஒன்பது மாதங்கள் சிறைவாசம் அனுபவிக்கவுள்ளதால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன்.

ரஞ்சன் ராமநாயக்க தனது இலட்சியங்கள் மற்றும் இலக்குகளைக் கைவிடவில்லை. தற்போது தனது கல்வி இலக்கை கடுமையாகப் பின்பற்றி வருகின்றார்.

சிறையிலிருந்து வெளிவந்தவுடன் ரஞ்சன் ராமநாயக்க தண்டனைக்கு முன்னர் எம்.பியாக இருந்ததைப் போன்று தொடர்ந்தும் மக்களுக்குச் சேவையாற்றுவார்-என்றார். (அ)

## உடைகிறது...

ரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் முறைமையில் ஏற்படுத்தப் படவேண்டிய மாற்றங்கள் குறித்து நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் புதிய அரசியல் கட்சி உருவாக்கத்தின் போது எழும் அடிப்படை சட்டப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்காகவே இவர்கள் சந்தித்து கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவில் எஞ்சியுள்ள 117 பாராளுமன்ற உறுப்பினர்களில் 49 பேர் ஏற்கனவே டலஸ் அழகப்பெருமவுடன் இணைந்து புதிய அரசியல் கட்சி உருவாக்கத்தின்போது இணையவுள்ளதாக பொதுஜன பெரமுனவின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளிட்டோரைத் தவிர ஏனைய அனைவரும் புதிய கட்சியில் இணையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

“திறமை மற்றும் படைப்பாற்றலுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது் ஊழல், தீவிரவாதம் மற்றும் குடும்பவாதத்தை ஒழிப்போம்“ என்பதே புதிய அரசியல் சக்தியின் கருப்பொருள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## அமைச்சராக...

பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, மகளீர் விவகார அமைச்சு பதவி டயானா கமகேயுக்கு வழங்கப்படவுள்ளதென அறிய முடிகின்றது. (அ)

## எரிபொருள்...

பொருள் பாவனையாளர்களையும் தமது பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள் ஊடாக தனியார் பஸ்களுக்கான டீசல் வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்ள ஒவ்வொரு எரிபொருள் களஞ்சியசாலைக்கும் தனியார் பஸ் சங்கங்களின் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# அதானி குழுமத்துக்கு இலங்கையின் எரிசக்தி திட்டங்களை வழங்குங்கள்!

## கோட்டாவுக்கு அழுத்தம் கொடுத்தாராம் மோடி

கொழும்பு, ஜூன். 12

எரிசக்தி முதலீட்டுத் திட்டங்களை அதானி குழுமத்திற்கு வழங்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியதாக, ஜனாதிபதி தம்மிடம் தெரிவித்தார் என்று இலங்கை மின்சார சபைத் தலைவர் இலங்கையின் கோப் குழுவிடம் தெரிவித்தார்.

கொழும்பின் ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் பொது நிறுவனங்கள் மீதான விசாரணை (கோப்)குழுவில் முன்னிலையான, மின்சாரசபையின் தலைவர், 500 மெகாவாட் காற்றாலை மின் நிலையத்தை இந்தியாவின் அதானி குழுமத்திற்கு வழங்குமாறு இந்தியப் பிரதமர் தம்மை வலியுறுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிட்டதாக தெரிவித்தார்.

எனினும் இது தமக்கும் அல்லது மின்சார சபைக்கும் சம்பந்தமான விடயம் அல்ல, இது முதலீட்டுச் சபைக்கு அனுப்பப்படவேண்டும் என்று தாம் ஜனாதிபதியிடம் கூறியதாக மின்சார சபையின் தலைவர் கோப் குழுவிடம் தெரிவித்தார்.

அதன் பின்னர் தாம் இது தொடர்பில் திறைசேரி செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்ததாகவும், அரசாங்கத்துக்கு அரசாங்கம் என்ற அடிப்படையில் இது தொடர்பில் ஆராயுமாறும் தாம் அதில் கேட்டுக்கொண்டதாகவும் மின்சாரசபையின் தலைவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், இந்த உடன்படிக்கை, அரசாங்கத்துக்கு அரசாங்கம் என்ற அடிப்படையிலான ஒப்பந்தம் என்பதால், முறையாக கோரப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொண்டார்.

அதானி குழுமத்தின் பங்களிப்புடன் வடக்கு கரையோரத்தில் 500 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான, அரசாங்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான முறையாக கோரப்படாத உடன்படிக்கையே, 1989 ஆம் ஆண்டு சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவதற்கு முக்கிய காரணம் என்று அண்மையில் பாராளுமன்றத்தில் இலங்கையின் எதிர்க்கட்சி குற்றம் சாட்டியது.

அத்துடன், 10 மெகாவாட் திறனுக்கு அப்பாற்பட்ட திட்டங்களை கேள்விப் பத்திர முறையில் செயற்படுத்தவேண்டும் என்றும் எதிர்க்கட்சி கோரியது.

எனினும் இலங்கை மின்சாரத் திருத்தச் சட்டமூலம் கடந்த வியாழக்கிழமையன்று, பெரும்பான்மை வாக்குகளால் திருத்தங்கள் இன்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (அ)

## வீடு புகுந்து குடும்ப பெண் தாக்குதல்:

# சந்தேக நபர்கள் கைது செய்யப்படாததை கண்டித்து மட்டக்களப்பில் போராட்டம்!

மட்டக்களப்பு, ஜூன். 12

வீடு புகுந்து குடும்ப பெண் தாக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்படாததை கண்டித்து குடும்ப உறுப்பினர்களால் நேற்று சனிக்கிழமை வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக கவனஈர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் வீடு புகுந்து குடும்பப்பெண் தாக்கப்பட்டமையை கண்டித்தும் பொலிஸார் சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்து நேற்று காலை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உறவினர்கள் நீதி வேண்டி பொலிசாருக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று காலை வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக தந்தையுடன் மூன்று பிள்ளைகள் ‘வீடு புகுந்து தாக்கியவர்களை இன்னும் ஏன் கைது செய்யவில்லை.’ ‘வாழைச்சேனை பொலிஸார் ஒரு பக்கச் சார்பாக நடப்பது ஏன்.’ ‘எமக்கு ஏற்பட்ட அநீதிக்கு நீதி வேண்டும்.’ என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தி தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

கடந்த புதன் கிழமையன்று பதுரியா வீதி பிறைந்துறைச்சேனையில் வசிக்கும் இரண்டு குடும்பத்தினருக்கிடையில் இடம்பெற்ற பிணக்கானது கைகலப்பாக மாறியதினால் உதுமாலெப்வை றிஸானா (வயது-36) என்ற குடும்பப் பெண் தலையில் பலத்த தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட குடும்ப பெண்ணின் கணவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தும் சந்தேக நபர்களுக்கெதிராக பொலிசார் நடவடிக்கை எடுக்காது நாட்களை கழித்ததினால் நீதி வேண்டி வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் சம்பவ இடத்தில் இவர்களுக்கு ஆதரவாக ஒன்று கூடினர். குறித்த நிலவரத்தை அறிந்து கொண்ட பொலிஸார் ஒன்றுகூடியவர்களை கலைந்து செல்லுமாறு பணித்து போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக் கொண்டனர்.

சந்தேக நபர்களை கைது செய்தால் மாத்திரமே தமது போராட்டத்தை கைவிடுவதாக போராட்டத்தில் ஈடுபட்டோர் பதில் தெரிவித்தனர்.

நிலைமையினை கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸார் விரைந்து செயற்பட்டு சந்தேக நபர்கள் மூவரையும் விசாரணைக்கு அழைக்கப்பட்டதனை தொடர்ந்து கவனயீர்ப்பு போராட்டம் கைவிடப்பட்டது. (அ)

## கைவிடப்பட்ட...

இலங்கையின் 24ஆவது இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே நேற்று காலை கண்டியிலுள்ள பல்லக்கு ஆலயத்துக்கு சென்றார்.

இதன்போது இராணுவத் தளபதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

இலங்கை இராணுவத்தில் பயிர்ச்செய்கைக்கான பணிப்பாளர் சபையொன்று உள்ளது.

பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு படையினரும், மேலதிக படையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

கைவிடப்பட்ட அரச காணிகளில் விவசாயம் செய்யும் புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்களுக்காக உழைக்க எந்த நேரத்திலும் தயாராக இருக்கும் இலங்கை இராணுவம் பயிர்ச்செய்கை யுத்தத்திற்கு தயாராகி வருகிறது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மரண அறிவித்தல்



தோற்றம்
21 - 03 - 1944

மறைவு
09 - 06 - 2022

## திருமதி ஜெயதேவி கந்தசாமி

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கனடா Stouffville ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயதேவி கந்தசாமி அவர்கள் 09.06.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம், சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரகத்தி, சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், முகுந்தராஜ், சுமங்கலா, ஸ்கந்தறூபன், சுதாகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும்,திரவியம், நவமணி, சிவராஜா, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் அவர்களின் உடன்பிறவாச் சகோதரியும், ஜெயந்தி, கருணகுமார், சுமிதா, ரவீந்திரா (சதீஷ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரீத்தி, பிரணீத், பிரதீஷ், பிரணவ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும்,சிவன், தாமிரா, ஏகன், ரிஷானா, ரேஷான் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்ற செல்வதீபம், கனகசிங்கம், சரஸ்வதி, முருகேசு, காலஞ்சென்ற சிவகாமி, சிறீரஞ்சித மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வம், சிவசோதி, சிறிசோதி, பிரியதர்சினி, சிவதர்சினி, விஜிதா, சுஜாதா, விஜிதரன் ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், காலஞ்சென்ற பரம், அபிராமி, பிரகலாதன், கிருத்திகா, கிருஷாந்தன், சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமியும், பவளகாந்தராஜா, கலாமோகன், சுவேந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், சுஜீவன் - நித்தியா, வினோத்- ஜியா, சுரேகா, அச்சயா, வினுஷ், சாரங்கி ஆகியோரின் பாசமிகு சின்ன அம்மம்மாவும் ஆவார்.

பார்வைக்கு:
Sunday, 12 Jun 2022 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை:
Monday, 13 Jun 2022 1:30 PM - 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்:
Monday, 13 Jun 2022 3:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**முகுந்தன் - மகன்.**

தொடர்புகளுக்கு:
**முகுந்தன் - மகன்**
Mobile : +14162580716
**ஸ்கந்தறூபன்(றூபன்) - மகன்**
Mobile : +14163000018
**கருணா - மருமகன்**
Mobile : +16472328645
**சதீஷ் - மருமகன்**
Mobile : +14166699619
**சுதன் - பெறாமகன்**
Mobile : +16478965039
**மோகன் - மருமகன்**
Mobile : +16478345774

# தற்போதுள்ள அரசு மாறும் வரை நாட்டை கட்டியெழுப்ப முடியாது

## *சீன தூதுவரை சந்தித்த பின் மைத்திரி கருத்து*

**கொழும்பு, ஜூன் 12**

**நாட்டில் தற்போதைய அரசாங்கம் மாறும் வரை நாட்டை கட்டியெழுப்ப முடியாது எனவும் வெளிநாடுகளின் உதவிகளை பெறவேண்டுமாயின் குறிப்பிட்ட காலத்துக்கு சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைத்து, உடனடியாக பொதுத் தேர்தலை நடத்தி புதிய அரசாங்கத்தை தெரிவு செய்யவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



சீனத் தூதுவர் சென் ஹொங்க் உடன் பொலனறுவையில் நடைபெற்ற பேச்சின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

சீனத் தூதுவர் பொலனறுவை புதிய நகரில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் வீட்டுக்குச் சென்று அவரை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன-

எதிர்காலத்தில் நாட்டில் பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளது. அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் என்ன கூறினாலும் நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டு வருகிறது.

நாட்டின் உணவு உற்பத்தி சகல விதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளது. உரம், எரிபொருள், கிருமி நாசினி என்பன இல்லை. இந்த நிலைமையில், நெல் பயிர் செய்கை மாத்திரமல்ல, காய்கறி, பழங்கள், தேயிலை, தனியங்கள், சோளம் என அனைத்து உணவு உற்பத்திகளும் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

இப்படி அரசாங்கத்தை அமைத்துக்கொண்டு நெருக்கடியில் இருந்து மீள முடியாது. இதற்காகவே நாங்கள் சர்வக் கட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு தொடர்ந்தும் கூறி வருகின்றோம்.

நான் இதனை அண்மையிலும் பாராளுமன்றத்தில் வலியுறுத்தினேன். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் இணைந்து, குறுகிய காலத்திற்கு அரசாங்கம் ஒன்றை அமைத்து, பின்னர் பொதுத் தேர்தலை நடத்தவேண்டும்.

அப்போது பல உலக நாடுகள் எமக்கு உதவும். நாங்கள் பல ராஜதந்திரப் பிரிவுகளுடன் பேச்சு நடத்தியுள்ளோம். சர்வதேச நிறுவனங்களுடன் நான் தனிப்பட்ட ரீதியில் பேச்சு நடத்தியுள்ளேன்.

சர்வ கட்சி அரசாங்கத்தை அமைத்து, தேர்தல் தினத்தை தீர்மானத்தால், பல நாடுகள் இதனை விட அதிகளவில் உதவும் என அவர்கள் கூறுகின்றனர்.

நாட்டில் தற்போதுள்ள பிரதான பிரச்னை பட்டினி, உணவு நெருக்கடிக்கு தீர்வு காண்பது. அதேவேளை 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தை கொண்டு வந்து, பாராளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்தினால், உலக நாடுகள் உதவ முன்வரும்.

ஒருவருக்கு அல்லது ஒரு குடும்பத்துக்கு அதிகாரம் செல்வதை விட பாராளுமன்ற ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டால், உலக நாடுகளை அதனை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் - என்றார்.

(அ)

# மிகப்பெரும் செல்வந்தர் தம்மிக்க பெரேரா சொத்துக்களை பிரகடனப்படுத்தவேண்டும்!

## *கீர்த்தி தென்னக்கோன் கோரிக்கை*

கொழும்பு, ஜூன். 12

தொழிலதிபர் தம்மிக்க பெரேராவின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருக்கான மனுவை, அவர், தமது சொத்துக்களை பிரகடனம் செய்யும் வரையில் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவிடம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையின் மிகப் பெரிய பணக்காரர் என்று சிலரால் நம்பப்படும் தம்மிக்க பெரேராவின் முதலீடுகளில் சூதாட்ட விடுதிகள், வங்கிகள், விருந்தகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமனம் செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், தமது சொத்துப் பிரகடனங்களைச் சமர்ப்பித்த பின்னரே அவர்களது பாராளுமன்ற இடங்களைப் பெற்றனர் என்பதை மனித உரிமைகள் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# தொழில் உபகரணங்கள் வவுனியாவில் வழங்கல்



வவுனியா, ஜூன். 12

பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களுக்கான உதவிப்பொருட்கள் நேற்று வழங்கப்பட்டன.

குறிப்பாக விவசாய உபகரணங்கள், மீன்பிடிவலைகள், மற்றும் சைக்கிள்கள் உட்பட 6 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவித்திட்டங்கள் 173 பேருக்கு வழங்கப்பட்டன.

வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவிதிட்டமிடல் பணிப்பாளர், பயனாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)



1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : வீக் என்ட் மூவி-குஷி
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்




6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்




**இரவு**

07.00 மணி : SPOTLIGHT- வி.மணிவண்ணன் -
யாழ் மாநகர முதல்வர்



08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : டான் பட்டிமன்றம்
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை



DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

சிவி

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு